விலை : 20.00
ரூபாய்கள் : இருபது



நூலகம் ...
... பிரிவு
... சபை, யாழ்ப்பாணம்.



Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

Website : www.valampurii.lk
Email: valampurii@yahoo.com

ஓங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 18 புதன்கிழமை (01.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 133



ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து


# அரசுக்கு எதிரானோர் மீது அடக்குமுறை பிரயோகம்!

## சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராக கருத்துக்களை வெளியிடுவோர் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் மாற்றுக் கருத்துக்கள் மீதான தாக்குதல் என்ற தலைப்பில் சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஷிராணிக்கு அழைப்பாணை

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன், மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித்த ஹேரத் ஆகியோரை மே மாதம் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உயர் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

சட்டமா அதிபரானால் தாக்கல் செய்யப்பட்ட விசேட மேன்முறையீட்டு மனுவை விசாரிப்பதற்கு நேற்று செவ்வாய்க்கிழமை அனுமதியளித்தன் பின்னரே உயர் நீதிமன்றம் மேற்கண்டவாறு அழைப்பாணை அனுப்பி வைத்துள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசரை குற்றவாளியாக இனங்கண்ட நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கையை ரத்துச்செய்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட ஆணைகோரும் கட்டளையை வலுவற்றதாக்குமாறே சட்டமா (20ஆம் பக்கம் பார்க்க)

## ...ழக்குத் தாக்கல் செய்ய ...லிகாமம் மக்கள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

...கொமம் பகுதியில் இராணுவத் ...வக்காக தமிழர்களின் காணி ...வீகரிக்கப்பட்டதை எதிர்த்து ...நீதிமன்றம் உட்பட நாட்டிலு ...ஏனைய நீதிமன்றங்களில் ...த் தாக்கல் செய்ய அப்பகுதி ... முனைப்பு காட்டிவருவ... நேற்று மட்டும் சுமார் ஆயி...கும் மேற்பட்டவர்கள் பதிவினை ...கொள்வதற்காக வருகை தந்...தனர்.

...லி.வடக்கு பிரதேச சபை மாநா...மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை இந்த பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்ட தமது காணிகளை எப்படியாவது மீட்டெடுக்க வேண்டும் என்பதற்காக மக்கள் தமது காணிகளுக்கான உறுதிகளுடன் வருகை தந்ததோடு முண்டியடித்துக் கொண்டு பதிவுகளை (20ஆம் பக்கம் பார்க்க)


## பொதுநலவாய மாநாட்டுக்கு முன் லண்டனில் விசேட கூட்டம்!

### கமலேஷ் சர்மா ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையின்நல்லிணக்கமுயற்சிகள் மற்றும் மனிதவுரிமைகள் விவகாரங்கள் தொடர்பில் பொதுநலவாய அரசியல் தலைவர்கள் உச்சி மாநாட்டுக்கு முன்னதாக லண்டனில் மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

லண்டனில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பொதுநலவாய அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தில் இலங்கை விவகாரம் குறித்து ஆராயப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆயினும் பொதுநலவாய (20ஆம் பக்கம் பார்க்க)



## ...ழாவடி பகுதியில் உள்ள காணியை ...வீகரிக்க அறிவித்தல் ஒட்டப்பட்டது

...ழ்.மானிப்பாய் ஆனைக்கோட்டைப் ...தியிலுள்ள ஒரு ஏக்கருக்கும் அதிகமான ...ணி இராணுவத் தேவைகளுக்காக சுவீகரிக்...படுவதற்கான அறிவுறுத்தல்கள் ஒட்டப்...ள்ளன.

...யாழ். மாவட்டச் செயலகத்தில் உள்ள காணி ...றும் காணி அபிவிருத்தி அமைச்சின் ...லுவலகத்தின் காணி சுவீகரிப்பு அதிகாரி ...சிவசுவாமியின் கையொப்பம் இடப்பட்ட ...றிவுறுத்தல்களே ஆனைக்கோட்டை கூழா...ப் பகுதியில் உள்ள உப தபாலகத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

கடந்த 1995ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தம் காரணமாக யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் இடம்பெயர்ந்து வன்னிப் பகுதிகளுக்குச் சென்றிருந்தனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்ட இராணுவத்தினர் யாழில் மக்களுடைய பல வீடுகளை கையகப்படுத்தி முகாமிட்டிருந்தனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாடுகளின் தலையீடு எதிர்விளைவை ஏற்படுத்தும்

### அமைச்சர் பீரிஸ் காட்டம்



(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடுவது எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் இடம்பெற்ற சமூக இணக்கப்பாடும், தேசியக் கொள்கையும் எனும் கருப்பொருளிலான கருத்தமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ...நில அபகரிப்புக்கு எதிரான ...ஒன்றுகூடல் நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

...தமிழர் நில அபகரிப்புக்கு எதிராகவும் வாழ்...மைப் போராட்டத்திற்காகவும் அணிதிரள்...ற்கான ஒன்றுகூடல் நிகழ்ச்சி நாளை பிற்...ல் 3 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதி இளம் ...லஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

...மிழத் தேசியக் கூட்டமைப்பு நாடாளு...ற உறுப்பினர்கள், பிரதேசசபை, நகர...பைகளின் (19ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற அங்கத்துவம் கொண்ட கட்சிகளின் மே தின கூட்டம் யாழில் இல்லை!

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற அங்கத்துவம் கொண்ட கட்சிகளின் மே தினக் கூட்டம் இம்முறை யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை.

கடந்த வருடம் நாட்டின் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பல எதிர்க் கட்சிகள் இணைந்து எழுச்சியாக மே தினத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தியிருந்தன.

ஆனால் இம்முறை அதற்கான ஏற்பாடுகள் எதனையும் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ செய்யவில்லை.

அத்தோடு ஈழமக்கள் ஜனநாயக கட்சியும் இம்முறை யாழ்ப்பாணத்தில் மே தினக் கூட்டத்தை நடத்தவில்லை.


இருப்பினும் பாராளுமன்ற அங்கத்துவம் இல்லாத கட்சிகளான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியன இணைந்து கரவெட்டியில் மே தினக் கூட்டத்தை எழுச்சியாக நடத்துகின்றன.

இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் இந்த மே தினக் (19ஆம் பக்கம் பார்க்க)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உழைக்கும் மக்களின் குரலாக எமது குரல் தொடர்ந்தும் ஒலிக்கும்

## மே தினச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ்

அழிவுகளுக்கு பிந்திய எமது மண்ணில் அமைதி நிலை வலுப்பெற்றுவரும் நிலையில் உழைக்கும் மக்களின் உன்னத தினத்தில் அம் மக்களின் ஒளிமயமான எதிர்கால நலன்காக்க தொடர்ந்தும் நாம் உறுதியுடன் உழைப்போம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும்,பாரம்பரியகைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மே தினத்தையொட்டி விடுத்திருக்கும் செய்தியில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

உழைக்கும் எமது மக்களை ஒதுக்கிவிடாமல், தொடர்ந்தும் அவர்களுடன்இருந்து, அம்மக்களது நலன்களுக்காக நாம் உழைத்துக் கொண்டிருக்கிறோம்.

உழைக்கும் மக்கள் இருக்கும்வரைதான் இந்த உலகம் சுழன்று கொண்டிருக்கிறது. அம் மக்களது குரலாகவே எமது குரலும் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருப்பது மாத்திரமல்லாது, உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் மேலும் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் நாம் வெற்றி கண்டு வருகிறோம்.

கடந்த கால அழிவு யுத்தமானது எமது உழைக்கும் மக்களுக்கும் பாரிய பாதிப்புக்களையும் அழிவுகளையும் கொண்டு வந்திருந்தது. ஆனால்,இன்று அந்நிலை மாற்றப்பட்டு ஓர் அமைதிச் சூழல் வளர்ச்சி பெற்று வருகின்றது.வளரும் இந்த அமைதிச் சூழலை பாதுகாப்புடன் எமது உரிமைகளையும் பெற்றவாறு அதனை வளர்த்தெடுப்பதே எமது நோக்கமாக அமைய வேண்டும்.

அதனை விடுத்து வெறுமனே உரிமை, உரிமை என கோஷங்களை மட்டும் வீராவேசமாக எழுப்பி,எமது மக்களின் உணர்வுகளைத் தூண்டி அதன்மூலம் சுயஅரசியல் இலாபம் தேடமுயன்று வரும் சமூக விரோதச் சக்திகளுக்கு எடுபட்டு,இருப்பதையும் இழந்து, பெற வேண்டியவற்றையும் இழந்து ,எமது மக்கள் மீண்டும் கடந்த கால பின்னடைவுக்குள் விழுந்து விடக் கூடாது.

எனவே கிடைக்கும் சந்தர்ப்பங்களை நாம் சரிவரப் பயன்படுத்தி, கிடைத்தவற்றை பாதுகாத்து, கிடைக்க வேண்டிய அனைத்தையும் பெற்றுக்கொள்ள ஓரணி திரண்டு உழைக்க முன்வருமாறு இன்றைய உழைப்பாளர் தினத்தில் எமது மக்களுக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

முயற்சித்தால் இயலாதது எதுவுமில்லை, அந்த முயற்சி நடைமுறைச் சாத்தியமாக முன்னெடுக்கப்படும் பட்சத்தில் எமது உரிமைகள் அனைத்தும் தாமாக வெல்லப்படும் என்பது உறுதி!

குருதி தோய்ந்த இவ் வரலாற்று நாளில், பரிதி துடைத் தெழுவோம் வாரீர்! வெறும் வாய் வார்த்தைகளால் அன்றி! சிறந்த செயற்பாடுகளின் மூலம்!

இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

---

## அடகுப் பொருட்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி,யாழ்ப்பாணம்,ஸ்ரான்லி வீதிக்கிளை, சுன்னாகம்,மானிப்பாய்,திருநெல்வேலி,சங்கானை ,நெல்லியடி, பருத்தித்துறை,சாவகச்சேரி, கைதடி,வேலணை,கிளிநொச்சி தெற்கு ஆகிய கிளைகளில் 31.01.2012 இற்கு முன்னர் அடகு வைத்து இது வரை மீட்கப்படாத,காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுநகைகள் 04.5.2013,05.05.2013 ஆகிய திகதிகளில் காலை 9.00- மாலை 6.00 மணி வரை இல. 76.78 K.K.S வீதியில் அமைந்துள்ள எமது சுன்னாகக் கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

- கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா. 500) செலுத்தி

அல்லது

- தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

*ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.*

(சி-3161) - ஹற்றன் நஷனல் வங்கி

---

## காசி யாத்திரை பக்தி உலா


குறைந்த செலவில் ஆன்மீகவாதி ஒருவரினால் வட இந்திய புண்ணிய யாத்திரை காசி, கேதார், பத்திரி, கரித்துவார் ரிஷிகேஸ் இன்னும் பல இடங்களுக்கு இரு குழுக்களாக அழைத்துச் செல்லப்படவுள்ளார்கள்

குழு ஒன்று மே 20 ஆம் திகதியும், குழு இரண்டு யூன் 16 ஆம் திகதியும் புறப்படவுள்ளது. யாத்திரை மேற்கொள்ள விரும்புவர்கள் உடன் தொடர்புகொள்ளலாம்.

**தொடர்பு: 0770833339, 0755133779**

---

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்
உயர்திரு திரு.தி.இராசநாயகம் ஐயாவிற்கு அன்பின்
67 ஆவது பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்

*16 வருடங்கள் கிளிநொச்சி அரசாங்க அதிபராகக் கடமையாற்றியதுடன் வடமாகாணப் பிரதிப் பிரதம செயலாளராகவும் கடமை புரிந்து ஓய்வு பெற்றதன் பின்பும் அன்றும் இன்றும் இம் மாவட்டத்தில் இயங்கும் D/7 குருகுலம் சிறுவர் இல்லம், மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம். புது முறிப்பு சிறுவர் இல்லம், காந்தி சேவா சங்க சிறுவர் இல்லங்களின் கௌரவ தலைவராக இருந்து தளராத வயதிலும் 16 வயது மார்க்கண்டேயனைப் போல் கடந்த கால துன்பங்களின் போது பாதிக்கப்பட்ட சிறுவர்கட்கு மாத்திரமல்ல முதியோர்களுக்கும் சேவையாற்றிக் கொண்டிருக்கும் பூநகரி ஈன்றெடுத்த மண்ணின் மைந்தன் திரு. தி.இராசநாயகம் அவர்களின் 67 ஆவது நாளான மேமுதலாம் திகதியாகிய இன்று என்றும் நலமே வாழ இறைவனை பிரார்த்தித்து நன்றிகளுடன் விடைபெறும்*

**எஸ்.எஸ்.சின்னத்தம்பி**

750, பொதுச் சந்தை, புளியம்பொக்கணை, ஓய்வுநிலை சுற்றாடல் வட்டக்கச்சி கிராமசேவை அலுவலகரும் சமாதான நீதிவானும்.

*750, ப.வா.திட்டம், பொதுச் சந்தை சுற்றுவட்டம், வட்டக்கச்சி.*

---

# மரண அறிவித்தல்

## திருமதி மயில்வாகனம் முத்துப்பிள்ளை



மயிலிட்டி முத்துவிளானை பிறப்பிடமாகவும் கோப்பாய் நீதவான் வளவை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கமுத்து மயில்வாகனம் முத்துப்பிள்ளை அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (28.04. 2013) காலமானார். அன்னார் காலஞ்சென்ற மாணிக்கமுத்து மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், முத்து மயில்வாகனம் இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் செல்லத்தின் பாசமிகு சகோதரியும் முத்துமயில்வாகனம், மகேஸ்வரன், இரத்தினமயில்வாகனம், Dr. மனோகரன் ஆகியோரின் அன்புத்தாயும் அம்பிகை,உதயகுமாரி,இந்திராணி,அகிலினி ஆகி யோரின் மாமியாரும் மகிந்தன், அபிராமி, விதுனன், வாகிசன், சாருஷா,மதுரா, ஆதித்தன், மகிஷா, மித்திரன், மயூரி, தர்ஷனா ஆகி யோரின் பாசமிகு பேர்த்தியும் Dr.கமலாம்பிகை, திருப்பரங்கிரிநாதன், விமலாதேவி, சரோஜாதேவி, நந்தகுமார், ஜெயதரன், ரவிச்சந்திரன் ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 01.5.2013 (புதன்கிழமை) காலை 07.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00மணியளவில் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் நீதவான் வளவு
கோப்பாய். (2503)

தகவல்
M.மகேஸ்வரன் (இராசா)

---

# வாழ்க வளமுடன்

**அல்வாய் வடக்கு நக்கீரன் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தினரால் இன்று விழா எடுத்துக் கௌரவிக்கப்படும்**



"சேவைச்செம்மல்"
உயர்திரு.கி.கணேசன் அவர்களை
(ஓய்வு நிலை அதிபர், சமாதான நீதவான்)
நாமும் வாழ்த்துவதில் பேருவகையடைகின்றோம்.

*"உன் சேவை சேராத நிறுவனங்களில்லை*
*நீ அலங்கரிக்காத பதவிகளுமில்லை*
*நீ பங்குபற்றாத நிகழ்வுகளுமில்லை*
*உன் பணியில் தன்னலமுமில்லை – ஆகவே*
*உன் பெருமைக்கு ஒரு போதும் ஒரு குறைவுமில்லை."*

*வாழ்த்துவோர்:-*

*பி.கிருஷ்ணானந்தன்* (முகாமையாளர்,மக்கள் வங்கி,பருத்தித்துறை.)
*இ.சந்திரசேகரன்* (பொது முகாமையாளர்,புலோலி பல நோ.கூ.சங்கம்.)
*வ.சர்வேஸ்வரன்* (கணக்காளர்,புலோலி பல நோ.கூ.சங்கம்.) (சி-3160)

---

# 35 வருட குருத்துவப்பணி பாராட்டு - 01.05.2013



அச்சுவேலி இடைக்காடு வளலாய் பிரதம குரு வேதாகம ஞான பானு சிவாகம கலாநிதி தமிழமுதக் குருமணி

**சிவஸ்ரீ.கந்த. ஜெயராமக்குருக்கள்**

அவர்களது 35 வருட குருத்துவப் பணியையும் 3 ஆவது தடவையாக வளலாய் சித்திவிநாய கனின் மகா கும்பாபிஷேக நிகழ்வின் பங்கு பற்றுதலையும் பாராட்டி பெருவிழாவியே அவரு டைய வேத ஆகம சித்தாந்த வடமொழி, செம்மொழி அறிவு, ஆன்மீகப்பணி, சமூகப் பணி என்பவற்றை பாராட்டி "உபன்யாச ரத்னம்" எனும் கௌரவப்பட்டம் சிவஸ்ரீ. நா. சோமாஸ் கந்தக் குருக்கள் (MIH) (கனடா) , அறங்காவல் சபையினரால் வழங்கப்பட்டமையை பாராட்டி வாழ்த்தி வணங்குகிறோம். மண்டலாபிசேக பூர்த்தி நாளிலே ஜெயராமக்குருக்கள் அவர்களது குருவருளாசி எல்லோருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

குருவருளை நாடும்
வளலாய்! அன்பன்.

(2500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இல்லறத்துறவி

"இல்லற வாழ்க்கை பிடிக்கவில்லை சேர்! பேசாமல் துறவி வேடம் பூண்டுகொள்ளலாம்" என்று ஒருவர் கூறினார்.

"அப்படியே செய்யவேண்டியதுதானே" என்றார்.

"அதுதான் பார்க்கிறேன்... ஆனால், மனைவி, பிள்ளைகள் விடமாட்டோம் என்று சொல்கிறார்கள். அதுதான் இடைஞ்சலாக இருக்கிறது" என்றார்.

"துறவு வேடம் என்றால் ஒரு காவி வேட்டியை எடுத்துக் கட்டிக்கொண்டு, தாடியை நீளமாக வளர்த்துக் கொண்டு காடு எங்கேயிருக்கிறது?" என்று தேடிக் கொண்டு போய் ஒரு நல்ல இடமாக உட்கார்ந்து கொள்வதென்று பலபேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது மிகவும் பிழையான கருத்தாகும்.

துறவியாகப் போவது என்பது ஒரேயடியாக சாமியாராக மாறுவது இல்லை.

இல்லறத்திலே இருந்து கொண்டு கூட துறவியாக இருக்கமுடியும். எப்படி முடியும் என்று நிரூபித்துக் காட்ட அந்தக் காலத்தில் ஒருவர் இருந்தார். அவர்தான் சீதையினுடைய தந்தையான ஜனகர் .

மிதிலா நகரிலிருந்த பல முனிவர்கள் இதை நம்பவில்லை. ஜனகர் மேலே அவர்களுக்கெல்லாம் சந்தேகம்.

"அது எப்படி? இவர் இராஜபோகங்களுக்கு மத்தியிலே சுகமாக இருக்கிறவர், எப்படி துறவியாக இருக்கமுடியும்?" என்று அவர்களுக்குள் ஒரு முணுமுணுப்பு.

இச்சந்தேகக் கேள்வி ஜனகர் காதிலே எப்படியோ விழுந்து விட்டது.

இந்த முனிவர்களுக்கு "துறவு" என்றால் எப்படி என்பதைப் புரிய வைக்கவேண்டும் என்று முடிவு செய்தார்.

மறுநாளே அரண்மனையில் இருந்து ஒரு நபர் இந்த முனிவர்களைத் தேடிப் போனார்.

"நாளை மதியம் இந்த ராஜா உங்கள் எல்லோருக்கும் ஒரு விருந்து வைக்கப்போகிறார். நீங்கள் அதிலே கலந்து கொள்ளவேண்டும்" என்றார்.

அந்த முனிவர்கள் நல்ல சாப்பாட்டைக் கண்ணாலே பார்த்தே நீண்ட நாளாகி விட்டது. அப்படி இருக்கும் போது அரண்மனை விருந்து என்றால் வேண்டாம் என்று சொல்வார்களா?

அடுத்த நாள் குறிப்பிட்ட நேரத்திலே அனைவரும் அரண்மனை விருந்து மண்டபத்திலே ஆஜர்; 50 முனிவர்களுக்கு 50 இலை போட்டு பல விதமான சாப்பாடுகள் பரிமாறவிருந்தார்கள்.

ஆனால், ஒவ்வொரு இலைக்கும் மேலே ஒரு நீளமான தலைமுடி தொங்கவிடப்பட்டிருந்தது.

அது எப்போது சாப்பாட்டிலே விழுமோ என்ற ஏக்கத்திலே முனிவர்கள் சாப்பிட்டார்கள்.

அனைவரும் சாப்பிட்டு முடிந்த பின்னர் ஜனகர் அங்கு வந்தார். முனிவர்களுக்கு நமஸ்காரம் செய்தார்.

சாப்பாடு தொடர்பாக விசாரித்தார். இதற்கு யாரும் பதில் சொல்லவில்லை.

மீண்டும் காட்டமாகக் கேட்டார்.

உடனே முனிவர்கள் வாய்திறக்க ஆரம்பித்தார்கள்.

"எப்படி சொல்ல முடியும்?" எங்கள் நினைவு பூராகவும் சாப்பாட்டில் அல்ல; தலைமுடி எப்போது சாப்பாட்டில் விழும் என்பதாகவே இருந்தது...

இப்போது ஜனகர் சொன்னார்; "அதேமாதிரித்தான் நானும் உள்ளேன். பிரமத்ளைதயே நினைத்துக் கொண்டிருக்கின்ற எனக்கு இந்த இராஜபோகங்கள் சுகமா, இல்லையாவென்று கேட்டால் சொல்லத் தெரியுமா? என்றார்.

முனிவர்களுக்கு அதன்பின்தான் ஒரு தெளிவு ஏற்பட்டது. ஒருவர் எங்கே இருந்தால் என்ன? எதை நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பது தான் முக்கியம்.

இல்லறத்திலே இருந்து கொண்டு பிரமத்தை நினைப்பவர்களும் உண்டு. துறவறத்திலே இருந்து கொண்டு இல்லத்தை நினைப்பவர்களும் இருக்கிறார்கள். நினைவு தான் முக்கியம்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# சர்வதேச கடலில் மீன்பிடிப்பதற்கு எதிராக கடுமையான தண்டனை

## சட்டங்கள் திருத்தப்படும் என்கிறார் அமைச்சர் ராஜித

(கொழும்பு)

இலங்கை கடற்றொழிலாளர்களால் மேற்கொள்ளப்படுவதாக கூறப்படும் சட்டவிரோதமான கட்டுப்பாடில்லாத மீன்பிடித்தல் காரணமாக இலங்கையின் மீன் ஏற்றுமதிக்கு எதிரான தடைகளை விதிப்பது தொடர்பாக ஐரோப்பிய நாடாளுமன்றம் எதிர்வரும் ஜூன் மாதம் 26 ஆம் திகதி தீர்மானிக்கவுள்ளது என அதிகா ரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இப் பிரச்சினைகள் தொடர்பாக பல சிறந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதனால் மீன்பிடி அமைச்சும் சிறந்த முடிவை எதிர்பார்த்துள்ளது என மீன்பிடித் துறை அமைச்சு அறிவித்துள்ளது.

சட்டவிரோதமான கட்டுப்பாடில்லாத வகையில் மீன்பிடித்தல் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் கடந்த வருடம் இலங்கைக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுத்ததன் பின்னர் இவற்றைக் கட்டுப்படுத்த பல நடவடிக்கைகளை எடுத்ததாக மீன்பிடித் தொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மீன்பிடிப்பதற்காகசர்வதேசகடலில் சட்டவிரோதமாக நுழையும் 11 இலங்கை படகுகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் முறையிட்டுள்ளதாகவும் சர்வதேசகடலில்மீன்பிடித்தலுக்குகடுமையானதண்டனைவழங்கும் வகையில் சட்டங்கள் திருத்தப்படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோதமானகட்டுப்பாடில்லாது களவாக மீன்பிடித்தல், மீன் வளத்தை அருகச்செய்கின்றது. கடல் வாழ்உயிரினங்களின்வாழ்விடத்தை அழிக்கின்றது. போட்டித் தன்மையை திரிபுபடுத்துகின்றது. அத்துடன் குறிப்பாக அபிவிருத்தியடைந் துவரும் நாடுகளிலுள்ள கரையோர சமூகங்களின் வாழ்வாதாரத்தை பலவீனப்படுத்துகின்றது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சட்டவிரோத மீன்பிடி இலாபமடைய காரணமாகவுள்ள சட்டத்தின் குறைபாடுகளைநீக்கஐரோப்பிய ஒன்றியம் கடுமையாக உழைக்கின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை 22 பில்லியன் பெறுமதியான மீன் உற்பத்திகளை ஆண்டுதோறும் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையிலிருந்து கொள்வனவு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# யாழ்ப்பாண வாழ்வியல் நூல் வெளியீட்டு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினரின் யாழ்ப்பாணம் வாழ்வியல் என்னும் நூல் வெளியீட்டு விழா கைலாசபதி கலையரங்கில் வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தலைமையில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பல்கலைகழத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், கௌரவ விருந்தினராக எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் வட பிராந்திய பொது முகாமையாளர் க.கந்தசாமி ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 40 | 80 | 80 |
| தக்காளி | 60 | 50 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 50 | 60 |
| கோவா | 60 | 50 | 60 | 80 |
| கரட் | 120 | 70 | 120 | 120 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 60 | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 30 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 140 | 100-120 | 120-180 | 140-200 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 90 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 80 | -- |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 40 | 80 | 60 |
| கறிமிளகாய் | 80 | 30-60 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 600 | 400 |
| போஞ்சி | 80 | 90 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 70 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 50 | 45-50 |
| இராசவள்ளி | 100 | 90 | 100 | 100 |

# இராசி பலன்

01.05.2013
(சித்திரை 18, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
சஷ்டி பிற்பகல் 12.32 மணிவரை
பூராடம் முற்பகல் 8.30 மணிவரை
இராகுகாலம் 11.57-1.27 மணிவரை
சுபநேரம் 4.27-5.57 மணிவரை
சர்வதேச தொழிலாளர் தினம்

**மேடம்** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஏற்பட்ட பிணக்குகள் அகலும், வருமானம் திருப்தி தரும், புதிய திட்டங்கள் கைகூடும்.

**இடபம்** குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், சிரித்துப் பேசும் நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம், பேச்சில் நிதானம் தேவை.

**மிதுனம்** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பழைய சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை கூடும், வாழ்க்கைத் துணை வழியே வரவுகள் வந்து சேரலாம், அபூர்வ சந்திப்புண்டு.

**கடகம்** உறவினர் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுவாரஸ்யமான நாள், பகைவர்கள் விலகுவர், ஆரோக்கியமான நாள்.

**சிங்கம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, காரிய இடையூறுகள் ஏற்படலாம், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் மேலோங்கும்.,

**கன்னி** சொன்ன சொல்லைக் காப்பாற்ற கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பயந்த சுபாவமுண்டு, உடல்நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், பொதுநல ஈடுபாடு கூடும்.

**துலாம்** உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், ஆரோக்கியமான நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்** நல்ல காரியத்துக்கு பிள்ளையார் சுழி போடும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நண்பர்கள் பக்கபலமாக இருப்பர், பொருளாதார நிலை திருப்தி தரும்.

**தனுசு** சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், எதிர்பாராத காரியமொன்று இன்று நடைபெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன நன்மையுண்டு.

**மகரம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பயணங்களால் மன உளைச்சல்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**கும்பம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், எதிர்பார்த்த பண வரவுகள் வந்து சேரலாம், நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள்.

**மீனம்** தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபாதை வியாபாரத்தால் போக்குவரத்து நெரிசல்


(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைக்கும் மத்திய பேருந்து நிலையத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் நடைபாதை வியாபாரம் செய்வோர் மற்றும் பழக்கடை வியாபாரத்தில் ஈடுபடுவோரால் பெரும் போக்குவரத்து நெருக்கடி காணப்படுவதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முன்னர் நடைபாதை வியாபாரம் செய்வோரை யாழ். மாநகரசபை அகற்றியும் மீண்டும் நடைபாதை வியாபாரக்கடைகள் பெருகிக் கொண்டே செல்கின்றன. தினமும் வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளிகள் நோயாளர்களை பார்வையிடச் செல்வோர் மற்றும் ஏனைய பயணிகள் இந் நெருக்கடியை சந்திப்பதால் விபத்துக்கள் ஏற்படக் கூடிய நிலைகாணப்படுகின்றது.

எனவே இத்துறை சார்ந்த அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு நாளுக்கு நாள் பெருகிச் செல்லும் நடைபாதை வியாபாரக் கடைகளை அகற்றி போக்குவரத்திற்கு உதவ முன்வர வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-17)



நன்றி: ஐலண்ட்

## விளக்கு வைத்தல் பூசை

தும்பளை அருள்மிகு நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் ஆலய விளக்கு வைத்தல் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலைப்பூசையுடன் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து விசேட வழிபாடுகள் நடைபெற்று எதிர்வரும் மே 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசேட பொங்கல் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (அ-3-19)

## திருநாவுக்கரசர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தினால் நடத்தப்படும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை எதிர்வரும் மே 4 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய மண்டபத்தில் ஏ.வி.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்குருபூசையின் சிறப்புரையை மானிப்பாய் இந்துக்கல்லூரியின் ஓய்வுபெற்ற உப அதிபர் வே. தம்பாப்பிள்ளை வழங்கவுள்ளார்.

மேற்படி நிகழ்வுக்கு அனைவரையும் சமுகமளிக்குமாறு ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச்சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (அ-5)

★ ★ ★ ★ ★ ★ ★

சதாவதானி கதிரைவேற்பிள்ளை அறநெறிப் பாடசாலையின் ஆதரவில் தம்பசிட்டி மகாவேலன் தணி சிவன் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை முதல் சனிக்கிழமை வரை திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் (4,5,6 ஆம் திருமுறைகள்) முற்றோதல் இடம்பெறும்.

நாயனாரின் குருபூசைத்தினமான எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை தேவார முற்றோதல் நிறைவும் குருபூசைத் தினவிழாவும் இடம்பெறும் எனப் பொறுப்பாசிரியர் பொ.இரத்தினசோதி அறிவித்துள்ளார். (அ)

# விஷமிகளால் குப்பைகள் கொட்டப்படுகின்றன



(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் பின் பக்க வாயிலின் முன்னால் விஷமிகள் சிலர் வீட்டு கழிவுகளைக் கொட்டிவருவதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது.

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் பின்புற வாயிலுள்ள இந்து ஆரம்பப்பாடசாலை மைதான வீதியிலேயே இவ்வாறு குப்பைகள் கொட்டப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இனம் தெரியாத சிலர் அதிகாலை மற்றும் இரவு வேளைகளில் பொலித்தீன் பைகளில் கழிவுகளை கட்டிக்கொண்டு வந்து அவ்வீதியின் கரையோரத்தில் எறிந்து விட்டுச் செல்கின்றனர்.

இவற்றை அங்கு உலாவும் நாய்கள் சின்னாபின்னமாக்கி விடுவதனால் துர்நாற்றமும் வீசுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இதற்கு மிக அருகிலுள்ள வடிகாலொன்றும் குப்பைகளினால் நிரம்பிக்காணப்படுகின்றது என பெற்றோர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை சிறார்கள் தினமும் பயன் படுத்தும் இவ்வீதி சுகாதார சீர்கேட்டுடன் காணப்படுவதால் சிறுவர்களுக்கு உடல் நலக்குறைவு ஏற்படாலாம்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென பெற்றோர்கள் கோரிக்கை விடுகின்றனர். (அ-4)

# உலக தொழிலாளர் தினத்தில் பொலிஸார் ரோந்துப் பணியில்

உலகத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் பொலிஸாரின் ரோந்து பணிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

உலகத் தொழிலாளர் தினம் பல்வேறு நாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டு வருவதோடு இலங்கையிலும் குறிப்பாக வடக்கிலும் தெற்கிலும் பெரும் எடுப்பில் இவ் உலகத் தொழிலாளர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சென்ற வருட உலகத் தொழிலாளர் தினத்தை யாழ். மாவட்டத்தில் பல் வேறு கட்சிகளும் அமைப்புக்களும் கொண்டாடுவதில் பெரும் அக்கறை எடுத் திருந்தன.

எனினும் இவ்வருட மேதினத்தினை விமரிசையாக கொண்டாடுவதை பெரும்பாலான கட்சிகளும் அமைப்புக்களும் தவிர்த்துள்ளன.

ஒரு சில கட்சிகளினால் யாழில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேதின ஊர்வல நிகழ்வுகளுக்கே போக்குவரத்து பொலிஸாரின் சேவை அவசியம். ஆகையால் சென்ற வருட மே தினத்தில் வழங்கப்பட்ட பொலிஸ் ரோந்து பணிகளை விட இம்முறை மிகக் குறைவான பொலிஸாரே கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அசம்பாவிதங்கள் ஏதும் இத் தினத்தில் ஏற்பட்டால் பாதுகாப்பில் ஈடுபடுத்துவதற்கு பொலிஸாரின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும் எனவும் தெரிவித்தார். (அ-4)

## பழைய மாணவர் சங்க நிர்வாகிகள் தெரிவு

(மல்லாகம்)

யா/ தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்படி பழைய மாணவர் சங்கத் தலைவராக வலி.வடக்கு பிரதேச சபைத்தவிசாள சோ.சுகிர்தன், செயலாளராக வீமன்காமம் மகா வித்தியாலய அதிபர் சோ.ராமநாதன், பொருளாளராக ரெஜினோல்ட், உபதலைவராக யுவராஜ், உப பொருளாளராக கி.டினேஸ் குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிர்வாக உறுப்பினர்களாக செந்தூரன், திருமதி நா.இரத்தினபூபதி, பி.பாலேந்திரா, சாந்தசீலன் குகதாசன், க.கஜேந்திரன் ஆகியோர் தெரிவாகினர். (அ-5)

## இருக்கைகள் அமைத்து தரப்படவேண்டும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் கீழ் இயங்கு கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் கட்டப்பட்டுள்ள மண்டபத்திற்கு இருக்கைகள் அமைத்துத் தருமாறு மக்கள் விநயமாக கேட்டுள்ளனர்.

இம்மயானத்தில் இறுதிக்கிரியைக்கு வருபவர்கள் இளைப்பாறுவதற்கு என அமைக்கப்பட்டுள்ள இம்மண்டபத்தில் அமர்வதற்கு இருக்கைகள் அமைக்கப்படவில்லை. அவற்றை அமைத்துத்தரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மேலும் இவ் இந்துமயானம் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருவதில் மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

எனவே, இது சம்பந்தப்பட்ட தரப்பினர் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இருக்கைகளை அமைத்துக் கொடுக்கும்படி மக்கள் கோரியுள்ளனர். (அ-3-29)



உலக புத்தக தினத்தை முன்னிட்டு யாழ்.மாநகரசபை பொதுசன நூலகத்தினால் நடத்தப்பட்ட நூலகர் எச்.சாள்ஸின் **தகவலை நோக்கிய வலையின் வீசல்கள்...** என்னும் நூல் வெளியீடு நேற்றுக்காலை யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் நூல் வெளியீடு இடம்பெறுவதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தில்லை நடேசன் யோகேஸ்வரி



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, கொழும்பு, தெகிவளை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தில்லை நடேசன் யோகேஸ்வரி அவர்கள் 29-04-2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், சின்னத்தம்பி பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணேசு கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தில்லை நடேசன் அவர்களின் பாசமிகு மனைவியும், பகிரதன், தர்சினி (நோர்வே), சுஜேந்தினி (கனடா), தயாபரன் (கொழும்பு) ஆகியோரின் ஆருயிர் தாயாரும், காலஞ்சென்ற ஞானசுந்தரம், மங்கையற்கரசி (மங்கை-கனடா), மகேந்திரன், இராஜேஸ்வரி (சிந்தாமணி-கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், விக்னராஜா (நோர்வே), கருணாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தில்லையம்பலம், கனகம்மா (பிரான்ஸ்), காலஞ்சென்ற புவனேஸ்வரி, மகேந்திரன், ரோசினி, ராதாகிருஷ்ணன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பாலச்சந்திரன், சாந்தகுமாரி, 'பாலசுந்தரம், சாந்தரூபி, சிவரூபி, வசந்தரூபி (லண்டன்), சந்திரகுமார் (ஜேர்மனி) ஆகியோரின மாமியும், உதயகுமார், உதயமதி (கனடா), நந்தகுமார் (ஜேர்மனி), அஜந்தா (கனடா), ஜெயக்குமார் (மானிப்பாய் தபாலகம்) ஆகியோரின் சிறிய தாயாரும், அவ்சியா, டன்சியா, றோசியான், பதுசியா, கரீஸ், தனேஸ, ஜஸ்வினா ஆகியோரின அன்புமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-05-2013) புதன் கிழமை இல.591, கல்கிசை மகிந்த மலர்சாலை, மவுண்லவேனியா என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் காலை 10 மணிக்கு கொழும்பு கல்கிசை பொது மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

(சி-3157)

## கனகசுந்தரம் காண்டீபன்



யாழ். வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், ஜேர மனி நூர்ன்பேர்க் நகரை வசிப்பிடமாகக் கொண்ட கனகசுந்தரம் காண்டீபன் அவர்கள் 28-04-2013 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார், காலஞ்சென்ற கனகசுந்தரம், திருமதி தவமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பிரமணியம் பூபதி தம்பதிகளின் அன்பு மருமகனும், றோஜமலரின் அன்புக் கணவரும், மிருணா, தீபனா, பிரசன்னா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பார்த்தீபன், பிரதீபன் (கனடா), ஜெகதீபன ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசு காலஞ்சென்ற அன்னலட்சுமி , இலங்கநாதன் (சுவிஸ்ட்சர்லாந்து), கலாராணி சந்திரவதனி (கௌரி - இத்தாலி), இரவீந்திரன் (சுவிஸ்ட்சர்லாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02-05-2013) வியாழக் கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

(சி-3158)

## நாகராசா இராஜலட்சுமி



கரவெட்டி மேற்கு தட்டாந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா இராஜலட்சுமி அவர்கள் 29-04-2013 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், நாகராசா அவர்களின் அன்பு மனைவியும், விமலநாதன் (பிரான்ஸ்), இராசகிரி , ஐங்கரன் (பிரான்ஸ்), ஸ்ரீரங்கன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சோபா அவர்களின் அன்பு மாமியாரும், டீபக், டிவ்யா ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-04-2013 செவ்வாய்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று கரவெட்டி சோனப்பு இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தட்டாந்தோட்டம், கரவெட்டி. **தகவல்: குடும்பத்தினர்**

(சி-3156)

## செல்லத்துரை பெரியார்



ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை பெரியார் அவர்கள் 28-04-2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பெரியார், சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை நாச்சன் தம்பதிகளின் அன்பு மருமகனும், ஈஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், பிறேமகுமார் (பிரான்ஸ்), சுமதி (கொழும்பு), சாந்தகுமார் (பிரான்ஸ்), உதயகுமார் (ஈசன்- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சின்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சுகாந்தினி (பிரான்ஸ்), சிவாநந்தன் (கொழும்பு), சுபாஷினி (பிரான்ஸ்), சஜீவா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சிவகுரு, பூங்காவனம், பாலாமணி மற்றும் பிள்ளைக்குட்டி, சற்குணம் ஆகியோரின் மைத்துனரும், சதூர்ஜன், அக்ஷனா, சங்கீத், மதூஷா, லக்ஷிகா, அனீஷன், சபீனா, நிலக்ஷன், விஷ்ணுகா, ஆராணிக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்க் கிழமை நடைபெற்று பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-3155) **தகவல்: குடும்பத்தினர்**

# பொதுநலவாய மாநாட்டில் நியூசிலாந்தும் பங்கேற்கும்

## திரி நியூஸ் இணையம் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறவுள்ள பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் நியூசிலாந்து பங்கேற்கும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

நியூசிலாந்தின் பிரதமர் ஜோன் கீ இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளதாக திரிநியூஸ் என்ற இணையத்தளம் செய்தி வெளியிட் டுள்ளது.

இம்மாநாட்டில் மகாராணியின் சார்பில் பிரதிநிதி ஒருவரும் தமது அரசாங்கத்தின் சார்பில் ஒருவரும் பங்கேற்கவுள்ளதாக ஜோன் கி குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் அமைச்சரவை மட்ட அமர்வு கடந்த வாரத்தில் இடம்பெற்ற போது இலங்கை தொடர்பிலும் கவனம் செலுத் தப்பட்டதாக அமைப்பின் செயலாளர் கமலேஸ் சர்மா தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பிலும் ஏனைய நாடுகள் தொ... டர்பிலும் மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்படாத போதிலும் அவை ... தொடர்பில் கல ந்துரையாடப்பட்டதாக அவர் குறிப் பிட்டுள்ளார். எனினு... ம் அவை இரக சியமான விடயங்கள் என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)

## கருத்தடை ஊசி மருந்து இறக்குமதி குறித்து ஆராயுங்கள்

(கொழும்பு)

பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கிழக்கு கொள்கலன்களில் 30 ஆயிரம் கருத்தடை ஊசி மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதானது பாரதூரமான விடயமாகும்.

எனவே இதன் பின்னணியில் யார்? எந்த அமைப்பு உள்ளது என்பது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்க் வேண்டும் என பொதுபல சேனா கோரிக்கை விடுத்துள்ளது.

இல்லாவிடின் சிங்கள இனத்தை அழிக்கும் சதித்திட்டம் வெற்றி பெற்று விடும் என்று அவ் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக பொதுபலசேனாவின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் விலந்த விதானகே மேலும் தெரிவிக்கை யில்,

இக்கிழக்கு கொள்கலன்களை பாகிஸ்தானியர் ஒருவரே இறக்குமதி செய்துள்ளார். அதற்குள்ளேயே 30 ஆயிரம் கருத் தடை ஊசி மருந்துகள் கொண்டு வரப்பட்ட மையை சுங்க திணைக்களம் கண்டுபிடித் துள்ளது.

இதற்கு முன்னரும் இவ்வாறு கருத்தடை மருந்துகள் இங்கு கொண்டு வரப்பட்டிருக் கலாம்.

சிங்கள இனத்தை அழிப்பதற்கும் இனப் பெருக்கத்தை குறைப்பதற்கும் மிகவும் சூட்சுமமாக சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதை நாம் வெளியிட்டோம்.

ஆனால் அரசாங்கமோ அல்லது வேறு எவரும் கண்டு கொள்ளவில்லை. இன்று அது நிரூபண மாகியுள்ளது.

இது தொடர்பில் உளவுப் பிரிவினர் இரகசிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும்.

வெறுமனே பாகிஸ்தான் பிரஜைக்கு தண்டப் பணம் அறவிட்டு விடுதலை செய்வதால் எதிர்காலங்களிலும் இவ் ஆபத்து தொடர்ந்த வண்ணமே இருக்குமென்றும் விலந்த விதானகே தெரிவித்தார். (அ-2)

## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் மலர் வெளி வந்துள்ளது.

சித்திரை மாத வெளியீடாக வெளிவந்துள்ள இம்மலர் ஆன்மீகத் தகவல்கள், தமிழர் வரலாறுகள் உட்பட வேறு சிறப்பு ஆக்கங்களையும் தாங்கி வெளிவந்துள்ளது. (அ-5)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வளலாய் அருள் மிகு பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகத்தையொட்டிய மண்டலாபிஷேகம் பூர்த்திப் பெருவிழா நிகழ்வுகள் 1008 சங்காபிஷேக திருவிழாவாக இன்று புதன் கிழமை நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுகள் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபன யாழ். எவ் எம். வானொலியூடாக நேரடி ஒலிபரப்பு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் படி முற்பகல் 11 மணிமுதல் 10.45 மணிவரை மதுரகவி காரை. எம். பி. அருளானந்தரால் நேரடி ஒலிபரப்பாகவுள்ளது.(அ-5)

# மரண அறிவித்தல்கள்

## பாலகிருஸ்ணன் புனிதம்மா



யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வதிவிடமாவும் கொண்ட பாலகிருஸ்ணன் புனிதம்மா 29-04-2013 திங்கட் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற தர்மலிங்கம் (பரியாரியார்) தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் அவர்களின் அன்பு மனைவியும், தணிகாசலன் (நந்தன்- லண்டன்), காலஞ்சென்ற சிவானந்தன், மற்றும் மீனலோஜினி, ஜானகி (ஜானி-கனடா), கமலநாதன்(கண்ணன்-ஜேர்மனி), ஜமுனா , உஷா , வத்சலா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அருளானந்தம் அவர்களின் அன்புச் சகோதரியும், ரெங்கநாயகி, சக்திவேல், ராஜ்குமார், தியாள்குமாரி, பரமேஸ்வரன், தங்கராசா, நோயல் பெரேரா ஆகியோரின் அன்பு மாமியாரும், விஜித்திரன், ஜெனிற்றா, விஜித்திரா, சிவபாலன், கார்த்திகா, ராஜ்குமார், பாலகணன், பாலகீதன், கிருஸ்ணபிரியா, சஞ்சீவன், பிரதீபா, ஜசிந்தன், சக்தி சயந்தன், சிந்துஜன், பதுஜன், சாமினி, விஷ்ணுபவன், பவானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆருஷ், விஸ்மயா, அருணன், ஹரினி, சாய்கிருஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-05-2013) புதன் கிழமை நடைப்பெற்று, மாலை 4 மணியளவில் கைதடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: கமலநாதன்**
**(கண்ணன்- மகன், Detmold)**

(சி-3154)

## சுப்பிரமணியம் குணரட்ணம்



யாழ். உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், நிலாவரை, புத்தூர் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குணரட்ணம் அவர்கள் 28-04-2013 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், முருகேசு (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), நேசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், அனோஜன், தர்மிகா, கௌசிகன், டயானி, கோபிகா, டில்மீரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திரன்(கனடா), சிவமலர்தேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலச்சந்திரன (கனடா), கணேசலிங்கம் (சுவிஸ்), சிவகுமார், சந்திரவதனி (கனடா), சந்திரகுமார் (கனடா), ஸ்ரீகுமார, வுள்ளி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், யோகேஸ்வரன் (கனடா), லதா(கனடா), சுகுமதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகலனும், கௌசிகா, றூபி ஆகியோரின் பெரியப்பாவும், தேனா, மாதுரி, மாதுளன், கோகுலராம், புருஷோத்மன், வைஷ்ணவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின், இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் நவக்கிரி நிலாவரை இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

(சி-3153)

## விஜயலட்சுமி பாலசிங்கம்



யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி லூனனை வதிவிடமாகவும் கொண்ட விஜயலட்சுமி பாலசிங்கம் அவர்கள் 29-04-2013 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற ஆனந்தநடராசா இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமி அருளம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், பபிதா(ஜேர்மனி), பவானி (லண்டன்), விஜிதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவசுதன் (ஜேர்மனி), ஞானகணேஷ் (லண்டன்), சிமோனா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற ஞானசம்பந்தன், காலஞ்சென்ற ஞானபூங்கோதை, சிதம்பரநாதன் (கனடா), மகேஸ்வரா (கனடா), சிவயோகம், தையல்நாயகி, கெங்காதேவி (ஜேர்மனி) சிறீஸ்கந்தராசா (ஜேர்மனி), ஜெயந்திரா (ஜேர்மனி) ஆகியோரின அன்புச் சகோதரியும், ஞானரஞ்சிதம்(லண்டன்), தில்லைநாதன் (ஜேர்மனி), புவனேஸ்வரி (கனடா), தில்லைநாயகி (கனடா), சற்குணநாதன், இராசரட்ணம, தங்கராசா (ஜேர்மனி), ஜெயபாமினி (ஜேர்மனி), இந்திராணி (ஜேர்மனி), சிவசுப்ரமணியம, மகாலட்சுமி, யோகநாதன் (ஜேர்மனி), இராஜேஸ்வரி (ஜேர்மனி), பத்மலோஜினி (டென்மார்க்), சிவகுமார்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பஞ்சலிங்கம் , மகாலிங்கம் (ஜேர்மனி), சிவலோகினி, சிறீதரன்(டென்மார்க்), வசந்தமாலா(ஜேர்மனி), வசந்தநிகலா(ஜேர்மனி) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், சுலக்ஷன், லீாவண்யா, ஹெல்வின், நவீன், பவின், பிரவீன்(பீற்றர்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04.05.2013 சனிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-3152) **தகவல்: குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சர்வதேசம் எமக்கு எல்லாவற்றையும் பெற்றுத்தந்துவிடும் என்று கருதமுடியாது’



நாட்டில் அன்றாடம் பரவலாக இடம்பெறும் தாக்கு தல் சம்பவங்கள் தமிழ்மக் கள் எதிர்பார்க்கும் தீர்வைப் பற்றி அவர்களை சிந்திக்க விடாது திசைதிருப்ப எடுக்கப்படும் திட்டமிட்ட சதிவேலைகளே. இதனை அரசாங்கம் தான் செய்கிறது. மேலும் காணி அபகரிப்பை எதிர்த்துச் செய்யப்படும் ஆர்ப்பாட்டங்கள் மூலம் கூட்டமைப்பு வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியுமே தவிர காணி அபகரிப்பையோ சிங்களக் குடியேற்றத்தையோ தடுத்து நிறுத்த முடியாது.

செவ்வி கண்டவர் :
**எஸ்.ஆர்.கரன்.**

*யாழ்ப்பாணத்திற்கு 26.04.2013* **வருகை தந்த கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்து வருபவருமான பிரபா கணேசனுடனான நேர்காணல்**

கேள்வி: நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்துத் தங்களின் கருத்து?

பதில்: நாட்டின் அரசியல் நிலைவரம் பொதுவாக மந்தகதியில்தான் போய்க் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் விடயங்கள் சரியான முறையில் இடம்பெறவில்லை.

கேள்வி: பரவலாக இடம்பெற்று வரும் தாக்குதல் சம்பவங்கள், குறிப் பாக அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் மீதும் (எதிர்ப்புத் தெரிவிக்கும்) வர்த்தக சமூகத்தினர், மதத் தலங்கள் மீதும் இடம்பெற்று வருகின்றமை தொடர்பில்?

பதில்: தாக்குதல் சம்பவங்கள் குறிப் பாக யுத்தத்திற்குப் பின்பு கிறிஸ் பூதம் போன்றவற்றின் தாக்குதல் சம்பவங்கள் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளுக்கான அரசியல் தீர்வை மழுங்கடிக்கப் பார்க்கின்றனர். இவ்வாறான சம்பவங்கள் (தாக்குதல்கள்) ஊடாக அன்றாடம் நடக்கும் பிரச்சினைகளில் மக்களைத் திசைதிருப்பி விட்டு தமிழ்மக்கள் எதிர்பார்க்கும் தீர்வைப்பற்றி அவர்களைச் சிந்திக்கவிடாது செய்யும் திட்டமிட்டசதி வேலைகளே இவையென நான் கருதுகிறேன். இதனை அரசாங்கம்தான் செய்கிறது. தீர்வை நோக்கி மக்களைச் செல்லவிடாது புதிய பிரச்சினைகளை ஏற்படுத்தி நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் மக்களின் கவனத்தை திசை திருப்பப் பார்க்கின்றது. புதிய பிரச்சினைகளை ஏற்படுத்தி பழைய பிரச்சினைகளை மூடி மறைத்து நிரந்தரத் தீர்வு வழங்குவதை இழுத்தடிக்கின்றது.

பொதுபலசேனா போன்ற அமைப்புக்கள் உருவாக்கப்பட்டது இந்த நோக்கத்திற்காகத்தான். இதில் தமிழ் மக்கள் மட்டும் பாதிக்கப்படவில்லை. இன்னொரு சிறுபான்மையினமான முஸ்லிம் மக்களும் பாதிக்கப்படுகின்றனர். சிறுபான்மை இனங்களுக்கே தொடர்ந்து பிரச்சினைகள் ஏற்படுத்தி வருகின்றன.

கேள்வி: வடக்கில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் திட்டமிட்டுச் சுவீகரிக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு சிங்கள, முஸ்லிம் குடியேற்றங்களும் இடம்பெற்று வருகின்றமை தொடர்பில்?

பதில்: முஸ்லிம் மக்களின் குடியேற்றம் ஒருவிதத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடியது. காரணம், விடுதலைப்புலிகள் முஸ்லிம் மக்களை யாழ்.மாவட்டத்திலிருந்து வெளியேற்றியதைப் பிழையான விடயமாகத்தான் நான் பார்க்கின்றேன். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் பலமுறை பாராளுமன்றத்திலும் வெளியிடங்களிலும் வருத்தம் தெரிவித்ததோடு அது பிழையான நடவடிக்கை எனவும் குறிப்பிட்டுள்ளனர். எனவே, முஸ்லிம் மக்களின் குடியேற்றம் நியாயமான தாகவே எனக்குப்படுகின்றது. ஆனால், முஸ்லிம் அமைச்சரான றிசாட் பதியுதீன் முஸ்லிம் மக்களை அதிகளவில் குடியேற்றப்பார்க்கின்றார். அது, அவ ரது அரசியல் நோக்கத்திற்காகவே. இவ்வாறான செயற்பாடுகள் பாரிய பிளவைச் சிறுபான்மை இனங்களுக்கி டையில் ஏற்படுத்தும்.

சிங்களக்குடியேற்றம் ஒரு வழியில் இடம் பெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. சிங்களக் குடியேற்றத்தைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீதுதான் நான் குற்றம் கூறுவேன். சிங்களக் குடியேற்றத்துக்கு முழுமையான காரணம் கூட்டமைப்பினர்தான். ஏனென்றால், அவர்கள் அரசியல்தீர்வை எதிர்பார்க்கின்றனர். ஆனால் அபிவிருத்தியை எதிர் பார்த்ததாக இல்லை. அபிவிருத்தியைப் பற்றிப் பேசுவதுமில்லை. குடியேற்றம் என்பது அபிவிருத்திக்குக் கீழான ஒன்றுதான். அரசாங்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு குறைந்தபட்ச ஆதரவை அளிக்கவேண்டும் என நான் கூறவில்லை. அந்தந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் பேசி குடியேற்றம் சம்பந்த மாக ஏதாவது முறையில் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்று நான் கூறுவேன்.

இலங்கையில்தானே அவர்கள் உள்ளார்கள். இந்த அரசாங்கத்துடன் பேசித்தான் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டும். எனவே, அரசாங்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்திச் சிங்களக்குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

வெறுமனே அறிக்கைகளை விட்டுக் கொண்டு இருப்பதில் பயனில்லை. ஆவேசப் பேச்சுக்களும் தீர்வினைப் பெற்றுத்தரா.

தமிழ் மக்களின் வாக்குகளை மட்டும் ஆர்ப்பாட்டத்தின் மூலம், பெற்றுக்கொள்ள முடியுமே தவிர காணி அபகரிப்பையோ சிங்களக்குடியேற்றத்தையோ ஒருபோதும் தடுத்து நிறுத்தி விட்முடியாது.

கேள்வி: தங்கள் சார்பாக காணி சுவீகரிப்பு தொடர்பில் அழுத்தம் ஏதாவது கொடுக்கப்பட்டதா?

பதில்: நான் ஒரு கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர். இருப்பினும் அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் காணி சுவீகரிப்பு தொடர்பான அதாவது எங்கு? என்ன நடக்கிறது? என்ற விபரங்க ளைச் சரியாக இங்குள்ள அரசியல்வாதிகளோ, புத்திஜீவிகளோ எனக்கு தருவார்களேயானால் அது தொடர்பில் அரசாங்கத்துடன் பேசித் தீர்வு காண நான் தயார். யாழ். மாவட்டத்தில் இருக்கும் தமிழ் பாராளு மன்ற உறுப்பினர்களை விட செயற்படக் கூடிய அதிகாரமும் சக்தியும் எனக்கு இருக்கிறது.

இதில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவை நான் குறிப்பிடவில்லை. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்களைக் குறிப்பிட்டேன்.

கேள்வி: பொது எதிரணி குறித்து தங்களின் பார்வை?

பதில்: பொது எதிரணி என்பதை நகைச்சுவை நாடகமாகவே நான் பார்க்கின்றேன். பொது எதிரணியில் பாராளுமன்ற அங்கத்துவம் கொண்டது ஐக்கிய தேசியக்கட்சி மட்டும்தான். மற்றையவையெல்லாம் பாராளுமன்ற அங்கத்துவம் இல்லாத கட்சிகள். ஆனால் அவற்றை இணைத்துக் கொண்டு பொது எதிரணி எனக் கூறிக் கொண்டு சிலர் மேடையில் கைகளைக் கோர்த்தபடி மேலே யுயர்த்தி ஆர்ப்பரித்துக்கொண்டுள்ளனர். இது ஒரு நாடகம். இவர்கள் மூலம் இந்த அரசாங்கத்தை ஒருபோதும் கவிழ்த்து விடமுடியாது. இந்தப் பொது எதிரணியில் இருக்கும் அனைத்துக் கட்சிகளும் செயலிழந்தவைதான். பொதுவாக சிறு பான்மையினர் அரசாங்கத்திற்கு ஒருபோதும் ஆதரவு கொடுத்ததில்லை, கொடுக் கப்போவதுமில்லை. அதனை ஜனாதிபதி புரிந்து கொண்டமையால்தான் பெரும்பான்மை மக்களின் ஆதரவை முழுமையாகப் பெற்றுக்கொண்டுள்ளார். இந்த நாட்டில் 75 வீதம் சிங்கள மக்கள் வாழ்கின்றனர். அதில் 78 வீதமானோர் வாக்காளர் பட்டியலில் உள்ளனர். இதற்குக் காரணம், சிறுபான்மையினர் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்வது குறைவு. அதில் அதிக அக்கறை காட்டுவதும் கிடையாது.

இப்படிப்பட்ட நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெரும்பான்மையினத்தவரின் 80வீத வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளார். எனவே சிறுபான்மையினரின் ஆதரவை வைத்துக்கொண்டு இந்த அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடமுடியாது.

இதனைவிட நாட்டின் பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.க வடக்கிற்கு விஜயம் செய்வதன் ஊடாக பல ஆயிரம் வாக்குகளை இழந்து கொண்டிருக்கின்றது. இது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் பொது எதிரணி என்ற கட்டமைப்பை உருவாக்கிய எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலிலே தான் செயற்படுகின்றார் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்கின்றது.

கேள்வி: தமிழ்மக்களுடைய அரசியல் தீர்வுக்கு அரசாங்கம் ஏதாவது முன்னெடுப்புக்களை மேற்கொள்வதான சமிக்ஞைகள் ஏதாவதுண்டா?

பதில் : உண்மையில் என்னைப் பொறுத்தவரை யுத்தம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்த பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்தபோது அநேகம் தமிழர்கள் அவருக்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்திருந்தனர். அவரூடாக ஒரு தீர்வை தமிழ் மக்களுக்கு கொண்டுவரமுடியும் என்ற நம்பிக்கையில் நாட்டில் ஆட்சிக்கு வந்த எந்தவொரு ஜனாதிபதிக்கும் கிடைக்காத ஆதரவு அவருக்குக் கிடைத்தும்கூட அவரால் ஒரு தீர்வைக் கொண்டுவரமுடியவில்லை.

காரணம், அவருக்கு விடுதலைப்புலிகளின் போராட்டம் பாரிய தடையாக அமைந்திருந்தமையாகும். ஆனால் தமிழ் மக்களுக்குத் தீர்வினைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய யாருக்கும் கிடைக்காத சந்தர்ப்பம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு தற்போது கிடைத்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தை சரியான முறையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயன்படுத்தவில்லை என்பது மிகவும் வருத்தமாகத்தான் உள்ளது. யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்பு தமிழ்மக்களின் நீண்ட காலக்கோரிக்கையான நிரந்தர அரசியல் தீர்வை நோக்கி சிறிதள வேனும் முயற்சி எடுக்கப்படவில்லை. இது பாரிய குற்றமாகும். இதனால் தான் வெளிநாட்டு அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. எனவே தமிழர்களுக்கான நிரந்தர அரசியல்தீர்வு தொடர்பில் அரசாங்கத்தை கேள்விக்குறியோடுதான் நான் பார்க்கின்றேன்.

கேள்வி: அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அரசியல் தீர்வு தொடர்பில் தங்கள் சார்பில் அழுத்தம் கொடுக்கப்பட்டதா?

பதில்: நான் அரசாங்கத்திற்கு ஆதரவு தான் கொடுத்து வருகிறேன். ஆனால் அரசாங்கத்துடன் இணையவில்லை. எந்தவொரு மேடைப் பேச்சிலும் அரசாங்கத்துடன் இணைந்தாக கூறவுமில்லை.

அத்தோடு எந்தவொரு மேடைப் பேச்சிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினை நல்லவரென்றோ வல்லவரென்றோ நான் புகழ்ந்து பேசியதும் இல்லை. அத்தோடு அரசாங்கத்திற்கு வெள்ளையடித்ததும் இல்லை. 18 ஆவது திருத்தச்சட்டத்தில் அரசாங்கத்திற்கு நான் ஆதரவு தெரிவித்துள்ளேன். ஆகவே அரசாங்கம் தான் எனக்கு கடமைப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு நான் கடமைப்படவில்லை. எந்தவிதமான சலுகைகளையும் அதற்காக நான் பெற்றதும் இல்லை.

எனது அரசியல் செயற்பாடுகள் தமிழ் மக்களின் கல்வியை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கின்றன. அதற்குத்தான் எனது பாராளுமன்ற நிதியை ஒதுக்கிக் கொடுத்துள்ளேன்.

இலவசமாக தையல் இயந்திரம் கொடுத்து கூரைத்தகடுகள் கொடுத் தல், வீதி புனரமைப்பு போன்றவற்றுக்கு நான் ஒருபோதும் நிதி ஒதுக்கீடு செய்ததில்லை. முழுக்க முழுக்க கல்வி அபிவிருத்திக்காகத் தான் எனது பாராளுமன்ற நிதி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இருப்பினும் இனப்பிரச்சினை, அரசியல் தீர்வு குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீதுதான் நான் பாரிய குற்றச்சாட்டை முன்வைப்பேன். காரணம் அவர்களது செயற்பாடுதான் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அவர்கள் வெறுமனே வெளிநாட்டு தலையீடுகளையும், சர்வதேசத்தையும் நம்பிக் கொண்டு இருக்கின்றனர். முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் கூட சர்வதேச சமூகத்தை நம்பித்தான் இறுதியில் இல்லாது போனார். அதே பாதையில்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் சென்று கொண்டிருக்கின்றனர்.

சர்வதேச நாடுகள் எமது நாட்டுப் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுத் தரமாட்டா என்பதை கூட்டமைப்பினர் புரிந்து கொள்ள வேண்டும். ஏதோவொரு வழியில் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும். பாராளுமன்ற தெரிவிக்குழுவிற்குள் தான் செல்லவேண்டுமென்று இல்லை.

மேலும் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் போது சிறையில் வாடிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, மீள்குடியேற்றம், மும்மொழி அமுலாக்கம் போன்றவற்றை முன்னிலைப்படுத்தி பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும்.

இதைவிடுத்து சர்வதேச சமூகம் எமக்கு எல்லாவற்றையும் பெற்றுத் தரும் என்று நம்புவதால் எந்தப் பயனுமில்லை.

அத்தோடு சிங்கள மக்களிடையே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை வலியுறுத்தவேண்டும். சிங்கள மக்களை வெறுத்து ஜனாதிபதியால் கூட தமிழர்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்து விட முடியாது. சிங்கள மக்கள் மத்தியில் தீர்வு வர வேண்டும். அப்போதுதான் நிரந்தரத் தீர்வைத் தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ளமுடியும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு கல்வி வலயத்தின் தமிழ்த்தின போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு கல்வி வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகளை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ராஜ்குமார் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**தனி இசை- பிரிவு II**

அ.வேனுஜா (மு/தேவிபுரம் அ.த.க.பா.), றோ.கொன்சன் (மு/கொக்கிளாய் அ.த.க.பா.), இருவர் மூன்றாம் இடம்:சு.சுலக்சனா (மு/சுதந்திரபுரம் அ.த.க.பா.), அ.கேனுஜா (மு/குமுழமுனை ம.வி.),

**பிரிவு III**

த.கிசோபனா (மு/கலைமகள் வித்தி), சி.சானுஜா (மு/இரணைப்பாலை ம.வி.), கு.மேரிஜென்சிகா (மு/புதுக்குடியிருப்ப றோ.க.)

**பிரிவு IV**

ம.சதிஸ்சனா (மு/கலைமகள் வித்தி.), சு.பானுஷன் (மு/வற்றாப்பளை ம.வி.), இ.ஜெனிபா (மு/புதுக்குடியிருப்பு றோ.க.)

**பிரிவு V**

பா.காந்தரூபன் (மு/செம்மலை ம.வி.), ஜெ.ஜெயநிசாந்தி (மு/முல்லைத்தீவு ம.வி.), மு.பிருந்தா (மு/புதுக்குடியிருப்பு ம.க.)

**பேச்சு- பிரிவு I**

பு.நிவேதினி (மு/வற்றாப்பளை ம.வி.), சு.யதுர்சிகா (மு/தண்ணீரூற்று இ.த.க.பா.), லோ.கிருஸ்ணபிரசாந் (மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.)

**பிரிவு II**

கு.தேசிகா (மு/வற்றாப்பளை ம.வி.),இ.மாதங்கி (மு/உடையார்கட்டு ம.வி.), து.தூயவன் (மு/கைவேலி கணேச வித்தி.)

**பிரிவு- III**

அ.திலக்சனா (மு/செம்மலை ம.வி.),இ.சன்சிகா (மு/பாரதி வித்தி.),ம.மதுசனா (மு/உடையார்கட்டு ம.வி.)

**பிரிவு-IV**

நா.எழில் (மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), வி.டினுசாந் (மு/கலைமகள் வித்தி.), மோ.சர்ணியா (மு/குமுழமுனை ம.வி.)

**பிரிவு- V**

த.தேவநிசாந்தினி (மு/விசுவமடு ம.வி.), கி.கீர்த்தனா (மு/புதுக்கடியிருப்பு ம.க.), அ.குமுதினி (மு/அலம்பில் றோ.க.)

**வாசிப்பு - பிரிவு I**

இ.கேதாரணி (மு/உடையார்கட்டு அ.த.க.பா.), செ.தட்சாயினி (மு/குமுழமுனை ம.வி.), பொ.ஓவியா (மு/தண்ணீரூற்று இ.த.க.பா.)

**பிரிவு -II**

இ.பிரசாந்தி (மு/விசுவமடு ம.வி.), சு.சங்கவி (மு/உடையார்கட்டு ம.வி.), ஜெ.மதிநிதா (மு/குமுழமுனை ம.வி.)

**இசையும் அசைவும் -பிரிவு I**

ம.டிலக்சன் (மு/கலைமகள் வித்தி.), ஜெ.தர்சனா (மு/பாரதி வித்தி.), ச.ஜெனனி (மு/நெத்தலியாறு த.வி.)

**பாவோதல்- பிரிவு I**

சி.ரிலக்ஸி (மு/விக்கினேஸ்வரா வித்தி.), த.கஜானி (மு/குமுழமுனை ம.வி.), ச.வேணுஜா (மு/புதுக்குடியிருப்பு றோ.க.)

**பிரிவு-II**

ஆ.கஜனா (மு/வற்றாப்பளை ம.வி.), ம.மகிழினி (மு/உடையார்கட்டு ம.வி.), பா.சஞ்சியா (மு/செம்மலை ம.வி.)

**பிரிவு- III**

சி.கதீசனா (மு/வற்றாப்பளை ம.வி.), இ.சன்சிகா (மு/புதுக்கடியிருப்பு மத்திய கல்லூரி), எ.லிபின்சியா (மு/முல்லைத்தீவு றோ.க.)

**பிரிவு-IV**

இ.தர்நிஷன் (மு/உடையார்கட்டு ம.வி.), சி.விஜிதா (மு/அலம்பில் றோ.க.), கோ.குணவதனி (மு/உடுப்புக்குளம் த.வி.)

**பிரிவு- V**

க.சகானா (மு/புதுக்குடியிருப்பு ம.க.), ப.வதனி (மு/உடையார்கட்டு ம.வி.), ஞா.சுதர்சியா (மு/வித்தியானந்தக் கல்லூரி)

**நடனம் தனி-II**

ம.தர்சிகா (மு/வித்தியானந்தக் கல்லூரி), த.டிலானி (மு/உடையார்கட்டு ம.வி.), வ.வினோதா (மு/புதுக்குடியிருப்பு ம.க.)

**பிரிவு-III**

கு.நிதர்சிகா (மு/வித்தியானந்தக் கல் லூரி), ய.யசோசியா (மு/தேராவில் த.வி.), சி.ரஜிப்பிரியா (மு/புதுக்குடி யிருப்பு ம.க.)

**பிரிவு- IV**

செ.சுபநேத்திரா (மு/புதுக்குடியிருப்பு ம.க.)

**பிரிவு-V**

வி.துஷீபா (மு/வித்தியானந்தக் கல்லூரி), ச.கீர்த்திகா (மு/புதுக்குடியிருப்பு ம.க.), த.டிலைக்ஸனா (மு/உடையார்கட்டு ம.வி.)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு -பிரிவு I**

ம.கஜந்தன் (மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.), செ.சாரங்கன் (மு/கலைமகள் வித்தி.), யோ.அனற்ஜெனிதா (மு/வள்ளிபுனம் க.உ.வி.)

**இசை குழு பிரிவு -I**

மு/கலைமகள் வித்தி., மு.வற்றாப்பளை ம.வி., மு/விக்கினேஸ்வரா வித்தி.

**பிரிவு- II**

மு/முல்லைத்தீவு ம.வி., மு/புதுக்குடியிருப்பு ம.க., மு/வற்றாப்பளை ம.வி.

**நடனம் குழு பிரிவு- I**

மு/கள்ளப்பாடு அ.த.க.பா., மு/வற்றாப் பளை ம.வி.,மு/புதுக்குடியிருப்பு ம.க.

**வில்லுப்பாட்டு- திறந்த போட்டி**

மு/கலைமகள் வித்தி., மு/பாரதி வித்தி.

**நாடகம்- திறந்த போட்டி**

மு/புதுக்குடியிருப்பு ம.க., மு/செம்மலை ம.வி., மு/வள்ளிபுனம் க.உ.வி.

**திறந்த போட்டி**

**விவாதம்**

மு/முல்லைத்தீவு ம.வி., மு/பாரதி வித்தி., மு/செம்மலை ம.வி.

**நாட்டிய நாடகம்**

மு/வித்தியானந்தக் கல்லூரி, மு/பாரதி வித்தி

**நாட்டார் பாடல்**

மு/வற்றாப்பளை ம.வி., மு/புதுக்குடியிருப்பு ம.க., மு/பாரதி வித்தி

**தமிழறிவு வினாவிடை**

மு/முல்லைத்தீவு ம.வி., மு/உடையார்கட்டு ம.வி., மு/செம்மலை ம.வி.

**முஸ்லிம் நிகழ்ச்சி**

மு/தண்ணீரூற்று முஸ்லிம் வித்தி. (அ-17)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு கல்வியாண்டு 2011/2012

**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்**

மேற்படி பீடத்தின் புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு 06.05.2013 (திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தில் ஆரம்பமாகும் எனப் பீடாதிபதி அறிவித்துள்ளார்.


(சி-3149) **பதிவாளர்**


நெஞ்சைவிட்டகலா

# 5ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் தேவகி துரைராஜா

(ஓய்வுபெற்ற தொலைக் கல்வி போதனாசிரியையும் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபரும்)



**தோற்றம் :** **27.04.1947**

**மறைவு :** **30.04.2008**

நீண்ட காலம் நோய் நொடியில்லாமல் வாழ்வாய்
என எண்ணிய எமக்கு சில மணி நேரத்தில்
சென்று வருகின்றேன் என்றாய் அம்மா தாயே
பாசத்தால் கட்டுண்ட நாம் கலங்குகின்றோம்
ஆண்டுகள் ஐந்துதான் சென்றாலும் அருகிருக்கிறாய்
தேவா தேவா எனப் பலரும் கூப்பிடுவது கேட்குதம்மா
நீ அணைத்து அணைத்து வளர்த்தாயே அம்மா
எத்தனைபேர் உன்னை மறந்தாலும் உன் நாமம் உன் பண்பு,
உன் உபசரணை, அறிவூட்டிய திறமை, அரவணைத்து ஆறுதல்
சொல்ல எத்தனை ஆயிரம் பேர் அம்மா, தாங்கள் வாழ்ந்த காலம்
எம்மை அடிமைப்படுத்திய காலம் அம்மா, நினைக்கின்றோம்.
உன் நாமம் நிலைக்குமம்மா சாந்தி! சாந்தி!!

புறாடி லேன் (முன் ஒழுங்கை),
அரியாலை, யாழ்ப்பாணம்.

(2489) **தகவல்: கணவர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






# சிறுவர் அரங்கம்

443

## கடன் பட்டார் படும் பாடு




ஒரு கிராமத்தில் நாகு, மூர்த்தி என்ற இரு நண்பர்கள் இருந்தனர். இருவரும் விவசாயிகள். மூர்த்திக்கு பத்து ஏக்கர் நிலம் இருக்க நாகுவிடம் ஐந்து ஏக்கர் இருந்தது. பக்கத்து நகரிலிருந்து லேபா தேவிக் காரர்கள் (கடன் கொடுப்பவர்கள்) அடிக்கடி அந்தக் கிராமத்துக்கு வந்து விவசாயிகளுடன் மிக அக்கறையோடு உரையாடிவிட்டு அவர்களுக்கு தாராளமாக கடன்கொடுக்க முன்வருவார்கள்.

பணம் தேவையில்லாதவர்களைக் துரத்தித்துரத்தி விசாரித்து கடன் தருவார்கள். கடனுக்கு ஈடாக சாமர்த்திய மாக அந்த அப்பாவிகளின் நிலங்களை அடமானமாக எடுத்துக் கொண்டு வெற்றுப்பத் திரத்தில் கையெழுத்தும் வாங்கி விடுவார்கள். பணம் எளிதாகக் கிடைக்கிறது என்பதற்காக தேவையில்லாத போதுகூட பல விவசாயிகள் கடன் வாங்கும் வழக்கத்தை மேற் கொண்டனர்.

### அம்புலிமாமா கதைகள்

மூர்த்தியும் அந்த வகையைச் சேர்ந்தவன் ஆனான். தேவையில்லாதபோதுகூட வரும் பணத்தை வேண்டாமென்று சொல்லாமல் கடனாகப் பெற்றுக்கொண்டான். தவிர தானியங்களைப் பதுக்கிவைத்து கறுப்புச் சந்தையில் விற்றுப் பணம் சேர்க்கவும் ஆரம்பித்தான்.

அதற்கு நேர்மாறாக மூர்த்தியின் நண்பன் நாகு கடன் வாங்குவதே இல்லை. தன்னிடம் உள்ள பணத்தில் மட்டும் விதைகள், உரங்கள் வாங்குவானே தவிர கடன் வாங்கி நிலத்தில் செலவு செய்யமாட்டான். கையிருப்புப் பணத்திற்கேற்ப விவசாயத்தில் முதலீடு செய்வான். மிகவும் அவசியமான செலவு என்றால் தன் மனைவியின் நகைகளை விற்றாவது சமாளிப்பானே தவிர கடன்மட்டும் வாங்கமாட் டான். கணவனுடைய இந்தப் போக்கு மனைவி சீதாவுக்குப், பிடிப்பதேயில்லை. ஆனால் அத ற்கு




நாகு கடன் வாங்குவது ஒரு கெட்டபழக்கம். கடன் வாங்கும் போது நன்றாக இருக்கும். ஆனால் வாங்கிய கடனை திரும்பக் கொடுக்க முடியா விட்டால் அதைவிட அவமானமும் தொல்லையும் வேறில்லை. கடன் வாங்கி ஆடம்பரமாக வாழ் வதைவிட அரைவயிற்றுக்கூழோ கஞ்சியோ குடித்துக் கொண்டு கடன் வாங்காமல் மானத்தோடு வாழ்வதே மேல்.

யாருக்கும் கடன்படவில்லையென்ற நினைப்பு ஒன்றுதான் மனிதனை இர வில் நிம்மதியாகத் தூங்க உதவி செய்யும் என்று பெரிய விளக்கம் கொடுத்தான். சீதாவுக்கு இந்த விளக்கத்தைக் கேட்டாலே கோபம் கோபமாக வரும்.

திடீரென இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்துப் போக கிராமத்தில் வறட்சி ஏற்பட்டது. பெரிய மிராசுதாரர்கள் மட்டுமே அதனைச் சமாளிக்கமுடிந்தது. சாதாரண விவசாயிகள் பயங்கர மாகப் பாதிக்கப்பட்டனர். விதை நெல் வாங்கவும் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்குமே நிறையப் பணம் தேவைப்பட்டது. எல் லோரும் மீண்டும் வட்டிக் கடைக்காரர்களை கடனுக்கு அணுகினர். சீதாவும் தன் கண வனை கடன் வாங்கும்படி நச்ச ரித்தாள். ஆனால் நாகு பிடிவாத மாக மறுக்கவே சீதாவுக்கு மிக வும் கோபம் வந்து விட்டது. நாகுவிடம் சண்டை போட்டு விட்டு பிறந்த வீட்டிற்குச் சென்று விட்டாள்.

சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் சில அரசாங்க அதிகாரிகள் மூர்த்தியின் வீட்டைச் சோதனையிட வந்தனர். கறுப்புச் சந்தையில் விற்பதற்காகப் பதுக்கி வைத்திருந்த தானியங்களைக் கைப்பற்றியதுடன் அவன் சட்ட விரோதமாக நடந்து கொண்டதற்காக அவனுக்குப் பெரிய அபராதமும் விதித்தனர்.

ஆக மிராசுதார் போல் டம்பமாக வாழ்ந்த மூர்த்தி ஒரே நாளில் தன் சொத்துப் பத்துக்களை இழந்து நடுத்தெருவுக்கு வந்துவிட்டான்.



அதற்குள் வேண்டாம் வேண்டாம் என்ற போதும் வலிய வந்து கடன் கொடுத்த வட்டிக் கடைக் காரர்கள் இப்போது விவசாயிகளுக்கு உண்மையாகவே பணத் தேவை ஏற்பட்டபோதும் மேலும் கடன்கொடுக்காமல் கொடுத்த கடனைக் கறாராகத் திருப்பிக் கேட்டுப் பாடாய்ப் படுத்தினர். பழைய கடனைத் திருப்பி வட்டியும் முதலுமாய் தரமுடியாதவர்களின் நிலங்களைப் பிடுங்கிக்கொண்டனர். அவர்களுடைய நிலங்களை அபகரிக்கத் தானே கடனே கொடுத்தார்கள்!. அவர்கள் மூர்த்தியையும் விட்டு வைக்கவி ல்லை. மூர்த்தியின் எஞ்சிய கொஞ்ச நஞ்ச சொத்துக்களை அவர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

அதைக்கேட்ட நாகு மிகவும் வருத்தமடைந்தான். நேராக மூர்த்தியிடம் சென்ற நாகு நண்பா ஒருவன் கடன் தருகிறான் என்பதற்காகத் தேவையில்லாவிடினும் அதை வாங்கிக்கொள்வது பெரிய தவறு. அதுதான் போகட்டும் என்றால் குறுக்குவழியே பணம் சம்பாதிக்க முயன்று தானியங்களை நீ பதுக்கி வைத்தது மன்னிக்கமுடியாத தவறு.

சரி சரி! நடந்தது நடந்து விட்டது. என்னுடைய மனைவியின் நகைகளை விற்று உனக்குப் பணம் தருகிறேன். நீ மனம் தளராமல் என்னுடன் சேர்ந்து கூட்டாக விவசாயம் தொடங்கு! ஒருசில ஆண்டுகளிலேயே இழந்த செல்வத்தை மீண்டும் பெறுவாய் என்றான்.

அதைக்கேட்ட மூர்த்தி உணர்ச்சிவசப்பட்டு நண்பனைக் கட்டிப்பிடித்துக் கதறி விட்டான். கணவனிடம் கோபித்துக் கொண்டு பிறந்த வீட்டிற்குப் போயிருந்த சீதாவுக்கு தன் கணவனின் கிராமத்தில் கடன் பட்டவர்கள் படும் துன்பத்தைக் கேள்விப்பட்ட போது தான் தன் கணவனின் அருமை புரிந்தது.

உடனே அவள் பிறந்த வீட்டை விட்டு தன் கணவன் வீட்டுக்கு வந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டி அவன் கால்களில் விழுந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

31



மாதோட்ட முதலியார் மகித்தன் சொன்னவற்றை நம்புவதா? விடுவதா? என மன்னன் யோசித்தன்.

"மதம் மாறுவதை அனுமதிக்க முடியாது. இது அரசியல் காரணி. மதம் மாறியவர்கள். அவர்களுக்கு நாடு பிடிக்க உதவுவர். எதை அனுமதித்தாலும் மதம் மாறுவதை அனுமதிக்க முடியாது. நான் இன்றே படையுடன் புறப்படுகிறேன். உண்மையாயின் மதம் மாறியவர்கள் தண்டிக்கப்படுவார்கள்"

இளஞ்சிங்கன் மிகப் பலவீனமானவன். போர்த்துக்கேயரின் காசுக்கும் பேச்சுக்கும் மயங்கிவிட்டான். கேட்டான். முதற்கட்டமாக அதிகாரி இளஞ்சிங்கனையும் மதகுரு பிரான்சிஸ் சேவியரையும் தன் வாளுக்கு இரையாக் கினான்.

"மதம் மாறியவர்களுக்குச் சொல்லுங்கள் கைவிட்டு பழைய மதத்திற்கு வரும்படி. ஒரு நாள் தவணை கொடுங்கள். இல்லாவிடிலும் அனைவரும் கொல்லப்படுவார்கள்"

தோட்டவெளி மக்கள் புதிய மதத்தில் பிடிவாதமாக இருந்தார்கள். சங்கிலி மன்னனும் தன் முடிவில் அழுங்கானான். அந்தக் கிராமத்தின் மண் சிவப்பானது. ஆண், பெண், சிறுவர், சிறுமிகள் குழந்தைகள் அனைவரும் சங்கிலியின் படைக்கு இரைகள் பலியாகின. மன்னார் சங்காரத்தை மன்னனால் மறக்க இயலவில்லை. அதே போல் போர்த்துக்கேயராலும் மறக்க முடியவில்லை. தாங்கொணாத துயரமடைந்து



சங்கிலி மன்னனால் வெளியிடப்பட்ட நாணயம்

## மன்னார் சம்ஹாரம்

மதம் மாற்றுவதை கோவையிலிருந்து பிரான்சிஸ்சவேரியர் என்ற மதகுருவை அதே பெயருடைய பிரதான மதகுரு அனுப்பி வைத்தார். சங்கிலி மன்னன் ஆத்திரத்துடன் மன்னார் தோட்டவெளி வந்தான். மாதோட்ட முதலியார் சொன்னவை யாவும் உண்மையாக இருந்ததைக் கண்டான். ... யாகினர். அக்கிராமமே பிணக் காடானது.

மகித்தனை மன்னாரின் புதிய அதிகாரியாக நியமித்துவிட்டு சங்கிலி தலைநகர் திரும்பினான். மன்னனால் உறங்கவே முடியவில்லை. அவன் வாளுக்கு இரையானவர்கள் தோன்றிக் கொண்டிருந்தார்கள். அறுநூறு உயிர் சங்கிலி மீது திடீரென படையெடுக்க ஆயத்தப்படுத்தினார். கோவையிலிருந்து படை புறப்பட ஆயத்தமாகியது. அந்த வேளையில் புதிய செய்தியோடு தூதுவன் ஒருவன் வந்தான்.

"போர்த்துக்கலிலிருந்து நிறைந்த பொன்னோடும் பட்டோடும் அவர்களின் சம்பள பொற்காசுகளோடும் நாகப்பட்டிணம் நோக்கி வந்த பாரிய மரக்கலம் ஒன்று புயலில் அகப்பட்டு ஊர்காவற்றுறையை அடைந்து தரை தட்டிவிட்டது. இந்த நேரத்தில், படையெடுத்தால் அவை அனைத்தையும் இழக்கவேண்டும். சங்கிலி மன்னனிடம் தந்திரமாகவும் பேசி தரைதட்டிய மரக்கலத்தையும் பொருட்களையும் முதலில் மீட்க வேண்டும். தருணம் பார்த்து படையெடுக்கலாம்".

யாருடைய அதிர்ஷ்டமோ யுத்தம் சந்தர்ப்பத்தால் நின்றது.

சங்கிலியைச் சந்திக்க போர்த்துக்கேயத் தூதுவர்கள் ஐவர் வந்தனர். அவர்களுடைய சம்பாசணையிலிருந்து அவர்கள் மன்னனின் சக்தியைப் புரிந்தவர்களாக காணப்பட்டார்கள். மன்னனின் விருப்பின்றி யாழ்ப்பாணத்தில் எதுவும் ஆற்ற முடியாது என்பதை நன்கு புரிந்தவர்களாக இருந்தனர். மன்னார் சம்ஹாரத்தின் பின் மன்னனின் ஆற்றலையும் பிடிவாதகுணத்தையும் நன்கு புரிந்துகொண்டார்கள்.

"தங்கள் சமூகத்திற்கு பணிவான வணக்கம் உரித்தாகுக".

"வருக...எதிர்பார்த்தேன். நெடுந்தீவில் தரைதட்டிய தங்கள் மரக்கலத்தை, எது விதமான எதிர்பார்ப்புமின்றி மகாமந்திரி விடுவித்தார். அதைப்போல இம்முறை ஊர்காவற்றுறையில் தரை தட்டிய கலத்தையும் எதிர் பார்க்கிறீர்களோ?"

போர்த்துக்கேய தூதுவர்கள் சற்றுநேரம் அமைதியானார்கள். ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். மன்னன் குறுக்கிட்டான்.

"நமது இராச்சியத்திற்கு வருமானம் தருவதில் ஒன்று தரைதட்டிய மரக்கலங்கள். இது கொள்ளையல்ல. வழமை. பரம்பரை பரம்பரையாக நிலவிவரும் வழக்கம்."

"அப்படி நாங்கள் கருதவில்லை...நீங்கள் இம்முறை கருணை கூர்ந்து அக்கலத்தை விடுவிக்க வேண்டும். அதில் எங்களுடைய ஊதியமும் உள்ளது."

செங்கை ஆழியான்

(தொடரும்)

# தமிழனின் தீக்காயங்கள்...!!

**அண்மையில் அவுஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கு வந்தபொழுது படையினரால் கடத்தப்பட்டு சித்திரவதைகளை அனுபவித்த குமார் என்ற தமிழ் இளைஞனின் கதை-**
***அவுஸ்திரேலியன் புரோட்காஸ்ரிங் கோப்பிரேசன் றிப்போர்டர் ஹீதெர் இவார்ட்***

தற்போது மெல்போர்னில் வாழும் இலங்கைத் தமிழ்க் குடும்பம் ஒன்று மிகப்பயங்கரமான இரகசிய சம்பவம் ஒன்றை அண்மையில் தெரிவித்துள்ளனர். இந்தக் குடும்பத்தின் பெற்றோர்கள் தமது அடையாளங்களை வெளிப்படுத்த அச்சப்படுகின்றனர். இந்தக் குடும்பத்தின் தந்தையார், அவரது தாய்நாடான இலங்கைக்குச்சென்றபோது, உந்துருளி விபத்தொன்றின்போது காயமடைந்ததாக, தமது மூன்று இளம் மகள்மாரிடம் கூறியிருந்தார். ஆனால், இந்தத் தந்தையுடன் தொடர்புபட்ட இந்தக் கதை உண்மையில் வேறுபட்டது. அனைவரையும் அதிர்ச்சியில் உறையவைக்கிறது.


அதாவது, குமார் என இங்கு அடையாளப்படுத்தப்படும் இப்பிள்ளைகளின் தந்தையார், தான் மூன்று வாரங்களுக்கு முன்னர் கடத்தப்பட்டதாக கூறிகிறார். இலங்கை இராணுவ புலனாய்வாளர்களால் கடத்தப்பட்ட இவர், பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு துன்புறுத்தப்பட்டார்.

குமார் தெரிவிக்கையில், "எனக்கு இரத்தம் வெளியேறியது. நான் நிர்வாணமாக்கப்பட்டேன். நித்திரை கொள்வதற்கு எனக்கு இடம் இருக்கவில்லை. நான் நாய் போல தரையில் கிடந்தேன். சாகவேண்டும் போல் இருந்தது. ஆனால், நான் எனது பிள்ளைகள் மற்றும் குடும்பத்துடன் சென்று வாழவேண்டும் என நினைத்தேன்."

2008 இல் குமார் அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச்சென்றார். இவர் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர் எனக்குற்றம் சாட்டப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையிலேயே அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச்சென்றார். தான் பாடசாலைப் பேரூந்து சேவைக்கான சாரதியாக கடமையாற்றியபோது விடுதலைப் புலிகள் கொஞ்சப் பொதி களைக் கொண்டு செல்லுமாறு வற்புறுத்தியதாகவும் குமார் தெரிவிக்கிறார். இச்சம்பவத்தால் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்ததன் பேரில் தன்னிடம் இலங்கை இராணுவப் புலனாய்வினர் விசாரணை மேற்கொண்டு அச்சுறுத்தியதாகவும் அவர், கூறுகிறார்.

"இதனால், நான் அச்சமடைந்தேன் இந்நிலையில் தொடர்ந்தும் இலங்கையில் வாழ்வது பாதுகாப்பற்றது எனக் கருதினேன்" என்றும் குமார் குறிப்பிட்டுள்ளார்.

குமார் அவுஸ்திரேலியாவுக்கு வந்ததன் பின்னர் சமயலாளராக வருவதற்கான கற்கை நெறியைக் கற்றார். கடந்த ஆண்டு இவர் உள்ளூர் உணவு விடுதி ஒன்றில் தொழில் நுழைவு விசாவில் வேலை செய்து கொண்டிருந்தபோது இவரது குடும்பத்தவர்கள் குமாருடன் இணைந்து கொண்டனர். ஆனால், இவ்வாண்டு மார்ச் இறுதிப்பகுதியில் தனது சொந்த நாடான இலங்கைக்குச்செல்லவேண்டிய தேவை குமாருக்கு ஏற்பட்டது. இச்சமயம்தான் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார் என்று தெரிவிக்கும் குமார், "நான் இலங்கைக்கு மார்ச் 30. 2013 சென்றிருந்தபோதே சித்திரவதைக்குட்படுத்தப்பட்டேன்; அங்கு சென்ற முதலாவது நாள் இது நடந்தது" என மேலும் கூறுகிறார்.



குமார், இலங்கையைச் சென்றடைந்தபின்னர் வெள்ளைவானில் கடத்தப்பட்டார். வெள்ளைவானில் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டார். எந்தவொரு காரணமுமின்றி குமார் தாக்கப்பட்டார்.

தானும் தனது சகோதரர்களும் தனது மாமாவின் உணவு விடுதிக்குச் சென்று கொண்டிருந்தபோது வெள்ளைவானில் வந்த இருவர் தம்மை மறித்ததாகவும், தன்னைக் கடத்தியவர்கள் தனது தலையில் தாக்கினர்என்றும்தெரிவித்தார். மேலும் குமார், "தாக்கியவர்கள் தாங்கள் இராணுவப்புலனாய்வினர் என எனது சகோதரர்களிடம் கூறினார். அதன் பின்னர் அவர்கள் என்னை வெள்ளைவானில் கவட்டிக்கொண்டு சென்றனர். எனது கண்களை கறுப்புநிறத் துணியால் இறுகக்கட்டினர்" எனத் தெரிவித்தார்.

இறுதியாக வெள்ளைவான் ஓரிடத்தில் நிறுத்தப்பட்டு குமாரின் கண்களைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த கறுப்புநிறத்துணி கழற்றப் பட்டது.

"அது ஒரு இருட்டறையாகும். அங்கே மங்கிய ஒளி காணப்பட்டது. அந்த அறையின் சுவர்களில் காணப்பட்ட இரத்தம் காய்ந்திருந்தது" என்றார் குமார்.

இராணுவப்புலனாய்வாளர்கள் என தம்மை அடையாளப்படுத்தியோர் தன்னை விசாரணை செய்ததாகவும், தன்னை விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையதாகவும் குற்றம் சாட்டியபோது, தொடர்ச்சியாக தான் அதனை மறுத்ததாகவும் குமார் கூறுகிறார்.

"இதன்பின்னர் அவர்கள் என்னை அடித்தார்கள். எனது முதுகில் உதைத்தனர் தற்போது எனது முள்ளந்தண்டில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது."

அதன்பின்னர் என்ன நடந்தது? அவர்கள் உங்களுக்கு வேறு என்ன செய்தார்கள்? என செய்தியாளர் வினவியபோது,

குமார், "அங்கிருந்த இருவர் நன்றாக குடித்திருந்தார்கள். அவர்கள் உடல் மீது கைவைத்தார்கள். என்னைப்பாலியல் சித்திரவதைப் படுத்தினார்கள்.

அவர்கள், எனது மலவாயிலில் ஐஸ்கட்டியை வைத்தார்கள். இது போன்று மூன்றுதடவைகள் வரை செய்தார்கள். இவர்கள் இவ்வாறு மூன்றாவது தடவை செய்தபோது நான் மயக்கமடைந்தேன்."

நான்காம் மற்றும் இறுதிநாள் எனது முதுகில் சூடான இரும்புக் கம்பிகளால் குறிவைத்தார்கள்.

அது, எனது வாழ்வின் கடைசி நாள் என நான் நினைத்தேன். நான் அப்போது மயக்கமடைந்தேன்."

தற்போது நீங்கள் குணமடைந்து விட்டீர்களா? என்று செய்தியாளர் கேட்டபோது அவர், தனக்கு முதுகில் ஏற்பட்டுள்ள காயங்களைக் காண்பிப்பதற்காக தனது மேலாடையை உயர்த்தினார்; இது மிகவும் பயங்கரமானது.

தன்னைப்பிடித்து வைத்திருந்தவர்களுக்கு தனது மாமா 20 ஆயிரம் அமெரிக்க டொலர்களை லஞ்சமாக வழங்கியதன் பின்னரே தான் விடுவிக்கப்பட்டதாக குமார் கூறுகிறார். இவர் இருவாரங்களின் முன் னர் மெல்பேர்னுக்கு திரும்பியிருந்தார்.

தமிழர் அகதிகள் சபை....

தொடரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மின் கட்டணத்தில் அரசாங்கத்தின் சலுகைகளை ஏற்கப்போவதில்லை

**அதிகரிக்கப்பட்டுள்ள மின் கட்டணங்கள் உடனடியாக குறைக்கப்படல் வேண்டும் என்று அறிவித்துள்ள தொழிற்சங்கங்களும் பொது அமைப்புகளும் சலுகைக் கட்டணங்களை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளது.**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது மேதின உரையின் போது, மக்களுக்கு சலுகை அடிப்படையில் மின் வழங்கப் போவதாக அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே தொழிற்சங்கங்களும் சிவில் அமைப்புக்களும் மேற்கண்டவாறு அறிவித்துள்ளன.

இந்நிலையில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவுக்கு எதிராக தேசிய மின் நுகர்வோர் இயக்கம் எடுக்கவிருந்த சட்ட நடவடிக்கையை மேதினம் வரையிலும் ஒத்திவைத்துள்ளதாக அவ்வியக்கம் தெரிவித்துள்ளது.

அதேசமயம் மின் கட்டண உயர்வுக்கு எதிராக 20 தொழிற்சங்கங்கள் இணைந்து ஏற்படுத்தியுள்ள தேசிய இயக்கம், அரசாங்கத்தின் சலுகைகளை ஏற்கப் போவதில்லை எனவும் திட்டமிட்டபடி எதிர்வரும் 9 ஆம் திகதி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்படும் எனவும் கூறியுள்ளன.

நாம் சலுகைகளை ஏற்கப்போவதில்லை. ஏனெனில் சகல துறையினருக்கும் ஏற்பட்டுள்ள பெரும் செலவை ஈடுசெய்ய சலுகைகளால் முடியாது என குறித்த இயக்கத்தின் பேச்சாளர் சமன் தேசப்பிரிய தெரிவித்துள்ளதோடு அரசாங்கம் மக்களிடையே வெறுப்பை சம்பாதித்துள்ளது.

அரசாங்க சார்பு தொழிற்சங்கங்களும் மின் கட்டண உயர்வை வெளிப்படையாக கண்டித்துள்ளன என தேசிய தொழிற்சங்க மையத்தின் தலைவர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார். (அ-2)

# வவுனியா நகரசபையில் ஆவணங்கள் சில தீக்கிரை

வவுனியா நகரசபையினரால் பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணங்கள் சில தீயிடப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரசபை உறுப்பினர்கள் சபை கூட்டங்களில் கலந்து கொள்ளும் போது கையொப்பம் இடப்படுகின்ற பதிவேட்டுப் புத்தகம் நகரசபை உத்தியோகத்தர்கள் சிலரின் உதவியுடன் தீயிடப்பட்டுள்ளதுடன் தீயில் எரிந்த நிலையில் அதன் சில பகுதிகள் மக்களால் மீட்கப்பட்டுள்ளன.

நகரசபை உறுப்பினர் ஒருவரை இடைநிறுத்துவதற்கான முயற்சிகள் நகரசபை நிர்வாகத்தாலும், சில நகரசபை உறுப்பினர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதன் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் அவ் உறுப்பினர் ஒழுங்காக கூட்டங்களுக்கு வருவதில்லை என்பதை வெளிப்படுத்துவதற்காகவே பேணப்பட வேண்டிய இவ் ஆவணங்கள் எரிக்கப் பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வவுனியா நகரசபைத் தலைவர் ஜ.கனகையாவைத் தொடர்பு கொண்டு கேட்ட போது இது பற்றி தனக்கு எதுவும் தெரியாது என பதில் அளித்துள்ளார்.

நகரசபைச் செயலாளர் எஸ்.வசந்தகுமார் தெரிவிக்கையில், உண்மையான ஆவணங்கள்தான். ஆனால், எவ்வாறு எரிக்கப்பட்டன என தெரியாது. இது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவரின் வேலை பறிபோகும். இதனால் மெதுவாக விசாரிக்கிறேன் எனத் தெரிவித்தார். (அ-2-250)

# அமெ.தூதரின் பேச்சு குறித்து அரசாங்கம் விசாரணை

### *சிங்கள ஊடகம் தகவல்*

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரின் இரகசிய பேச்சுவார்த்தைகள் தொடர்பில் அரசாங்கம் விசாரணையை ஆரம்பித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இராஜதந்திர நியதிகளை மீறி அமெரிக்கத் தூதுவர் மிச்சல் ஜே.சிசன் மட்டக்களப்பு முஸ்லிம் பிரதிநிதிகள் 25 பேரைக் கொழும்பிற்கு அழைத்து இரகசிய பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்த இரகசிய பேச்சுவார்த்தை குறித்து வெளிவிவகார அமைச்சுக்கு அறிவிக்கப்படவில்லை. இதில் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த இரகசிய பேச்சுவார்த்தையானது 1961 ஆம் ஆண்டு வியன்னா பிரகடனத்திற்கு முரணானது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)




வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்திய மேழிக்குமரனின் ஆறு நூல்களின் அறிமுக விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆய்வாளர்கள் விழா மேடையில் அமர்ந்திருப்பதையும் சபையினரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-குருமன்காடு)

# 2.9 மில்லியன் சாரதிகள் விதிகளை மீறுகின்றனர்

இலங்கையில் 3.8 மில்லியன் வாகன சாரதிகளில் 2.9 மில்லியன் வாகன சாரதிகள் மேல் மீது வீதி ஒழுங்குக்ளை மீறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்து பொலிஸ் நிர்வாக அதிகாரி அமரசிறி சேனாரட்ன இந்தக் குற்றச் சாட்டை சுமத்தியுள்ளார்.

வாகன பதிவாளரின் அறிக்கையின் படி கடந்த வருடத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களில் 6 இலட்சம் வாகனங்கள் போலியான ஆணவங்கள் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, பணக்கார குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் பெருமளவில் வீதி ஒழுங்குகளை மீறுகின்றனர் என்றும் சேனாரட்ன சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# வணிக புள்ளிவிபரவியல் பாடத்தை நீக்க கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

உயர்தரத்தில் வணிக புள்ளிவிபரவியல் பாடத்தை நீக்குவதற்கு இலங்கையின் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாடத்தை தெரிவு செய்ய உத்தேசித்த அல்லது ஏற்கனவே தனியார் வகுப்புக்களில் இந்தப் பாடத்திற்கான வகுப்புகளுக்குச் செல்லும் மாணவ,மாணவியர் இந்தத் தீர்மானத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு வணிக புள்ளிவிபரவியல் பாடத்தை தெரிவு செய்ய அனுமதியளிக்க வேண்டாம் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அண்மையில் கொழும்பு மாவட்ட தேசிய பாடசாலைகளின் அதிபர்களிடம் கோரியிருந்தார்.

பொருளியல்,வணிகக் கல்வி மற்றும் கணக்கீடு ஆகிய பாடங்களையே மாணவர்கள் கற்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் 746 மாணவ, மாணவியர் வணிக புள்ளிவிபரவியல் பாடத்தை தெரிவு செய்திருந்தனர். கடந்த ஆண்டில் இந்த எண்ணிக்கை 912 ஆக உயர்வடைந்திருந்தது. மாணவர்களின் அடைவு மட்டம் 2011 ஆம் ஆண்டில் 41 வீதமாகவும் 2012 ஆம் ஆண்டில் 61 வீதமாகவும் காணப்பட்டது.

வணிகக் கல்வி பாடத்தை இரத்து செய்வது தொடர்பான சுற்றுநிருபம் எதிர்வரும் வாரங்களில் வெளியிடப்பட்டவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# மிதிவண்டிகளாலும் விபத்துக்கள்

(புளியம்பொக்கணை)

பரந்தன்-முல்லை. பிரதான வீதி மற்றும் உள்வீதிகளில் இரவு நேரங்களில் துவிச்சக்கர வண்டிகள் வெளிச்சம் இன்றிப் பயணிப்பதால் விபத்துக்கள் அதிகரிப்பதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரவுவேளைகளில் பயணிக்கும் பல துவிச்சக்கர வண்டிகள், மின்விளக்கு இன்றியும் இரவு நேர ஒளிர்க்கறக்ள் பொருத்தாமலும் பயணிப்பதால் விபத்துக்கள் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே, உரிய அதிகாரிகள் இதனை கவனித்தில் கொண்டு உரிய நடவடிக்கையினை எடுக்குமாறு பயணிகள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (அ-3-263)

# ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு விழா

(சிவநகர்)

அண்மையில் வெளிவந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் சாதனை படைத்த கிளி/ புனித தெரேசா மகளிர் கல்லூரியில் சித்தி எய்திய மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நாளை வியாழக்கிழமை கிளி/ புனித திரேசா மகளிர் கல்லூரியில் கல்லூரி அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் இப்பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்கள், அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்கள் ஆகியோர் சான்றிதழ், பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் சாதனை படைத்த மேற்குறித்த பாடசாலையில் 37 மாணவர்கள் தோற்றி 34 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இதில் 8 பேர் விஞ்ஞானப் பிரிவிற்கும் 20பேர் வர்த்தகப் பிரிவிற்கும் 6 பேர் கலைப்பிரிவிற்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்பெறுபேறுகளின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இப்பாடசாலை 91 வீதம் சித்தி அடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-3-254)

# விடுமுறைநாள்

(யாழ்ப்பாணம்)

மேதினதினத்தை முன்னிட்டு இன்று சகல சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கும் விடுமுறை நாளாக்கப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் அறிவித்துள்ளது. (அ)

# இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக கடும் தீர்மானம்

இலங்கை அரசுக்கு எதிராக 7ஆம் திகதி கடுமையான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

கட்சியின் தேசிய அமைப்பாளர் சபீக் ரஜாப்டீன் இது குறித்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

அன்றைய தினம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெறும் கட்சியின் உயர் பீடக்கூடத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக ரஜாப்டீன் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடம் இருந்து உரிய தீர்வு கிடைக்காமையை ஆட்சேபித்தே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக ரஜாப்டீன் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய கல்லூரிகளில் டிப்ளோமாக் கற்கை நெறி

(கொழும்பு)

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் 2014/ 2016 ஆம் ஆண்டுக்கான இரண்டு வருட டிப்ளோமா கற்கைநெறிக்கு அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சையில் பங்குகொள்ள விரும்பும் தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி விவசாய டிப்ளோமா பாடநெறியானது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளது.

விவசாயம் சம்பந்தமான மேற்படி பாடநெறியில் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ள முடியும் என்பதோடு தமிழ், சிங்கள, ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் குறித்த கற்கை நெறியை தொடரமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி நெறி அனுமதிக்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் க.பொ.த.(சா/த)பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களிலும் கட்டாயமாக திறமைச் சித்தி பெற்றிருப்பதோடு சமூகக்கல்வி, விவசாயம், வரலாறு ஆகிய பாடங்களுள் ஏதாவது ஒன்றிலேனும் திறமைச்சித்தி பெற்றிருப்பதன் மூலம் 4 திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.மேலும் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சா/த)பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் . இவ்விரண்டு அமர்வுகளில் ஒன்றில் மூன்று திறமைச் சித்திகளுடன் குறைந்தது 5 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் க.பொ.த.(உ/த) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி தாவரவியல், இரசாயனவியல், பௌதீகம், விலங்கியல் விவசாய உயிரியல் ஆகிய ஆறு பாடங்களில் ஏதாவது மூன்றில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது மேற்படி க.பொ.த.(சா/த) சித்தியுடன் க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி தாவரவியல், இரசாயனவியல்,பௌதீகம், விலங்கியல், விவசாயம், உயிரியல் ஆகிய ஆறுபாடங்களில் ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

எனினும் க.பொ.த உயர்தரத்தில் கணிதப் பிரிவில் கற்ற மாணவர்கள் இரசாயனம் அல்லது பௌதீகவியல் பாடங்களில் சித்தியடைந்திருப்பினும் அது இக்கற்கை நெறி அனுமதிக்கான தகுதியாக கொள்ளப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது..

ஆங்கிலமொழியில் கற்கைநெறியை பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு ஆங்கில மொழியில் திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேலும் குறித்த விண்ணப்பதாரிகள் எதிர் வரும் மே மாதம் 31 ஆம் திகதியன்று 17 வயதிற்கு உட்படாமலும் 25 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமை உடைய பட்டதாரிகள் கடந்த 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிசக்குடியரசு வர்த்தமானி பத்திரிகையிலுள்ளவாறு மாதிரி விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து எதிர்வரும் மேமாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், விரிவாக்கம், பயிற்சி பிரிவு விவசாய திணைக்களம்,பேராதனை எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

இதன்போது பரீட்சைக் கட்டணமாக ரூ. 400 பெறுமதியான காசுக்கட்டளையொன்றை விவசாயப்பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு பேராதனை தபால் நிலையத்தில் மாற்றக்கூடியவாறு பெற்று விண்ணப்பப் படிவத்தின் சரியான இடத்தில் ஒட்டி அனுப்புவதோடு அதன் நிழற்பிரதியை வைத்துக் கொள்ளுதல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# புகையிரதத்தின் முன் பாய்ந்து ஒருவர் பலி

ஓடும் புகையிரதத்தின் முன் பாய்ந்து தமிழர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொம்பனித்தெரு புகையிரத நிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வத்தளை - ஹெந்தல பிரதேசத்தை சேர்ந்த 40 வயதுடைய குமாரசாமி துஷ்யந்த குமார் என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கோட்டையிலிருந்து மொரட்டுவ நோக்கி சென்று கொண்டிருந்த புகையிரதத்தின் முன்பே இவர் பாய்ந்துள்ளார்.

இது தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-2)

# இத்தாலியின் புதிய தூதுவராக பெனாட் குரே

இத்தாலியின் புதிய தூதுவராக கொலன்னாவ பிரதேசத்தின் முன்னாள் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் பெனாட்குரே நியமிக்கப்பட்டுள்ளார்.

பெனாட் குரே தற்போது பிலிப்பைன்ஸின் தூதுவராக கடமையாற்றி வருகின்றார்.

இத்தாலிக்கான தற்போதைய தூதுவர் ஹசித பெரேரா பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள போதிலும் அவர் நாடு திரும்பவில்லை.

மேலும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவராக தற்போது சட்டத்தரணி சரத் விஜேசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். (அ-2)

# அரசாங்கத்திற்குள் பிளவு; அதனால் மின்கட்டண உயர்வு

## ஐ.தே.க. தெரிவிப்பு

அரசாங்கத்தினுள் பிளவு ஏற்பட்டுள்ளமை மின் கட்டண அதிகரிப்பின் மூலம் வெளிப்படையாக தெரிய வந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

முன்னாள் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் ஒன்று கூறினால் தற்போதையை எரிசக்தி அமைச்சர் அதற்கு எதிர்மாறாகக் கூறுகி றார். இதன் மூலமாக அரசாங்கத்தின் நெருக்கடி நிலைமைகள் புலப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரச நிறுவனங்களில் ஊழல் குற்றச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக இலங்கை மின்சாரசபை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகிய இரண்டும் மக்களுக்கு பெரும் சுமைகளாக அமை ந்து விட்டன என அவர் கூறினார்.

தனியார் துறை ஊழியர்கள் 85 வீதத்திற்குள் குறைவான சம்பளத்தையே பெறுவதாகவும் தனியார் துறை ஊழியர்களை அரசு பொருட்படுத்துவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# குரங்குகளின் உயிர்களை காவு கொள்ளும் மின் இணைப்பு

(கொழும்பு)

மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்துக்காக அமைக்கப்பட்டுள்ள மின்சார இணைப்பில் சிக்கி நாளொன்றுக்கு 20 தொடக்கம் 30 வரையிலான குரங்குகள் உயிரை மாய்பதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் தென் மாகாணத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காக மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான் நிலையத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சீனாவின் உதவியுடன் அமைத்துள்ளார்.

அதேவேளை இந்த விமான நிலையத்தினால் குரங்குகள் நாளாந்தம் பெருமளவில் உயிரிழந்து வருவதாகவும் இதுவரை பல நூற்றுக்கணக்கான குரங்குகள் உயிரை மாய்த்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அம்பாந்தோட்டையில் இருந்து விமான நிலையத்துக்காக 33 ஆயிரம் மெகாவோட்ஸ் திறனுள்ள உயர் அழுத்த மின்சார இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

செலவுகளைக் குறைப்பதற்காக இந்த மின் இணைப்பு சரணாலயம் வழியாக செய்யப்பட்டுள்ளது.

சரணாலயம் பகுதியில் 13 கி.மீ. வரை அமைக்கப்பட்டுள்ள இந்த மின்சார இணைப்புகளில் பாயும் உயர் அழுத்த மின்சாரத்தை அறியாமல் குரங்குகள் அவற்றின் மீது ஏறி தாவுகின்றன.


இதனால் நாளொன்றுக்கு 20 தொடக்கம் 30 வரையிலான குரங்குகள் உயிரிழந்து வருகின்றன.

குரங்குகள் மின்சாரத்தினால் தாக்கப்படும் ஒவ்வொரு முறையும் விமான நிலையத்துக்கான மின்சாரம் சில நிமிடங்கள் தடைப் படுகின்றது.

இதனால் விமான நிலையத்தில் உள்ள உயர் திறன் கொண்ட ரேடர் கருவி பாதிக்கப் படுகிறது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக மத்தல விமான நிலைய அதிகாரிகள் மின்சார சபை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளனர். (அ-2)

# ஜனாதிபதி விருது பெற்று சாதனை



வடமாகாணத்தில் முதன் முதலாக வவுனியாவைசேர்ந்த இரு பெண் சாரணியர் ஜனாதிபதி விருது பெற்று சாதனை படைத்துள்ளனர் என சாரணர் அமைப்பின் வவுனியா மாவட்ட ஆணையாளர் எம்.எஸ் பத்மநாதன் அறிவித்துள்ளார்.

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி பெண் சாரணர் குழுவைச் சேர்ந்த மாணவிகளான நிலாந்தி சிவஞானசுந்தரம், செல்வி இராசலிங்கம் நிலானி ஆகிய இருவருமே சாரணர் உயர் விருதான ஜனாதிபதி விருதினைப் பெற்றுள்ளனர்.

அகில இலங்கை ரீதியில் பெண் சாரணர்கள் ஜனாதிபதி விருதினை பெற்றுக் கொண்ட வரிசையில் 5 ஆம், 6 ஆம் நிலைகளில் உள்ள இவ்விருவரும் வவுனியா மாவட்ட சாரணர் சமூகத்திற்கும் கல்லூரிக்கும் பெருமையைத் தேடித்தந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2-266)

# இலங்கைக்கு எதிரான நடவடிக்கை எமது வர்த்தகத்தை பாதித்துள்ளது


## சென்னை வர்த்தக சமூகம் கவலை

தென் இந்தியாவில் சில தரப்பினரால் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மாறுபட்ட நடவடிக்கைகள் காரணமாக தமது வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதாக சென்னை வர்த்தக சமூகம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இலங்கையர்கள் தமிழகத்திற்கு வருவதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்விடயத்தில் எழும்பூர் மகா போதி மடத்தைச் சேர்ந்த கலவான மஹாநாமதேரர் தலையிட்டு இலங்கையில் இருந்து அதிகளவானவர்களை தமிழகத்திற்கு அழைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி வர்த்தக சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதவிர விசேட மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக தமிழ்நாடுவரும் இலங்கையர்கள் தற்போது கர்நாடகா மற்றும் ஆந்திரா போன்ற மாநிலங்களுக்கு செல்வதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)



யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்வி கற்று கடந்த ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்று பல்கலைக்கு தெரிவான வாழ்வக மாணவன் செ.தர்மனிற்கு ஆளுநர் நிதியில் 12 இலட்சம் ரூபாவும் அவரது கண்சிகிச்சைக்கான நிதியுதவியும் ஆளுநர் பணிமனையில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டது. இதன் போது வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறி மாணவனுக்கு நிதியினை வழங்குவதையும் அருகில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம். (படம்:-என். குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய இனப்பிரச்சினை... லெனினின் சிந்தனைகள்




சோவியத் யூனியன் பிளவடைந்து விட்டாலும் மார்க்சியவாதமும் லெனினிச வாதமும், உலகிலிருந்து அழிந்துவிட வில்லை. அவை, இன்றும் உலகப்பாட்டாளி களுக்கு அவசியமான கொள்கைகளா கவே இருக்கின்றன. முதலாளித்துவ மானது தனது சொகுசு வாழ்க்கைக்காக உலகத்தை சிதைத்து வருவது கண்கூடு. போட்டாபோட்டிகளும் யுத்தங்களும் வன்முறைகளும் பயங்கரவாதங் களும் பகற்கொள்ளைகளும் பண்பாட்டுச் சிதைவுகளும் உயிர்ப்பயங்களுமாக உலகம் முதலாளித்துவத்தின் தலைமைத் துவத்தின்கீழ் மிகப்பெரிய பயங்கரங் களைக் கண்டுகொண்டிருக்கும் இவ் வேளையில் நிச்சயம் தொழிலாளிவர்க் கம் தனது நிலையைப் புரிந்துகொள் வதும், தனது பயமற்ற அமைதியான சந்தோசமான வாழ்க்கையை மீட்டுக் கொள்வதற்கும்பூமிப்பந்தின் இயற் கைநிலையைப் பேணிப்பாது காப்பதற்கு மாக இக்காலத்திற்கு ஏற்றவகையில் மார்க்சிய லெனினிசத்தை புரிந்து கொள்வது அவசியமாகும். தொழி லாளர் தினமாகிய இன்று ஈழத்தமிழரா கிய நாம் தேசிய இனப்பிரச்சினை சார்ந்து லெனின் கூறிய பல்கருத்துக் கள் எமக்கு விடைபகர்வனவாக அமைந்திருப்பதையும் இங்கு மனங் கொள்ள வேண்டும்.

மனித குல வரலாற்றிலேயே முதல் முறையாக உழைக்கும் மக்களை, ஒடுக்கப்படும் மக்களை ஒன்று திரட்டி ஆளும் வர்க்கங்களை வீழ்த்தி மக்களுக்காக அரசு அதிகாரத்தை கைப் பற்றி ரஷ்யப்புரட்சிக்கு தலைமை தாங்கியவர் லெனின். தனது 40 ஆண்டுகால போராட்ட வரலாற்றில் உழைக்கும் மக்களின் நலனோடு தொடர்புடைய அனைத்து பிரச் சினைகளைப் பற்றியும் விரிவாகவும் முழுமையாகவும் விளக்கியிருக்கிறார் லெனின்.

தோழர் லெனின் முதலாளித் துவ தேசிய இனவாதத்துக்கு எதி ராக முன்வைக்கும் சில குறிப்புக் களை பார்ப்போம்.

தொழிலாளி வர்க்க ஜனநாயகத் தின் கோஷம், தேசிய இனக் கலா சாரம் அல்ல. ஜனநாயகத்தின் உலகு தழுவிய தொழிலாளிவர்க்க இயக் கத்தின், சர்வதேசியக் கலாசாரம் ஆகும். எல்லாவிதமான நேர்முக தேசிய இன வேலைத்திட்டங்களை யும் கொண்டு முதலாளி வர்க்கம் மக்களை ஏமாற்றட்டும்: வர்க்க உணர்வு படைத்த தொழிலாளி அதற்கு கூறும் பதில் இதுதான்: தேசிய இனப்பிரச்சினைக்குரிய தீர்வு, (முதலாளித்துவ உலகில், இலாபத் துக்கும் சண்டை சச்சரவுக்கும் சுரண்ட லுக்குமான உலகில், பொதுவாக இப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடி யும்படியான அளவுக்கு) ஒன்றே ஒன்றுதான்: முரணற்ற ஜனநாயகம் ஒன்றேதான், அந்தந்தீர்வு. தொழி லாளி வர்க்க ஜனநாயகத்தின் தேசிய இன வேலைத்திட்டம் வருமாறு:

எந்த தேசிய இனத்திற்கும் எந்த மொழிக்கும் எந்தவிதமான தனியுரிமை களும் இல்லவே இல்லை; தேசிய இனங்களது அரசியல் சுயநிர்ண யப் பிரச்சினை, அதாவது, அவை அரசுகளாகப் பிரிந்து செல்லும் பிரச்சினை, முழு அளவுக்குச் சுதந் திரமான, ஜனநாயகமான வழியில் தீர்க்கப்படுதல்; எந்த ஒரு தேசிய இனத்துக்கும் எந்த விதமான சிறப் புரிமையும் அளிப்பதாகவோ, தேசிய இனங்களது சமத்துவத் துக்கு அல்லது தேசிய இனச் சிறு பான்மையினரது உரிமைகளுக்கு ஊறு செய்வதாக இருக்கும்படி யான எந்த நடவடிக்கையும் சட்ட விரோதமானதென்றும், செய லுக்கு வரமுடியாததென்றும் பிரக டனம் செய்து, இம்மாதிரியான நடவடிக்கை அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானதாக அறிவிக்கப்பட்டு நீக்கப்பட வேண் டும் என்றும், இதனைச் செயல் படுத்த முயலுவோர் குற்றவாளி கள் எனத் தண்டிக்கப்பட வேண் டும் என்றும் கோருவதற்கு எந்தக் குடிமகனுக்கும் உரிமை அளித்தி டும் சட்டம் ஒன்றை அனைத்து அரசுக்குமாகப் பிறப்பித்தல்.

மொழிப்பிரச்சினை குறித்தும் இதையொத்த பிற பிரச்சினைகள் குறித்தும் பல்வேறு முதலாளித்துவக் கட்சிகளும் நடத்தும் தேசியவாதச் சச்சரவுகளுக்கு எதிராக தொழி லாளிவர்க்க ஜனநாயகம் என்ன கோருகிறது என்றால், எந்த விதமான குட்டிமுதலாளித்துவ தேசியவாதத் திற்கும் நேர்மாறான முறைகளில், எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களும், எல்லாத் தொழி லாளி வர்க்க நிறுவனங்களிலும் தொழிற்சங்கங்களிலும், கூட்டுறவுக் கழகங்களிலும் நுகர்வாளர் சங்கங் களிலும் கல்விக் கழகங்களிலும் ஏனைய எல்லாவற்றிலும் - நிபந்தனை யின்றி ஐக்கியமடையவும்,. ஒருங் கிணையவும், வேண்டும். இம்மாதிரி யான ஐக்கியத்தாலும் ஒருங்கிணை வாலும் மட்டுமே, ஜனநாயகத்துக்காக முனைந்து நின்று பாடுபட முடியும். மூலதனத்துக்கு எதிராக- மூலதனம் ஏற்கனவே சர்வதேசிய தன்மை யைப் பெற்றுள்ளது, மேலும் மேலும் சர்வதேசியத் தன்மையைப் பெற்று வருகிறது. ஆகவே, தொழி லாளர்களது நலன்களைப் பாதுகாத்து நிற்க முடியும். எல்லாத் தனியுரிமை களுக்கும் எல்லாச் சுரண்டல்களுக்கும் அந்நியமான புதிய வாழ்க்கை முறையை நோக்கி மனிதகுலம் வளர்ச்சியுறுவதற்காகப் போராடவும் முடியும்.

மிதவாத முதலாளித்துவ தேசிய வாதம் எல்லாம் தொழிலாளர்கள் மத்தியில்மிகப் பெரியளவில் சீர்கேட்டை உண்டாக்குகின்றன; சுதந்திர இலட்சியத்தற்கும் பாட்டாளி களின் வர்க்கப்போராட்ட இலட் சியத்திற்கும் மிகப்பெரிய அளவில் தீங்கு இழைக்கின்றன என்பதுதான் உண்மை. இந்த முதலாளித்துவப் போக்கானது, தேசிய இனக்கலாசாரம் என்ற கோஷத்துக்குப்பின்னால் ஒளிந்துகொண்டிருப்பதால், இது மேலும் அதிக அபாயம் விளைவிப் பதாகிவிடுகிறது.

மார்க்சியக் கோணத்தில், அதாவது வர்க்கப்போராட்டத்தின் கண்ணோட் டத்திலிருந்து பார்ப்போமாயின், கோஷங்களை அர்த்தமற்ற பொதுக் கோட்பாடுகளோடும் பகட்டுப் பேச்சு களோடும் அல்லாமல், வர்க்கங்களது நலன்களோடும் கொள்கைகளோடும் ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் இன் றைய தேசிய இன வாழ்க்கையின் உண் மைகள் மேற்கூறியவாறே உள்ளன.

தேசிய இனக் கலாசாரம் என்னும் கோஷம் முதலாளிகளின் ஏமாற்று வித்தையாகும். நம்முடைய கோஷம் ஜனநாயகத்தின், உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சர்வதேசிய கலாசாரமாகும்.

தேசிய இனக் கலாசாரம் ஒவ் வொன்றிலும்- வளர்ச்சியடைந்த வடிவில் இல்லை என்றாலும் ஜனநாயக சோஷலிசக் கலாசாரத்தின் கூறுகள் எப்படியும் இருக்கவே செய்கின்றன. ஏனென்றால், ஒவ் வொரு தேசிய இனத்திலும் உழைப் போரும் சுரண்டப்படுவோருமான மக்கள் திரளினர் இருக்கிறார்கள். இவர்களது வாழ்க்கை நிலைமை கள் தவிர்க்கவொண்ணாதவாறு ஜனநாயக, சோஷலிச சித்தாந் தத்தை உதித்தெழச் செய்கின்றன. ஆனால், ஒவ்வொரு தேசிய இனத் திலும் முதலாளித்துவ கலாசார மும் இருக்கிறது- கூறுகளின் வடி வில் அல்ல, ஆதிக்கம் செலுத்தும் கலாசாரத்தின் வடிவில் இருக் கிறது. ஆகவே, பொதுவான தேசிய இனக் கலாசாரம் என்பது நிலப் பிரபுகள், சமய குருமார்கள், முத லாளி வர்க்கத்தார் ஆகியோரது கலாசாரமாகும்.

ஜனநாயத்தின் உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்தன் சர்வதேசியக் கலாசாரம் என்ற கோஷத்தை முன் வைக்கும் நாம், தேசிய இனக் கலா சாரம் ஒவ்வொன்றின் இடமிருந்தும் அதன் ஜனநாயக சோஷலிசக் கூறு களை மட்டும்தான் எடுத்துக் கொள் கிறோம். ஒவ்வொரு தேசிய இனத் துக்கான முதலாளித்துவ கலாசாரத் தையும் முதலாளித்துவ தேசியவாதத் தையும் நிபந்தனையின்றி எதிர்ப் பதற்காக மட்டும்தான் அவற்றை எடுத்துக் கொள்கிறோம். எந்த ஜன நாயகவாதியும், இன்னும் அதிகமாக எந்த மார்க்சியவாதியும், மொழிகளது சமத்துவத்தை மறுக்கவோ, சொந்த மொழியிலேயே சொந்த நாட்டு முத லாளிவர்க்கத்தாருடன் வாக்குவாதம் புரிவதும் சொந்த நாட்டு விவசாயி களிடையிலும் குட்டிமுதலாளித் துவத்தினரிடையேயும் சமய குருமார் எதிர்ப்பு அல்லது முதலாளித்துவ எதிர்ப்புக் கருத்துகளையும் பிரசாரம் செய்வதும் அவசியமென்பதை மறுக்கவோ இல்லை.

முதலாளித்துவ தேசியவாதமும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாத மும் இணக்கம் காணமுடியாத பகைமை கொண்ட இருவேறு கோஷங்களாகும். இவை, முதலா ளித்துவ உலகில் முழுமையிலும் நிலவும் மாபெரும் இரு வேறு வர்க்க முகாம்களுக்கு ஏற்ப அமைந்து, தேசிய இனப்பிரச்சினையில் இருவேறு கொள்கைகளின் (மேலும் இருவேறு உலகக் கண்ணோட்டங்களில்) வெளிப் பாடுகளாக விளங்குகிறவை.

வளர்ந்து செல்லும் முதலாளித்து வமானது, தேசிய இனப் பிரச்சினை யில் இரண்டு வரலாற்றுப் போக்கு களை அறிந்திருக்கிறது. ஒன்று, தேசிய இன வாழ்க்கையும் தேசிய இன இயக்கங்கள் துயிலெழுதலும், எல்லாவிதமான தேசிய இன ஒடுக்கு முறைக்கும் எதிராக போராட்டம் மூளுதலும், தேசிய இன அரசுகள் அமைக்கப்படுதலும்.

இரண்டாவது, எல்லா வடிவங் களிலும் தேசிய இனங்களிடையே ஒட்டுறவு வளர்ந்து மேலும் மேலும் துரிதமாதலும், தேசிய இனப்பிரிவி னைச் சுவர்கள் தகர்க்கப்படுதலும், மூலதனத்தின், பொதுவாகப் பொரு ளாதார வாழ்வின், அரசியல், விஞ்ஞானம் முதலானவற்றின் சர்வ தேச ஒற்றுமை உருவாக்கப்படுதலும்.

இவ்விரு போக்குகளும் முதலா ளித்துவத்தின் உலகு தழுவிய விதியா கும். முன்னையது, முதலாளித்துவ வளர்ச்சியின் ஆரம்பத்தில் ஆதிக்க நிலையில் உள்ளது.

பின்னையது, முதிர்ச்சியடைந்து சோஷலிச சமூகமாக உருமாற்றம் பெறுவதை நோக்கிச் செல்லுகின்ற முதலாளித்துவத்தின் இயல்பினை வெளிப்படுத்துவதாகும்.

மார்க்சியவாதிகளது தேசிய இன வேலைத்திட்டம், இவ்விரு போக்கு களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, பின்வருவனவற்றுக்காக பாடுபடுகிறது.

முதலாவது, தேசிய இனங்களின், மொழிகளின் சமத்துவத்துக்காகவும், இங்கு எந்தவிதமான தனியுரிமை களும் அனுமதிக்கப்படலாகாது என்பதற்காகவும்.

இரண்டாவது, சர்வதேசிய வாதம் என்னும் கோட்பாட்டுக்காகவும், முதலாளித்துவ தேசிய வாதத்தால்- பாட்டாளி வர்க்கம் நச்சுப்படுத் தப்படுவதை எதிர்த்து இணக்கத்துக்கு இடமில்லாமல் போராட்டம் நடத்த வேண்டும் என்பதற்காகவுமே.

மேற்கண்டவாறு இருவழிகளை யும் மார்க்சியவாதிகள் தமது வேலைத் திட்டமாக தேர்ந்தெடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுபலசேனாவுக்கு உதவி வழங்கவில்லை

## நோர்வே அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுபலசேனாவிற்கு நிதி உள்ளிட்ட எந்தவொரு உதவியையும் வழங்கவில்லை என நோர்வே அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியான செய்திகளை வன்மையாக கண்டிப்பதாகவும் அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் இனங்களுக்கு எதிராக செயற்படும் எந்தவொரு அமைப்பிற்கும் உதவியளிக்கப்பட மாட்டாது என அந்த அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நோர்வே தூதுவராலயத்தின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை உட்பட எந்தவொரு நாட்டிலும் இன,மத பேதங்களை ஏற்படுத்தவோ அல்லது அமைதியைச் சீர்குலைக்கும் விதத்திலோ நோர்வே எந்தவொரு பங்களிப்பையும் வழங்கவில்லை. அத்துடன் முஸ்லிம்களுக்கு எதிரான எந்தவொரு நிகழ்ச்சி நிரலும் தங்களிடம் கிடையாது.

எனினும் பொதுபலசேனாவின் உறுப்பினர்களுக்கு தமது நாடு சில வருடங்களுக்கு முன்னர் அழைப்பு விடுத்தமையையும் அவர்கள் அங்கு சென்றமையையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

எவ்வாறாயினும் குறித்த பிக்குகள் உள்ளிட்ட எட்டு பேர் கொண்ட குழுவானது பேச்சுவார்த்தைக்காகவே அழைக்கப்பட்டதாகவும் அவர்களுக்கு நோர்வே எந்த வகையிலும் நிதி உதவி வழங்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# 10 இலங்கையர்களிடம் பொலிஸார் விசாரணை

(சென்னை)

கேரளாவில் அண்மையில் கைது செய்யப்பட்ட 10 இலங்கையர்களிடம் தமிழ்நாடு பொலிஸ் கியூ பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கேரளா பொலிஸாரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த விசாரணைகள் இடம்பெறுகின்றன.

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்ல முயற்சிக்கையில் இவர்கள் கேரளா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில்தமிழகஅகதிமுகாம்களில் பதிவு பெற்றுள்ள இவர்கள் தீவிரவாத அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்களா? என்பதை அறிந்து கொள்ளவே தமிழக கியூ பிரிவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

# வேலைவாய்ப்பு பெற்று தென்கொரியா பயணம்

(கொழும்பு)

தென்கொரியாவில் வேலை வாய்ப்பினை பெற்று மேலும் ஒரு குழுவினர் இலங்கையிலிருந்து தென் கொரியா பயணமாகியுள்ளனர்.

சுமார் நூறு பேரைக் கொண்ட குழுவினர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பயணமானதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கொரிய மொழியில் தேர்ச்சி பெற்ற இவர்கள் தென்கொரியா தொழிற்சாலைகளில் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வடகொரியா மற்றும் தென்கொரியாவிற்கு இடையே யுத்த சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் இலங்கையில் இருந்து செல்லும் முதல் தொகுதி பணியாளர்கள் இவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கிரிக்கெட் போட்டி

(கரவெட்டி)

மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் யாழ். மாவட்ட ரீதியான அணிக்கு 5 ஓவர் 6 பேர் கொண்ட *பி* பிரிவிற்கான கிரிக்கெட் போட்டிகள் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் இன்றையதினம் காலை 9 மணிக்கு முதல் மைதானத்திற்கு சமுகமளித்து போட்டி அட்டவணை தயாரித்து போட்டியில் பங்கு கொள்ளுமாறு மைக்கல் விளையாட்டுக்குழு அறிவித்துள்ளது.

*பி* பிரிவில் சாவகச்சேரி வின்டோஸ் அணியை எதிர்த்து வல்வை அணி அரை இறுதி ஆட்டத்தில் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-24)

# இரத்ததான முகாம்

(ஏழாலை)

ஏழாலை இந்து இளைஞர் சபையினரால் இன்று புதன்கிழமை தொழிலாளர் தினத்தில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிகழ்வானது ஏழாலை மேற்கு உதயசூரியன் சனசமூக நிலையத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

எனவே, உயிர்காக்கும் உன்னத கொடைக்கு உதவுமாறு இச்சபையின் செயலாளர் க.பிருந்தாபன் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-2)




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

* 1328-ஸ்கொட்லாந்தைத் தனிநாடாக இங்கிலாந்து அங்கீகரித்தது. ஸ்கொட்லாந்து விடுதலைப் போர் முடிபுக்கு வந்தது.
* 1707-இங்கிலாந்து மற்றும் ஸ்கொட்லாந்து இணைக்கப்பட்டு பெரிய பிரித்தானியா என்ற ஒரு நாடாகியது.
* 1778-அமெரிக்கப் புரட்சி: பென்சில்வேனியாவின் ஹாட்பரோ என்ற இடத்தில் பிரித்தானியப் படையினர் பென்சில்வேனியா துணை இராணுவத்தினர் மீது திடீர்த் தாக்குதலை நிகழ்த்தி 26 பேரைக் கொன்று 58 பேரைக் கைது செய்தனர்.
* 1834-பிரித்தானியக் குடியேற்ற நாடுகள் அடிமைத் தொழிலை நிறுத்தின.
* 1840-உலகின் முதலாவது அதிகாரபூர்வ ஒட்டக் கூடிய தபால்தலை பென்னி பிளாக் ஐக்கிய இராச்சியத்தில் வெளியிடப்பட்டது.
* 1851-லண்டனில் பெரும் பொருட்காட்சி விக்டோரியா மகாராணியினால் திறந்து வைக்கப்பட்டது.
* 1886- ஐக்கிய அமெரிக்காவில் 8 மணி நேர வேலை நாளை அறிவிக்க வேண்டிய வேலைநிறுத்தம் ஆரம்பமானது. இந்நாள் பின்னர் மேதினம் எனவும் தொழிலாளர் தினம் எனவும் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது.
* 1891-பிரான்சில் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின்போது படையினர் சுட்டதில் 9 பேர் உயிரிழந்து 30 பேர் காயமுற்றனர்.
* 1898-அமெரிக்க கடற்படையினர் மணிலா விரிகுடாவில் ஸ்பானிய கடற்படைக் கப்பலை தாக்கியழித்தனர்.
* 1900-ஐக்கிய அமெரிக்காவின் யூட்டா மாநிலத்தின் ஸ்கொஃபீல்ட் என்ற இடத்தில் இடம்பெற்ற சுரங்க விபத்தில் 200 பேர் உயிரிழந்தனர்.
* 1915-ஆர்.எம்.எஸ்.லூசித்தானியா என்ற கப்பல் தனது 202 ஆவதும் கடைசியுமான பயணத்தை நியூயோர்க் நகரில் இருந்து ஆரம்பித்தது. இது புறுப்பட்ட ஆறாவது நாள் அயர்லாந்துக் கரைக் கருகில் மூழ்கியதில் ஆயிரத்து 198 பேர் உயிரிழந்தனர்.
* 1925-சீனாவில் அனைத்து சீன தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இதுவே இன்று 134 மில்லியன் உறுப்பினர்களுடன் உள்ள உலகின் மிகப் பெரிய தொழிற்சங்கம் ஆகும்.
* 1930-புளூட்டோவின் பெயர் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
* 1931-நியூயோர்க் நகரில் எம்பயர் ஸ்டேட் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.
* 1940- கோடை கால ஒலிம்பிக் போட்டிகள் போர் காரணமாக நிறுத்தப்பட்டன.
* 1941-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் கிரேக்க தீவான கிறீட் மீது மிகப் பெரும் வான் தாக்குதலை நிகழ்த்தின.
* 1945-சோவியத் இராணுவத்தினர் பேர்லினில் நாடாளுமன்றக் கட்டடத்தில் சோவியத் கொடியை ஏற்றினார்கள்.
* 1946-மேற்கு அவுஸ்திரேலியாவில் பில்பாரா என்ற இடத்தில் அவுஸ்திரேலியப் பழங்குடிகள் மனித உரிமை, போதுமான சம்பளம் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து 3 ஆண்டுகள் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.
* 1948-கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கப்படாது கிம் உல்-சுங் அதன் முதலாவது ஜனாதிபதியானார்.
* 1950-குவாம் ஐக்கிய அமெரிக்காவின் பொதுநலவாயத்தில் இணைக்கப் பட்டது.
* 1956-இளம்பிள்ளைவாத நோய்த் தடுப்பு மருந்து அறிமுகப்படுத்தப்பட்டது.
* 1960-மகாராஷ்டிரா மாநிலம் அமைக்கப் பட்டது.
* 1961-கியூபாவை சோசலிச நாடாகவும் தேர்தல் முறையை ஒழித்தும் அதன் பிரதமர் பிடெல் காஸ்ட்ரோ அறிவித்தார்.
* 1977-தொழிலாளர் தினம் நிகழ்வின் போது துருக்கியின் இஸ்தான்புல் நகரில் 36 பேர் உயிரிழந்தனர்.
* 1978-ஜப்பானியரான நவோமி யூமுரா தன்னந்தனியா வடமுனையை அடைந்த முதல் மனிதரானார்.
* 1987- இரண்டாம் உலகப் போரின் போது அவுஷ்விட்ஸ் வதைமுகாமில் கொல்லப்பட்ட யூதப் பெண் மத குரு ஈடித் ஸ்டெயின் பாப்பரசரால் புனிதப்படுத்தப்பட்டார்.
* 1993-இலங்கை ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா மேதினப் பேரணியில் வைத்து மனிதக் குண்டுத்தாக்குதலின் மூலம் கொல்லப்பட்டார்.
* 2004-சைப்பிரஸ், செக்குடியரசு, எஸ்தோனியா, ஹங்கேரி, லாத்விய[illegible] லித்துவேனியா, மால்ட்ட[illegible] போலந்து, சிலவாக்கியா, சில[illegible]னியா ஆகியன ஐரோப்பிய ஒன்[illegible]யத்தில் இணைந்தன.
* 2006-புவேர்ட்டோ ரிக்கோ அரசு நாட்டின் பண[illegible]வீக்கம் காரணமாக பாடசாலைகளையும் அரச நிறுவனங்களையும் மூடியது.

**பிறப்பு**

* 1951-கோர்டன் கிரீன்ட்சி, மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் துடுப்பாளர்
* 1971-அஜித்குமார், தமிழ்த் திரைப்பட நடிகர்

**இறப்புக்கள்**

* 1965-ஜி.என்.பாலசுப்பிரமணியம், கர்நாடக இசைப் பாடகர், நடிகர் (பி.1910)
* 1993-ரணசிங்க பிரேமதாசா, இலங்கை ஜனாதிபதி (பி.1924)
* 2011-அலெக்ஸ், திரைப்பட நடிகர், மாஜிக் நிபுணர்
* 2011-ஒசாமா பின்லேடன், அல் கொய்தா தலைவர் (பி.1957)

**சிறப்பு நாள்**

* மேதினம்- உலகத் தொழிலாளர் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பளம் கேட்ட பெண்ணுக்கு கிடைத்தது கொதி எண்ணெய்

## சவுதியில் கொடூரம்

(கொழும்பு)

சம்பளம் கேட்டமைக்காக கையில் கொதிக்கும் எண்ணெய் ஊற்றப்பட்டு படுகாயங்களுடன் சவுதி அரேபியாவிலிருந்து இலங்கைப் பணிப்பெண் ஒருவர் நாடு திரும்பியுள்ளார்.

புத்தளம் பாலாவி பகுதியைச் சேர்ந்த இலட்சுமி வயது 38 எனும் மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறாக கையில் எரிகாயங்களுடன் நர்டு திரும்பியவராவார்.

கணவனை இழந்த நிலையில், மூன்று பிள்ளைகளையும் வளர்ப்பதற்காக பணம் சம்பாதிக்கும் நோக்கில் முகவர் நிலைய மொன்றினூடாக இப்பெண் சவுதி அரேபியாவுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாக சென்றுள்ளார்.

வீட்டில் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு மாதாந்தம் பணம் அனுப்ப வேண்டுமென்பதால் இப்பெண் தனது எஜமானியிடம் சம்பளப் பணத்தை கோரிய போதும் அதனை தர அவர் மறுத்துள்ளார்.

ஒவ்வொரு மாதமும் சம்பளம் கேட்டால் அடித்துக் கொலை செய்து விடுவேன் எனவும் அச்சுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் மீண்டும் ஒருநாள் இப்பெண் வீட்டுக்கு அனுப்ப சம்பளம் வேண்டுமெனக் கேட்டபோதே அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த எண்ணெயை எடுத்து இப்பெண்ணின் வலது கையில் ஊற்றியுள்ளார்.

தான் பணிபுரிந்த வீட்டிலிருந்து தப்பி வந்த மேற்படி பெண், சவுதி அரேபியாவிலுள்ள இலங்கை தூதரகத்தில் தஞ்சம் அடைந்துள்ளார்.

தூதரகத்தின் உதவியுடன் கடந்த 21 ஆம் திகதி இலங்கை வந்தடைந்த இவர், சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டதன் பின்னர் தனது வீட்டுக்கு திரும்பியுள்ளார்.

கொதிக்கும் எண்ணெய் ஊற்றப்பட்டமையினால் வலது கையில் நரம்புகள் பாதிக்கப்பட்ட நிலையில் இவர் தனது கையினால் எதுவும் செய்ய இயலாதுள்ளது என தெரிவிக்கின்றார். (அ-2)

# சோயா புண்ணாக்கை இறக்குமதி செய்யத்தடை

(கொழும்பு)

சீனாவிலிருந்து சோயா புண்ணாக்கை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்க தீர்மானித்துள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள பணிப்பாளர் நாயகம் டாக்டர் குமார சில்வா தெரிவித்துள்ளார்.

சீனா அடங்கலாக பல நாடுகளில் பறவைக் காய்ச்சல் பரவி வருகிறது. சோயா புண்ணாக்கு கோழிகளுக்கு உணவாக பயன்படுத்தப்படுவதால் முன்னெச்சரிக்கையாக சோயா புண்ணாக்கின் இறக்குமதியை தற்காலிகமாக நிறுத்த முடிவு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். பறவைக்காய்ச்சல் வைரஸ் இறக்குமதி செய்யப்படும் சோயா புண்ணாக்குடன் கலந்திருக்க வாய்ப்புள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

சீனாவில் பறவைக் காய்ச்சல் பரவியுள்ளதால் அங்கிருந்து இறக்குமதி செய்யும் புண்ணாக்கினூடாக இங்கும் பறவைக் காய்ச்சல் வைரஸ் பரவலாம் என சம்பந்தப்பட்ட தரப்பினர் அச்சம் தெரிவித்துள்ளனர்.

அதற்கு இடமளிக்காதிருக்கும் நோக்குடன் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ-2)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>உயரம்: 5'4"<br>கி.பா: 16.75, 4 இல் செவ்.<br>தகைமை/தொழில்: A/L, Italy PR<br>தொ.இ: B -1720 | பிறப்பு: 1989 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அனுசம் 1, 1 இல் செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L Studying CIMA<br>தொ.இ: G -1750 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>உயரம்: 5'3"<br>கி.பா: 32<br>தகைமை/ தொழில்:- A/L Australia<br>தொ.இ: B -1721 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:பூராடம் 2<br>உயரம் : 5'5"<br>கி.பா: 14<br>தகைமை/ தொழில்: BA பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: G-1751 |
| பிறப்பு: 1975 இந்து குருகுலம்<br>நட்சத்திரம்: பூசம் 3, 4 இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்: A/L UK Not PR<br>தொ.இ: B -1722 | பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம்<br>சூரி, செவ். ஒரே வீட்டில்<br>தகைமை/ தொழில்: BA முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G -1753 |
| பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>உயரம்: 5'3"<br>கி.பா: 26, 8 இல் செவ்.<br>தகைமை/தொழில்: A/L தொழில்நுட்பக் கல்லூரி கட்டடத்துறை<br>தொ.இ: B -1723 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>உயரம்: 4'5"<br>தகைமை/ தொழில்: O/L<br>கணவனை இழந்தவர்<br>எ.பா: விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: G -1754 |

சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## முசுமுசுக்கை

**Botanical Name-**
**Melothria maderaspatana**
**Family-Cucurbitaceae**
**Engl-Rough bryony**
**Sinh- Hin-kekiri**

இது அதிகமாக கிளைக் கொடிகளுடன் நீண்ட தூரம் கொடியோடி குறுங்காட்டிலுள்ள [..]ஞ்செடிகளின் மேல் நன்கு படர்ந்திருக்[..]ம். பெரிய ஈரடுக்கு பருமனுள்ள கொடி. [..]மல்லியதாகவும் நாருருள்ளதாகவும் இருக்[..]ம். இலைக்காம்பு, கொடி ஆகியவற்றில் [..]ல்ல அழுத்தமான சுணைகளுண்டு. அதனால் இலைகள் அதிகம் சொரசொரப்பாக இருக்கும். சுமார் 2,4 அங்குல இடைவெளி தூரத்தில் காணப்படும். கணுக்கள் ஒவ்வொன்றிலும் ஓர் இலையும் ஓர் கிளை கொடியும் ஒரு பற்றுக் கம்பியும் இருப்பதைக் காணலாம்.



நீண்ட காம்புடைய இலை. நல்ல பசுமை நிறத்துடனும் அடிப்புறம் அகண்டும் மேல் புறம் நீண்டும் குறுகியும் கலக்கவே காணப்படுகிறது. அதாவது இலைகளின் இரு பக்கங்களிலும் அடியில் இரண்டு சிறிய பிதுக்கங்களிலும் அடியில் இரண்டு சிறிது பெரிய பிதுக்கத்தையும் காணலாம். இலையின் அழுத்தமான சுணைகளும் மெல்லிய சுணைகளும் அதிகம் நிரம்பியுள்ளன.

ஆனால் கொடியைவிட இலையில் சொரசொரப்பு குறைவேயாகும். இலையில் ஓரம் சிறிது இரம்பவாய் அமைப்புடையது. எளிதில் வாடக்கூடியது.

சிறிய மஞ்சள் நிறப்பூக்கள் கணுக்களில் பூத்திருக்கும். காய்கள் வட்டவடிவமானவை. சிவந்த பழத்தினுள் நிறைய விதைகள் பொதிந்து காணப்படும். இதுஓராண்டு பயிராகும்.

### இனவிருத்தியும் பரம்பலும்

விதைகள் மூலம் இனவிருத்தியடையும். பந்தல் போட்டு வளர்க்கலாம். பொதுவான எல்லாவகைமண்களிலும்வளரக்கூடியது.

### மருத்துவப் பயன்கள்

முசுமுசுக்கை இலையை மட்டும் சுமார் 3 கைப்பிடியளவு எடுத்து தோசை, இட்லி ஆகியவைகளுக்கு போடும் ஊறவைத்த புழுங்கல் அரிசியுடன் சேர்த்து உரலில் ஆட்டிய மாவை நெய் விட்டு தோசை, அப்பம் ஆகவும் இட்லி முதலிய பலகார வகைகளாகவும் செய்து சிறுவர் முதல் பெரியோர் வரை சாப்பிடலாம். அத்துடன் இஞ்சி, கறிவேப்பிலை, புதினா, கொத்தமல்லி, உளுத்தம் பருப்பு, தேங்காய் ஆகியவையும் சேர்த்து சிற்றுண்டியில் துவையல் ஆக உண்பதும் நம் நாட்டு வழக்கமாகும். முசுமுசுக்கையை தூதுவளைபோலவே நெய்யில் வதக்கி மதிய உணவு பதார்த்தமாக சேர்க்க நாவிற்கு ருசியைத்தருவது மட்டுமல்லாமல் ஆஸ்துமா (இளைப்பு), இரத்த காசம், சுவாசகாசம், சளி பித்த சீதளத்தால் வரும் காய்ச்சல், நாருசி அற்றுப் போதல், ஜலதோஷம், மூக்கின் வழியாக ஒழுகும் சளி, மூக்கின் ரணம், வாசனையற்றுப்போதல் முதலியவை யாவும் குணமாகும்.

முசுமுசுக்கைக் கீரை, சீரகம் இரண்டையும் சம அளவு எடுத்து நசுக்கி துணியில் முடிந்து கொள்ளவும். பின்பு அதைத் தாய்ப் பாலில் தோய்ந்து கண்களில் பிழிந்து வந்தால் கண்களில் பூ விழுந்த பிரச்சினை தீரும். முசுமுசுக்கைக் கீரை, வெங்காயம் இரண்டையும் நெய் சேர்த்து வதக்கி பகல் உணவோடு சேர்த்து சாப்பிட்டால் ஆஸ்துமா, மூச்சுத்திணறல் குணமாகும்.

முசுமுசுக்கை கீரை, மிளகு இரண்டையும் சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் சளி, கபம் குணமாகும்.

முசுமுசுக்கைக் கீரை சாறு எடுத்து அதில் திப்பிலியை ஊறவைத்து உலர்த்திப் பொடியாக்கி மூன்று சிட்டிகை அளவு பொடியை தேனில் குழைத்து வெற்றிலையில் வைத்து சாப்பிட்டால் ஆஸ்துமா குணமாகும்.

முசுமுசுக்கைக் கீரைச் சாற்றில் கோரோசனை கலந்து சாப்பிட்டால் ஆஸ்துமாவால் ஏற்படும் மூச்சிறைப்பு குணமாகும். முசுமுசுக்கைக் கீரைச்சாறில் உலர்ந்த திராட்சையை அரைத்து சாப்பிட்டால் வாந்தி நிற்கும். முசுமுசுக்கைக்கீரையுடன் நெல்லிக்காயைச் சேர்த்து அரைத்து சாப்பிட்டால் பித்தம் தணியும்.

முசுமுசுக்கைக் கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் காசநோய் குணமாகும்.

முசுமுசுக்கைக் கீரையுடன் வெந்தயம் சேர்த்து அரைத்துச்சாப்பிட்டால் உடல் பலம் உண்டாகும்.

முசுமுசுக்கைக் கீரைச் சாற்றில் சீரகத்தை ஊறவைத்து உலர்த்திப் பொடியாக்கி தினமும் காலை, மாலை இரு வேளையும் இரண்டு கிராம் அளவுக்குச் சாப்பிட்டால் இரத்த அழுத்தம் சீராகும்.

### முசுமுசுக்கை தேநீர்

முசுமுசுக்கை செடி முழுசாக வேருடன் கூடிய செடி தேவையானது; தேன் 1/4 லீற்றர், பனைவெல்லம்1/4கிலோ, ஏலக்காய் 25, கருவேலம் பிசின் பொடி தேவையானது.

முசுமுசுக்கை செடியை வேரோடு பிடுங்கி நிழலில் உலர்த்தி பொடி செய்ய வேண்டும். இத்துடன் கருவேலம் பிசினை வெயிலில் காயவைத்து இதையும் பொடி செய்து ஒரு பாத்திரத்தில் தேவையான அளவு தண்ணீர் ஊற்றி பனை வெல்லத்தைப்போட்டு பாகு காய்ச்ச வேண்டும். நன்கு பாகு காய்ந்ததும் தேனை ஊற்றி நன்கு மெழுகு பதம் வரும்வரை காய்ச்சி முசுமுசுக்கை பொடி, கருவேலன் பிசின் பொடி இவற்றை போட்டு நன்றாக காய்ச்சி இறக்கி வைத்து ஆறியதும் 200 மில்லி பசுப்பாலை காய்ச்சி இதனுடன் கலந்து 2 நேரமாக குடிக்கலாம். இதனால் ஆஸ்துமா, கச நோய்களுக்கு சிறந்த நிவாரணியாக அமையும்.

**திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்,**
**கைதடி.**

### முசுமுசுக்கை பழப்பானம்

இதன் பழம் நல்ல சிவப்பாக இருக்கும். தேவையானளவு பழங்களை எடுத்து சர்க்கரை 100 கிராமை 200 மில்லி நீரில் கொதிக்க விடவும். முசுமுசுக்கை பழத்தை சாறு பிழிந்து வடிகட்டி பழச்சாற்றை வெல்லத்தில் ஊற்றி காய்ச்ச வேண்டும். நன்னாரி வேர் 5 கிராமை தட்டிப்போட்டு காய்ச்சும் வெல்லத்தில் போட்டு கிளறி மணம் வரும் பதத்தில் இறக்கி ஆறவிட்டு தேன் கலந்து குடிக்க வேண்டும். 50 மில்லிக்கு 10 மில்லி தேன் கலந்து குடிக்கவும். உடலுக்கு பலத்தைதத்ருவதுடன் இரத்தத்தை விருத்தி செய்து இருமல் சளி போன்ற தீமைகளையும் சீராக்கும்.

### முசுமுசுக்கை அடை

அரைத்த பச்சையரிசியை ஒன்றாக சுத்தம் செய்து நீரில் ஊறவைத்து வடித்து இடித்து தேவையான அளவு முசுமுசுக்கை இலைகளை சிறுக அரிந்து தேவையான அளவு உப்பு சேர்த்து தேங்காய்ப்பூவும் சேர்த்து கொதித்தாறிய நீரில் குழைத்த அடையாகத்தட்டி நெய்யில் பொரித்து எடுத்து சிறுவர் முதல் பெரியோர் வரை சாப்பிட சளி, இருமல் தணியும். சிறுவருக்கு சிறந்த உணவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரம் போற்றும் சாதனை செய்யுமா சதயம்?

மாமன்னன் ராஜராஜ சோழன் பிறந்த நட்சத்திரம் சதயமாகும். சதய விழாவை அரசாங்கமே நடத்துகிறது.

சதயத்தில் பிறந்தால் மன்னராகவோ மந்திரியாகவோ முடியாவிட்டாலும் சராசரி வசதி வாய்ப்புடன் சௌகரியமாகவாவது வாழ முடியாதா என்னும் ஏக்கமும் கேள்வியும் இந்த நட்சத்திரக்காரர்களிடம் இல்லாமல் இல்லை. எதற்கெடுத்தாலும் சந்தேகம். உடனே முடிவு எடுக்க முடியாத சஞ்சலம், குழப்பம், விரக்தி, நன்றாகப் பழகிய நண்பர்களிடம் விரோதம், மனைவியுடன் அவ்வப் போது வாக்கு வாதம், பிள்ளைகள் பெரிய அளவில் வரவேண்டுகின்ற எதிர்பார்ப்பு, எல்லை மீறிய ஆசையால் பெரிய முதலீடு களை நம்பி ஏமாந்து விடுதல், கூடப் பிறந்த உறவுகளும் சரி மாமன் மைத்துனன் என மனைவி வகையிலும் சரி ஒட்டுறவு இல்லாமல் ஒதுங்கி வாழ வேண்டிய சூழல். என்ன இது கும்ப இராசி படுத்துகிற பாடு தாங்க முடியலையே என்ன ஜாதகமிது? என்ன நட்சத்திரமிது? என்று என் முன்னே வந்தவரின் ஜாதகத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டோம். அதை உங்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

யாராக இருந்தாலும் கடகம், விருட்சிகம், மீனம் ஆகியவை லக்னமாக அமைந்து பூசம், அனுசம், உத்தரட்டாதி போன்ற சனி பகவானின் நட்சத்திரக்காலில் லக்னம் அமர்ந்து மிதுனம், துலாம், கும்பம் போன்ற இராசிகளில் முறையே திருவாதிரை, சுவாதி, சதயம் ஆகியவை ஜென்ம நட்சத்திரங்களாக வருமாயின் அத்தகைய ஜாதகர் எந்திரத்தில் மாட்டிய கரும்பு மத்திக்குள் அகப்பட்ட தயிர் உளிக்கு சிக்கிய கல் என்பது உறுதியாகி விடும். சனியும் இராகுவும் ஜாதகரின் வாழ்வைத் தன் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்து விடும். பாவப் பதிவுகள் அதிகமுள் ளதை உணர்த்தி ஜாதகரை முழு மனிதனாக மாற்றிய பின்னர் யோக த்தை வழங்க தயார் செய்யும் எள் எண்ணெயாவது போல் கரும்பு சாறாவது போல் தயிர் வெண்மையாவது போல் கல் சிலையாவது போல் ஜாதகர் நல்ல நிலைக்கு வந்துவிடுவார். அதுவரை போராட்ட மென் பது தவிர்க்க முடியாது ஒன்றாகி வடும்.



அதாவது கடகம், விருச்சிகம், மீன லக்கினத்தில் பிறந்து மிதுனம், துலாம், கும்பராசிகளைப் பெற்றவர் களுக்கு சனி லக்ன சாராதிபதியாக வும், ராகு நட்சத்திராபதியாகவும் இருக்குமேயானால் துன்பத்தை எதிர் கொள்ள வேண்டியது கட்டாய மாகி விடும். எந்த திசை யோகம் செய்யுமென் பதை விட அனுபவக் கொள்முதல் இன்னும் எவ்வளவு நாட்களுக்கென்று கேட்பதே சிறப் பாக இருக்கும்.

இப்படிப்பட்ட அமைப்பில் பிறந்தவர்கள் குறுக்கு வழியில் பணம் தேட முயல்வதைத் தவிர்க்க வேண்டும். பெரும்பாலும் ரொம்பவும் கஷ்டப்படாமல் சுலபமாக எப்படியாவது பெரும் தொகையைத்தட்ட முடியுமா என்னும் சிந்தனை அதிகமாக இருக்கும். அப்படியே கிடைத்தாலும் அது எப்படிப் போனதென்று தெரியாமல் போய்விடும். அரசியல், சினிமா, பங்குச்சந்தை, கள்ளநோட்டு, வெளிநாட்டு ஆள் அனுப்பும் ஏஜென்ட், கமிசன் தொழில்கள் என பணப் புழக்கம் உள்ள இடங்களைத் தேர்வு செய்யும் ஆர்வம் அதிகரிக்கும்.

யாருடைய ஜாதகத்திலும் செவ்வாய், புதன் இணைவு என்றாலும் செவ்வாய் சனி சாரத்திலும் புதன் சுய சாரத்திலும் சேர்ந்திருந்தாலும் என்ன செய்யும்? உறவுகளை விட்டு ஒதுக்கி வைத்து விடும். சொந்த பந்தத்தின் ஆதரவு கிட்டாது பங்காளி பகையாகிப் போய்விடுவான் வெளி நாடு, வெளியூர் என வாழ்வை அமைத்துக் கொள்ள முடிவு செய்து விடும் பூர்வீகம் நிலைக்காது சொந்த தகராறுக்கு முடிவு கிட்டாது. வழக்கு நிலுவையிலிருக்கும்.

ஒரு ஜாதகத்தில் குருவின் மறைவு சனியின் தொடர்பானது நல்ல படிப்பைக் கொடுத்து வெளிநாட்டு உத்தியோகம் என பொருளாதார பலத்தை ஏற்படுத்தினாலும் திருமண வாய்ப்பைத் தட்டிப்பறித்து விடுகிறது. எந்த பரிகாரத்தைச் செய்து எப்படி கல்யாணம் செய்வது என தடுமாற வைத்து விடுகிறது. குரு சனி சேர்க்கை கன்னியில் இருக்கும் பட்சத்தில் 33 வயதை எட்டியும் திருமணம் இல்லையென்பதாகிவிடும். சரியான வழிகாட்டுதலுடன் வரன் தேட வேண்டிய கட்டாயம் அவசியம்.

சுக்கிரன் சந்திரனோடு இணைந்தாலும் சந்திரன் சாரத்தில் சுக்கிரன் இருந்தாலும் சந்திரனும் சுக்கிரனும் பரிவர்த்தனை பெற்றாலும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டாலும் தாம்பத்ய சுகத்தை தடை செய்யும். திருப்தி இல்லா போக சுகம். நினைத்த மாதிரி இல்லா வேதனை. இதனால் கூட இல்லறத்தில் பிரிவு வர வழியாகப் போய்விடும்.

ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படக் கூடிய இயற்கையான தேக சுக சம்பந்தம் பாதிக்கும் பட்சத் தில் பல்வேறு குழப்பங்களும் சண்டை சச்சரவுகளுக்கும் வழியாகி விடும். சிலர் அந்தரங்க விடயங்களை வெளியே சொல்ல அஞ்சி வெவ்றே காரணங்களை சுட்டிக் காட்டி பிரிய முயல்வார்கள்.

பெரும்பாலும் ஒரு ஆண் ஜாதகத்தில் 3, 6, 12 ஆமிடங்கள் பாதிப்புக்குள்ளாகி சந்திரன் கெட்டு அல்லது சுக்கிரன் கெட்டு நாம் குறிப்பிட்ட இருக்குமாயின் பொருத்தம் பார் க்கும் போது சற்று கவனம் எடுத்து கொள்வது நல்லது.

பத்தாமிடத்துக்குரியவன் 2 இல் அமர்ந்து கேது சாரம் பெற கேது 6 இல் மறைய 2,5க்குரியவன் இராகுவோடு இணைந்து 12இல் இருக்குமானால் வெளிநாட்டு தொடர்பில் வருமானம் கிட்டும். ஏற்றுமதி இறக்குமதி ஆள் அனுப்பும் ஏஜண்ட் என தொழில் பாதையை அமைத்துக் கொடுக்கும்.

ஆறாமிடத்துக்குரியவன் யாரோ அவன் 3, 4க்குரியவன் சாரத்தைப் பெற்றாலும் அவனோடு இணைந்தாலும் துணிச்சலாக கடன் வாங்க வைக்கும். வாழ்நாள் முழுவதும் கடன் இருந்து கொண்டே இருக்கும். ஒரு கட னைக் கொடுத்தால் மறுகடன் வாங்க வேண்டிய கட்டாய நிலை உருவாகி விடும் தனியார் வங்கிகளில் கடன் வாங்கி விட்டு உடனடியாக சிம் காட்டையும் இருப்பிடத்தையும் மாற்றி தலை மறைவு வாழ்க்கை தேவைதானா?

பெரும்பாலும் சதயம் கும்ப ராசி விருச்சிக லக்னம் என்கிற போது நடைமுறைக்கு வரும் புதன் திசை சிறப்பானதொரு யோகத்தை வழங்குவதில்லை. விட்டு விட்டுவருமானம், மனஉளைச்சல், இயல்பான கடன் நெருக்கடி அதிலும் புதன் சுயசாரத்தில் இருக்கும் பட்சத்தில் எதிர்பார்க்கும் நன்மை கிடைப்பதில்லை. புதன் 5, 8 க்கு உரியவன் என்கின்ற போது பிள்ளைகளினால் இடைஞ்சல், பெற்றோரின் உழைப்போடு பிள்ளைகளின் வருமானமும் இணைந்தால் மட்டுமே பெரும் பகுதி செலவுகளை சமாளிக்க முடியும்.

இல்லாவிட்டால் குடும்பத்தின் ஒட்டுமொத்தச் செலவும் ஒருவரே பார்க்க வேண்டுமெனில் கடன் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. இவரின் பிள்ளையால் நன்மையில்லையென்றான பின்னர் கடனில் மூழ்கினார்.

இவ்வாறு சதயம் சோதனைகளைக் கொடுத்தாலும் தெசாபுத்திகள் யோகமாக அமையும் போது சாதனை செய்ய வைத்து விடும்.

# காணிகள் சுவீகரிக்கப்படுகின்றமை நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது

## அரியம் எம்.பி. கண்டனம்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்திலும் ஏற்படுத்தப்படும் இராணுவ மயமாக்கலை அனுமதிக்க முடியாது. என கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் தெரிவித்துள்ளார். மட்டு மாவட்டத்தில் புதிய இராணுவ முகாம்களுக்கு 12 இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றை சுவீகரிக்க இராணுவம் முயற்சிகள் மேற்கொண்டு வருவதை முன்னிட்டு வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.**

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது,

தற்போது நாட்டில் பூரண சமாதானம் நிலவுவதாக அரசாங்கம் கூறி வருகின்றது. அப்படி இருக்கும் போது தமிழர் பகுதிகளில் இராணுவ முகாம்களை உருவாக்குவதானது ஒரு போதும் சமாதனத்தை தோற்றுவிக்கும் செயற்பாடாக அமையாது.

அரசாங்கம் யுத்தத்தில் வெற்றி கொள்வதற்கு சர்வதேசமும் இந்தியாவும் உதவி செய்தன. ஆனால் யுத்தத்திற்கு பின்பு மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களின் சுதந்திரமான வாழ்க்கை என்ற விடயத்தில் சர்வதேசமும் இந்தியாவும் பாரா முகமாக செயற்படுகின்றன.

யுத்த முடிவுற்று 4 ஆண்டுகள் ஆகியும் தமிழ் மக்கள் இன்னும் சொல்லெண்ணா துயரங்களுடனேயே வாழ்கின்றனர். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அவர்களின் நிலங்களில் இருந்து இராணுவம் இன்னமும் வெளியேறவில்லை. சம்பூர் மக்கள் இன்னமும் பூரணமாக குடியேற்றப் படவில்லை. வடக்கில் உயர் பாது காப்பு வலயம் என்ற போர்வையில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் நிலங்களை இராணுவம் சுவிகரித்துள்ளது. அந்த நிலங்களை மீட்பதற்கான போராட்டங்களை அம் மக்கள் முன்னெடுத்து வருகின்றனர். எனவே இவ்வாறு இருக்கும் போது மட்டக்களப்பிலும் புதிய பாரிய இராணுவ முகாம்களுக்காக 12 இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை இராணுவத் தலைமையகம் மேற் கொண்டு வருகின்றது. தமிழர் பகுதிகளில் இராணுவ மய மாக்கலை மேற்கொள்ளக் கூடாது. ஏற்கனவே இராணுவம் பிடித்துள்ள தமிழ் மக்களின் நிலங்களில் இருந்து அவர்கள் வெளியேற வேண்டும். புதிய இராணுவ முகாம்களை அமைக்கக்கூடாது. போன்ற விடயங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் சர்வதேச அமைப்புக்களும் அரசை வற்புறுத்தி வருகின்ற நேரத்தில் புதிய இராணுவ முகாம்களை அமைப்பதற்காக இராணுவம் நிலங்களை அடையாளப்படுத்தி அவற்றை சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதானது தமிழ் மக்கள் மத்தியில் இவ்வரசு மீது ஒருபோதும் நல்லெண்ணத்தை ஏற்படுத்தாது.

மேலும் அரசின் இந்த செயற்பாடு தமிழ் மக்களுக்கு ஒரு போதும் எவ்வாறான அரசியல் தீர்வையும் பெற்றுத் தருவதற்கு வழிவகுக்காது. மாறாக அது இன விரிசலை ஏற்படுத்தி இன ஐக்கியத்திற்கு சாவு மணி அடிப்பதற்கான சூழலையே தோற்றுவிக்கும் என அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## கிளி.சாலையை மாற்றுவதற்கு ஊழியர்கள் கடும் எதிர்ப்பு

இலங்கைபோக்குவரத்துச்சபையின் கிளிநொச்சி சாலையை இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி சாலையின் உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இச் செயற்பாட்டைக் கண்டித்து கிளிநொச்சிச்சாலை உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் காலை முதல் மதியம் வரை அமைதியான முறையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்கள் தாங்கி நின்ற சுலோக அட்டைகளில், சம்மந்தப்பட்ட அதிகாரிகளே எமது கோரிக்கையை ஏற்றுக் கொள் ளுங்கள், கிளிநொச்சி சாலையின் அடையாளத்தை அழிக்காதே, எமது காணி எமக்கு வேண்டும், சகல அரச நிறுவனங்கள் அனைத்தும் நகரத்தில், இலங்கை போக்குவரத்து சபை மட்டும் காட்டிலா, 1958 ஆம் ஆண்டில் இருந்து இலங்கை போக் குவரத்துச் சபைக்குரிய காணி இதுவே, பொறுப்பதிகாரிகளே இலங்கை போக்குவரத்துச் சபைக் காணியினை இடமாற்றுவது சம்பந்தமான தீர்மானத்தை மீளப் பரிசீலனை செய் என்ற வாசகங்களை தாங்கி நின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஈழப்பிரச்சினையால் இந்தியாவும் துண்டுதுண்டாக உடையும்"-வைகோ

**ஈழப் பிரச்சினையால் சோவியத் ரஷ்யா போன்று இந்தியாவும் துண்டுதுண்டாக உடையும். தமிழர்களின் உணர்வுகளை இந்திய அரசு புரிந்து கொண்டு பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது என்று அறிவியுங்கள். அல்லது பொதுநலவாய அமைப்பில் இலங்கை இடம்பெறக் கூடாது என்று அறிவியுங்கள் என ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



13 நாட்களாக நடைபெற்ற நடைபயண நிறைவு நிகழ்ச்சியை யொட்டி ஈரோடு சம்பத் நகரில் ம.தி. மு.க. சார்பில் பொதுக்கூட்டம் நடை பெற்றது.

இக் கூட்டத்தில் அவர் உரை நிகழ்த்திய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்று கையில்,

ஈழப் போரில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், மனித உரிமை மீறல்கள் போல் உலகில் வேறு எந்த நாட்டிலும் பார்த்திருக்க முடியாது. பழுக்க காய்ச்சிய இரும்பை உறுப்பில் செலுத்தியமை, 16,18 வயது பெண்களைப் பாலியல் சித்திரவதை செய்தமை போன்றவை குறித்து உலக மனித உரிமை ஆணையத்திடம் புகார் கொடுத்தேன்.

இது தொடர்பான விசாரணைக்கு என்னை அழைத்தபோது ஒரு மணிநேரம் உலக மனித உரிமை ஆணையத்திடம் வாக்குமூலம் கொடுத்தேன். உலக மனித உரிமை ஆணையத்தின் விசாரணை அறிக்கையின் தொடர்ச்சியாகவே கனடா போன்ற நாடுகள் தற்போது இலங்கைக்கு எதிராக குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளன.

எதிர் வரும் நவம்பர் மாதம் 17,18 ஆம் திகதிகளில் இலங்கை கொழும்பு நகரில் பொதுநலவாய மாநாடு நடைபெறவுள்ளது. இம் மாநாட்டை இலங்கையில் நடத்த எதிர்ப்பு தெரிவித்து லண்டனில் ஈழத்தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுட்டனர். தற்போது கனடாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் கூட இலங்கை பொதுநலவாய மாநாட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டதற்கும் மனித உரிமை மீறலுக்கும் கனடா கூட எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில் தொப்புள்கொடி உறவான இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இந்திய அரசு ஏன் இன்னும் பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்த எதிர்ப்பு தெரிவிக்கவில்லை? காரணம் இந்திய அரசும் இலங்கையுடன் கூட்டுக் கொலையாளியாக செயற்பட்டமை தான்.

முன்பு இந்திய அமைதிப்படை விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக பலாலி விமான நிலையம் மீது தாக்குதல் நடத்தியது. அப்போது வெளியுறவு அமைச்சராக இருந்தவர் தான் தற்போதைய இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி. முன்பு தமிழர்களுக்கு துரோகம் இழைத்தார்கள்.

இப்போதும் தமிழர்களுக்கு எதிராகவே இந்திய அரசு செயற்படுகிறது. இனியும் இது தொடர்ந்தால் வரும் தலைமுறையினர் பேசிக் கொண்டிருக்க மாட்டார்கள். நேரடியாக களம் இறங்கினால் சோவியத் ரஷ்யா போன்று இந்தியாவும் துண்டு துண்டாக உடைந்து போகும்.

எனவே, தமிழர்களின் உணர்வுகளை இந்திய அரசு புரிந்து கொண்டு பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது"என்று அறிவிக்க வேண்டும். அல்லது பொதுநலவாய அமைப்பில் இலங்கை இடம்பெறக் கூடாது என்று அறிவியுங்கள் என்றார். (அ-2)

## குண்டுத்தாக்குதலில் தப்பினார் சிரிய பிரதமர்



(டமாஸ்ஸ்)

சிரிய பிரதமர் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

சிரியாவின் பிரதமர் வேல் அல்ஹலாக்கி பயணித்தகார் மீதே இக் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. எனி னும் இந்தத் தாக்குத லில் பிரதமர் மயிரி ழையில் உயிர் தப்பியுள்ளார்.

டமாஸ்கஸ் நகரில் வாகனப் பேரணியை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என அரசு தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்போது பிரதமரின் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

சிரிய பிரதமர் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர். (அ-2)

## 2023இல் செவ்வாயில் நிரந்தர குடியேற்றம்

பிரிட்டன் நாட்டில் இயங்கி வரும் இலாப நோக்கமற்ற ஓர் நிறுவனம் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டில் செவ்வாய் கிரகத்தில் மக்களை நிரந்தரமாக குடியேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

இதனடிப்படையில் ஒரு வழிப் பயணமாக செவ்வாய் கிரகத்திற்கு செல்ல விரும்புவோர் தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என 4 தினங்களுக்கு முன்னர் அந்நிறுவனம் விளம்பரம் செய்தது.

செவ்வாய் கிரகத்தில் ஆண்டின் 6 மாத காலத்திற்கு தொடர்ந்து பூமியை தாக்கும் சாதாரண புயலை விட 6 மடங்கு சக்தி வாய்ந்த புயல் தாக்கும் என அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறி வருகின்றனர்.

இருப்பினும் இந்த வானிலை அறிக்கையைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் செவ்வாய் கிரகத்தில் குடியேற விருப்பம் தெரிவித்து நான்கு நாட்களில் சுமார் 20 ஆயிரம் பேர் மனு செய்துள்ளனர். இவர்களில் 600 பேர் சீனர்கள் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)


மே தினம்



கல்வி கலங்கரை விளக்கு
தொழில் வளர்ச்சியின் உயிர்நாடி
உலகத் தொழிலாளர் தினமாம்
மே நாளில்
அனைத்துத் தொழிலாளர்களுடனும்
அச்சகத் தொழிலாளர்களும்
சிறப்புற வேண்டுகின்றோம்.

இன்று
இரவு 8.00 மணிக்கு
சிறப்பு ஒளிபரப்பு
கரிகணன் ஒளிவீச்சு - 1

கரிகணன் பிறிண்டேர்ஸ்
நவீன அச்சுத்துறையின் முன்னோடி
இல.681, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
+94 21-2222717 / 18, +94 21-7397530 +94 21-2222891

Dan யாழ் ஒளி மற்றும் DD TV
காணத்தவறாதீர்கள்....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முதலில் தூசியைக் கிளப்பி விடுகிறோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகின்றோம். ~ பிஷப் பார்க்லி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தொழிலாளர்கள் அன்று அடிமைகள் இன்று அரசியல்வாதிகளின் சூழ்நிலைக் கைதிகள்

இன்று மே முதலாந் திகதி. தொழிலாளர் தினம். உலகெங்கும் பிரகடனப்படுத்தப்பட்ட இந்நாள் தொழிலாளர்களின் நலன்கள் குறித்தும், உரிமைகள் குறித்தும் சிந்திக்கின்ற நாளாக இருத்தல் வேண்டும் என்பது இத் தினத்தை பிரகடனப்படுத்தியவர்களின் நினைப்பாக இருந்திருக்க வேண்டும்.

உடலை வருத்தி – ஓய்வின்றி உழைத்து உழைத்து ஓடாகத் தேய்ந்து முதலாளித்துவத்தின் உறிஞ்சலுக்கும் அதட்டலுக்கும் தண்டனைக்கும் ஆளாகி அடிமைகளாய் வாழ்ந்த தொழிலாளர் வர்க்கம் தம் உரிமையை நிலை நாட்ட நடத்திய போராட்டத்தின் அடையாளமாக இன்றைய நாளைக் கருதமுடியும்.

எனினும் முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராக – தமது உரிமைக்காகப் போராடிய தொழிலாளர் வர்க்கம் வேலை நேரம் தொடர்பில் தமக்கான உரிமையைப் பெற்றுக் கொண்டனராயினும்,

இலங்கை போன்ற நாடுகளில் தொழிலாளர் வர்க்கம் அரசியல் வாதிகளிடம் சிக்கிக் கொண்டனர் என்ற உண்மை மறப்பதற்குரியதல்ல.

தமது உரிமையை நிலை நாட்டிய மே தினத்தையும் அரசியல்வாதிகளிடம் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு, அரசியல் கட்சிகளின் பெயரால் கொடிபிடித்து ஊர்வலம் நடத்தி அரசியல்வாதிகளின் பிழைப்பிற்கு உழைப்பதாக இன்றை நாள் மாற்றப்பட்டு விட்டது.

அரசியல் கட்சிகளின் கீழ் இயங்கும் தொழிற் சங்கங்கள் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைக்குக் குரல் கொடுப்பதற்கு மாறாக, தமது கட்சிப் பலத்தை உயர்த்துவதற்கு தொழிலாளர் வர்க்கத்தைப் பயன்படுத்துகிறது.

இலங்கை நாட்டில் இருக்கக் கூடிய பொருளாதார பலவீனமும் அதன் காரணமாகத் தொழிலாளர் வர்க்கம் தமது நாளாந்த ஜீவனோபாயத்திற்காக ஏங்குகின்ற பரிதாபமுமாக நிலைமை இருக்கையில், ஒவ்வொரு அரசியல் கட்சிகளினதும் பின்னால் தொழிலாளர்வர்க்கம் அணி திரண்டு செல்லுமாயின்,

தொழிலாளர்கள் முன்பு அடிமைகளாக இருந்தனர். இப்போது அரசியல்வாதிகளின் சூழ்நிலைக் கைதிகளாக இருக்கின்றார்கள்.

இந் நிலை மாறவும் மாற்றப்படவும் வேண்டும். அப்போதுதான் தொழிலாளர்வர்க்கம் தனது பலத்தை அதிகரிக்க முடியும்.

# சீரற்ற பேருந்து சேவையால் மாணவர் விசனம்; நடவடிக்கை எடுப்பதாகக் கூறுகிறது இ.போ.ச

மாணவர்களுக்கான பேருந்து சேவை சீராக மேற்கொள்ளப்படுவதில்லை என மாணவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன்துறை வீதியூடாக யாழ்.நகரப்பகுதி பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களே இலங்கைப் போக்குவரத்து சேவையின் மீது மேற்படி அதிருப்தி கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் நேற்றையதினம் பாடசாலைசேவைக்கான பேருந்து வருகை தராமையால் மாணவர்கள் வீடு திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டதோடு முற்பகல் 8.30 மணிவரையிலும் மாணவர்கள் பேருந்துக்காக காத்திருந்துள்ளனர்.

இ.போ.ச பேருந்து வராமையினால் ஏமாற்றமடைந்த மாணவர்கள் சிலர் தனியார்சிற்றூர்திகளிலேயே பயணித்து பாடசாலையை அடைந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் இவ்வாறு பேருந்திற்காக சுன்னாகம் பேருந்துதரிப்பிடத்தில்காத்திருந்த மாணவர்கள் தாம் வழமையாகவே பேருந்து பயணத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து வெளிப்படுத்தியுள்ளனர்.

**மாணவர் பிரச்சினை**

வழமையாகவே தமக்கான பாடசாலை சேவையில் ஈடுபடும் பேருந்து குறிப்பாக ஆண்மாணவர்களுக்கான பேருந்து குறித்து நேரத்தில் வருகை தருவதில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக உரிய நேரத்திற்கு பாடசாலையை அடையமுடியாதுள்ளதாகவும் தினமும் இவ்வாறு பாடசாலைக்கு தாமதமாகச் செல்வதால் பாடசாலை நிர்வாகத்தின் தண்டனைக்கு உள்ளாவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பேருந்துகளில் பணியாற்றும் சில சாரதிகள், நடத்துநர்கள் மாணவர்களுடன் வன்மமாக நடந்து கொள்வதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான பாடசாலை சேவைக்கான பேருந்துகளின் சீரற்ற நிலைமையினால் பருவகாலச் சீட்டை பெற்றிருந்தும் பணம் கொடுத்து தனியார் சிற்றூர்திகளில் பயணிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவ்வாறு சிற்றூர்திகளில் பயணிக்கும் போது அதிகளவு சனநெரிசலுக்குள் சிக்கித் திணறுவதாகவும் சிற்றூர்தி ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களால் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாக வேண்டியிருப்பதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன் இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்துகளின் சீரற்ற சேவையினைக் கண்டித்து சுன்னாகம் பேருந்து நிலையத்தில் பேருந்து மறியலில் ஈடுபட்டதாகவும் எனினும் பொலிஸாரின் வேண்டுகோளுக் கிணங்க தாம் மறியலைக் கைவிட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

**பேருந்து சாலையின் பதில்**

இவ்விடயம் தொடர்பில் யாழ். கோண்டாவில் இலங்கை போக்குவரத்துச்சபை பேருந்துசாலையுடன் தொடர்பு கொண்டு வினவிய போது, நேற்றையதினம் ஏனைய பேருந்து சேவைகள் அனைத்தும் சீராக இடம்பெற்றபோதும் குறித்த பாதையூடான ஒரு பாடசாலை சேவை பேருந்து மாத்திரமே இயந்திரக் கோளாறு காரணமாக சேவையில் ஈடுபட முடியாது போனதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை மேற்படி மாண வர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எவ்விதத் தகவல்களும் தமக்கு கிடைக்கவில்லையெனவும் சுன்னாகம் பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து தமக்கு எவ்விதத் தகவல்களும் வழங்கப்படவில்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஏனைய பேருந்து சேவைகளை விட மாணவர்களுக்கான பேருந்து சேவையில் அதிககவனம் செலுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ள அவர், மாணவர்களின் பயணத்தில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து தமக்கு தகவல் வழங்கும் பட்சத்தில் உடனடி நடவடிக்கை எடுப்போம் எனவும் கரிசனையுடன் தெளிவு படுத்தியுள்ளனர். (அ-5)

## புதிய ஜனநாயக மா.லெனினிசக் கட்சி புரட்சிகர மேதினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையினை அங்கீகரித்து நியாயமான அரசியல் தீர்விற்கு வழிவகை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து புதிய ஜனநாயக மாக்கிச – லெனினிசக் கட்சி இம்முறை மே தினக்கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துகின்றது என அக்கட்சியின் வட பிராந்தியச் செயலாளர் செல்வம் கதிர்காமநாதன் தெரிவித்தார். மே தினக்கூட்டம் தொடர்பில் அக்கட்சியின் செயலாளர் மேலும் தெரிவிக்கையில்,

உற்பத்தி பொருளாதாரத்தை வீழ்த்தி நாசப்படுத்திய உலக மயமாதல் தாராள நுகர்வு பொருளாதாரத்தை தடுத்து நிறுத்த வேண்டும்.

அரிசி, சீனி, கோதுமை மா, பாண், மல்லி, மிளகாய், பால்மா உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் அன்றாட பாவனைப் பொருட்களின், எரிபொருட்களின் தொடரும் விலை அதிகரிப்பை உடன் நிறுத்த வேண்டும். மின்சாரம், போக்குவரத்து, தண் ணீர் உள்ளிட்ட சேவைக்கட்டணங்கள் அதி கரிக்கப்படுவதை உடன் நிறுத்த வேண்டும்.

அரசாங்க தனியார் துறையினருக்கு வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற சம்பள உயர்வை வழங்க வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினையின் தீர்வை மறுத்து பேரினவாத இராணுவ ஒடுக்குமுறையினை விரிவுபடுத்தி வருவதை உடன் நிறுத்த வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணத்தில் இம் முறை மே தினக் கூட்டத்தை இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள பட்டப்படிப்புக்கள் கல்லூரி வளாகத்தில் நடத்தவுள்ளதாக அக்கட்சியின் செயலாளர்மேலும் தெரிவித்தார். (அ-6)

## கும்பாபிஷேக மலர் வெளியீடு

சரசாலை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் மகாகும்பாபிஷேக மலர் வெளியீட்டு நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது

இம் மலர் வெளியீட்டு நிகழ்வில் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை, நயப்புரையை ஆசிரியர் கு.பாலசண்முகன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இன்றைய தினம் கும்பாபிஷேக நிறைவு நாளை முன்னிட்டு 1008 சங்காபிஷேகமும் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## யாழ்.மாநகர சபையால் புதிய சேவைகள் அறிமுகம்

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வங்கிகள், அரச அலுவலகங்கள், ஹோட்டல்கள், விடுதிகள், கல்விக் கூடங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியான காணிகள், வீடுகள் என்பவற்றில் துப்புரவு, சுத்திகரிப்பு மற்றும் காவல் கடமைகள், பாதுகாப்பு போன்ற தேவைகள் நாளாந்த, மாதாந்த, வருடாந்த, ஒப்பந்த அடிப்படையிலான முறையில் நியாயமான கட்டண அறவீட்டுடன் கூடிய சேவையை யாழ்.மாநகரசபை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மேலதிகமாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு யாழ். மாநகர சபை முதல்வர், ஆணையாளர் மற்றும் செயலாளருடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

021 222 2275 பொதுக் குறியீடு -150, சுத்திகரிப்பு பொறுப்பதிகாரி -077 4011133, 0718627640 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடக மேற்படி தகவல்களை தெரிந்து கொள்ள முடியும் என அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்



### நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாம் உண்டு

✦ பலவருடங்களாக பூட்டிக் கிடக்கும் அறை இருண்டு கிடக்கும். ஆனால் அந்த அறைக்குள் விளக்கினைக் கொண்டு வந்த உடனேயே இருள் மறைந்து ஒளிபரவும். அதுபோல இறைவனின் கருணைப் பார்வை பட்டவுடனேயே பல பிறவிகளில் செய்த பாவங்களும் உடனேயே நீங்கிவிடும்.

✦ இறைவனின் அருள் என்னும் காற்று இடையறாது வீசிக்கொண்டுதான் இருக்கிறது. வாழ்க்கை என்னும் கடலில் முன்னேற விரும்பினால் உனது மனமாகிய படகின் பாயை விரித்தால் கடலைக் கடந்து கரைசேரலாம்.


✦ இறைவனின் திருப்புகழைப்பாடும் போது கைகளை அசைத்துக் கொண்டும் இசைத்துக்கொண்டும் பாடுவாயாக. அப்போது பாவம் என்னும் பறவைகள் பறந்தோடிப் போகும்.

✦ சேற்றில் புரள்வதுதான் குழந்தையின் இயல்பு. ஆனால் தாய் குழந்தையை அப்படியே விடாமல் குளிக்கச் செய்து சோறூட்டுவாள். அதுபோல பாவம் செய்வது மனித இயல்பு என்று கடவுள் விட்டுவிடுவதில்லை. கடைத்தேற்றும் வழிமுறைகளை அருள்செய்கிறார்.

✦ நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாமே உண்டு. நம்பிக்கை இல்லாதவனுக்கோ ஒன்றுமே இல்லை. நம்பிக்கைதான் வாழ்வு. வேண்டாத சந்தேகமோ மனிதனை அழிவுப்பாதையில் கொண்டு சென்று விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் - சிம்பாவே டெஸ்ட் தொடர் சமநிலை



சிம்பாவே அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் பங்களாதேஷ் அணி 143 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. தனிநபராக போராடிய சிம்பாவே வீரர் ஹாமில்டன் மசகட்சாவின் சதம் வீணானது. இதன்மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என சமநிலை அடைந்தது.

சிம்பாவே சென்றுள்ள பங்களாதேஷ் அணி, இிரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதல் டெஸ்டில் வெற்றி பெற்ற சிம்பாவே அணி 1-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது டெஸ்ட் ஹராரேயில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாவே முதலில் களத்தடுப்பை தேர்வுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் முதல் இன்னிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 391 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ரஹீம் 60, குசைன் 77, இக்பால் 49 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே 282 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் சிகும்ரா 86 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த பங்களாதேஷ் அணி 9 விக்கெட்டுக்கு 291 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. 401 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற வலுவான இலக்கோடு இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த சிம்பாப்வே அணி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 257 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 143 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஹாமில்டன் மசகட்சா 111 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார். ஆட்டநாயகன் விருதை பங்களாதேஷ் அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிமும் தொடர் நாயகன் விருதை அந்நாட்டின் ரோபியுல் இஸ்லாமும் வென்றனர்.

இவ்விரு அணிகள் மோதும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் மே 3ஆம் திகதி புலவாயோவில் நடைபெறவுள்ளது.

இன்றைய ஆட்டங்கள்

SUNRISERS Vs MUMBAI INDIANS பி.ப 4 மணி

DELHI DAREDEVILS Knight Riders இரவு 8 மணி

# எட்டு அணிகள் மோதும் சம்பியன்ஸ் கிண்ணம்

'இங்கிலாந்தில், எதிர்வரும் ஜூன் 6-23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் எட்டு அணிகள் இரண்டு பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடுகின்றன.

லீக் சுற்றின் முடிவில், ஒவ்வொரு பிரிவிலும் தலா முதலிரண்டு இடங்களை பிடிக்கும் அணி கள், வரும் ஜூன் 19, 20ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள அரையிறுதி யில் விளையாடும். இறுதியாட்டம் ஜூன் 23ஆம் திகதி பர்மிங்காமில் நடைபெறவுள்ளது.

"ஏ" பிரிவில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இலங்கை, நியூசிலாந்து அணிகளும், "பி" பிரிவில் இந்தியா, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் அணிகளும் இடம்பெற்றுள்ளன.




# தாக்கப்பட்டார் காற்பந்துவீரர்

ரஷ்யாவின் செச்சன்யா மாகாணத்தின் குரோசினி நகரில் ரஷ்ய இளையோர் லீக் காற்பந்துபோட்டி நடைபெற்றது. அந்த போட்டியில் துணை நடுவராக இருந்த முசாகடிரோவ்வை விளையாட்டு வீரர் இல்லியா கிரிஃமர் (18) மரியாதை குறைவாக பேசியுள்ளார்.

இதனால் ஆத்திரமடைநத நடுவர், வீரரை சர மாரியாக தாக்கினார். அவரை தொடர்ந்து எதிர் அணி வீரர்களும் கிரிச்மரை தாக்கினர். இதையடுத்து கிரிஃமரை அவரது அணி வீரர்கள் தாக்குதலில் இருந்து காப்பாற்றினர். இதனால் விளையாட்டு மைதானம் போர்களம் போல் காட்சியளித்தது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து அவர் காற்பந்து போட்டி நடுவராக பணியாற்ற செச்சன்யா காற்பந்து அமைப்பு வாழ்நாள் தடை விதித்துள்ளது.

# சிக்ஸரில் சதமடித்தார் ரோகித் சர்மா



மும்பை இந்தியன்ஸ் அணியின் ரோகித் ஷர்மா பஞ்சாப்புடனான ஆட்டத்தில் 16ஆவது ஓவரில் மன்பிரீத் கோனி வீசிய பந்தை எல்லைக்கோட்டுக்கப்பால் அனுப்பினார். இது அவர் அடித்த 100ஆவது சிக்சராகும். இதன மூலம் ஐ.பி.எல். போட்டியில் 100 சிக்சரை கடந்த 3ஆவது வீரர் என்ற பெருமையை பெறநார்.

ஐ.பி.எல் போட்டியில் இது வரை 87 ஆட்டங்களில் விளையாடியிருக்கும் ரோகித ஷர்மா மொத்தம் 105 சிக்சர்கள் விளாசி இருக்கிறார். அதிக சிக்சர் அடித்தவர்கள் பட்டியலில் பெங்களூர் வீரர் கெய்லுக்கு (165 சிக்சர்) அடுத்த இடத்தை ரோகித் ஷர்மா பிடித்துள்ளார்.

கொல்கத்தாவுக்கு எதிரான ஆட்டத்தின்போது சென்னை வீரர் சுரேஷ் ரெய்னா 100 ஆவது சிக்சர் அடித்தார். அவரை ரோகித் ஷர்மா பின்னுக்கு தள்ளினார்.

# இங்கிலாந்து பிராந்திய அணிக்காக விளையாட விரும்பும் கெய்ல்



இங்கிலாந்து பிராந்திய அணிகளுக்கு இடையிலான இருபதுக்கு-20 கிரிக்கெட் தொடரில் சமர்செட் அணியில் விளையாடுவதற்கு மேற்கிந்திய தீவுகளின் அதிரடி துடுப்பாட்டக்காரர் கிறிஸ் கெய்ல் விருப்பம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச போட்டி அட்டவணைகள், தமக்கு இடம்கொடுக்கும் பட்சத்தில், சமர்செட் பிராந்திய அணியில் விளையாட ஆர்வத்துடன் இருப்பதாக கிறிஸ் கெய்ல் குறிப்பிட்டுள்ளார்.

சமர்செட் பிராந்திய அணிக்காக விளையாடும் வெளிநாட்டு வீரராக இணைந்துகொள்ளும் நோக்கிலான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட கிறிஸ் கெய்ல் விருப்பம் தெரிவித்திருந்தார்.

எனினும் அந்த சந்தர்ப்பத்தில், மேற்கிந்தியத் தீவுகள் கட்டுப்பாட்டுச் சபையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் கிறிஸ் கெய்ல் தேசிய அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

தற்போது மீண்டும் தேசிய அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதால், சமர்செட் பிராந்திய அணியில் முழுமையான ஈடுபாட்டுடன் விளையாட முடியாத நிலை கிறிஸ் கெய்லுக்கு ஏற்பட்டுள்ளது.

# பணத்திலே பறக்கும் நடன மாதுகள்



ஐ.பி.எல். போட்டியில் ஒவ்வொரு ஆட்டத்திலும் வீரர்களை உற்சாகப்படுத்தவும் போட்டியை காணவரும் ரசிகர்களைக் குளிர்மைப்படுத்தவும் அதிக அளவிலான பணம் கொட்டப்பட்டு நடன மங்கைகளின் நடன நிகழ்வுகள் இடம்பெற்றுவருகின்றன. இந்நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பெங்களூர் ரோயல் சலஞ்சேர்ஸ் - ராஜஸ்தான் ரோயல்ஸ் மோதிய ஆட்டத்தில் நடன அழகிகளின் கண்ணைப் பறிக்கும் நடனத்தின் ஒரு காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையிடம் பணிந்தது புனே

புனே அணிக்கு எதிரான போட்டியில் சென்னை அணி 38 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் 42ஆவது லீக் போட்டி நேற்று இரவு 8 மணிக்கு புனேயில் தொடங்கியது.

இதில் புனே வாரியர்ஸ் சென்னை சுப்பர்கிங்ஸ் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை அணித்தலைவர் தோனி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.


தொடக்க வீரர் ஹசி 5 ஓட்டங்களில் ரிச்சார்ட்சன் பந்தில் ஸ்டம்பை பறிகொடுத்தார். அடுத்து சகாவுடன் ரெய்னா ஜோடி சேர்ந்தார். சகா 13 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ராகுல் சர்மா பந்தில் எல்.பி.டபிள்யூ ஆகி வெளியேறினார்.

3ஆவது விக்கெட்டுக்கு ரெய்னாவுடன் பத்ரிநாத் ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தனர். ரெய்னா சிறப்பாக விளையாடி 42 பந்தில் அரை சதம் அடித்தார். பத்ரிநாத் 34 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார்.

அப்போது சென்னை அணி 15.3 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 103 ஓட்டங்கள் எடுத்திருந்தது. 4 ஆவது விக்கெட்டுக்கு ரெய்னாவுடன் தோனி ஜோடி சேர்ந்தார். தோனி புனே வாரியர்ஸ் அணியின் பந்து வீச்சை துவம்சம் செய்தார்.

அவர் 16 பந்தில் 3 பவுண்டரி, 3 சிக்சருடன் 45 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் சென்னை அணி 20 ஓவர் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 164 ஓட்டங்கள் எடுத்தது. ரெய்னா 50 பந்தில் 5 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் 63 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

165 ஓட்டத்தினை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய புனே அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 127 ஓட்ட மாத்திரம் பெற்றது. பந்துவீச்சில் சர்மா 3 விக்கெட்டினை கைப்பற்றினார். போட்டியின் ஆட்ட நாயகனாக சென்னை அணியின் தோனி தெரிவானார்.





வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற எல்லே சுற்றுப் போட்டிகளில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியின் பெண்கள் அணி முதலாமிடத்தைப் பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மாவட்டத்தில் நடைபெறும் எல்லே போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற எல்லே சுற்றுப் போட்டியில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியின் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவினர் முதலிடம் பெற்று சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மாவட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

## கூழாவடி பகுதியில்...

யுத்தம் முடிபுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் மக்களுடைய வீடுகளில் இருந்த ஒரு தொகுதி இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறிச் சென்றிருந்தனர்.

இருப்பினும் இன்னும் பல இடங்களை விட்டு இராணுவத்தினர் வெளியேறாமல் இருப்பதோடு மக்களுடைய வீடுகளை விட்டு விலகிச் செல்லாமலும், மக்களுடைய வீடுகளைக் கையளிக்காமலும் நிலைகொண்டு உள்ளனர். இதனால் அதிகமான மக்கள் இன்னமும் தமது வீடுகளுக்கு செல்லாமலும், வியாபார நிலையங்களை ஆரம்பிக்க முடியாமலும் உள்ளனர்.

இதேபோன்று கடந்த 1996ஆம் ஆண்டு ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள கூழாவடி பகுதியிலும் சுமார் ஒரு ஏக்கர் 31 பேர்ச் அளவுள்ள நிலத்தினை உள்ளடக்கிய 5 குடும்பங்களின் வீடுகளைக் கையகப்படுத்தி அங்கு நிலைகொண்ட இராணுவத்தினர் இன்னும் அவ் வீடுகளுக்குச் சொந்தமான மக்களிடம் கையளிக்காமல் அங்கேயே முகாமிட்டு இருந்து வருகின்றனர்.

எனினும் மேற்படி பகுதியினை விடுவிக்கக் கோரி குறித்த 5 குடும்பங்களும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டபோதும் அது சாத்தியப்படவில்லை.

இந்நிலையில் கடந்த 2 தினங்களுக்கு முன்பாக யாழ்.மாவட்டச் செயலகத்தில் உள்ள காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகத்தின் ஊடாக மேற்படி முகாம் அமைந்துள்ள காணியினை இராணுவத்தின் தேவைகளுக்காக சுவீகரிப்பதற்கான அறிவுறுத்தல் ஒட்டப்பட்டுள்ளது. (எ-6)

## நில அபகரிப்புக்கு...

பிரதிகளும் இதில் கலந்து கொள்வார்கள்.

தமிழ்மக்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிராகவும், தம்காணிகளில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள் மீளக்குடியமர்த்தப்படுவதற்காகவும், தமிழ் பேசும் மக்களின் வாழ்வுரிமைக்காகவும் எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடி தீர்மானங்களை எடுப்பதற்காக இவ் ஒன்றுகூடல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

அழைக்கப்பட்டவர்கள் மட்டும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் பணிவாக கேட்டுள்ளார். (எ-11)

## ஒருமித்த சக்தியாக ஓரணிதிரண்டு உரிமைக்காகப் பயணிப்போம்

### ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல் மே தினச் செய்தி

(யாழ்ப்பாணம்)

உழைக்கும் வர்க்கம் தமது உரிமைக்காகப் போராடிப் பெற்ற வெற்றியின் சாட்சியமாய் உலக தொழிலாளர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. சுயலாப அரசியலுக்காகவோ அல்லது வேற்றுமை நோக்கங்களுக்காகவோ அன்றி உன்னத நோக்குடன் தாம் சிந்திய வியர்வைக்கும் - உழைப்புக்கும் உரிமை கேட்டு ஓரணி திரண்ட தொழிலாளர்களின் உரிமை தினம் இன்றாகும்.

இவ்வாறு மே தினத்தை ஒட்டி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் (கமல்) விடுத்த மேதினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

அமெரிக்காவின் சிக்காக்கோவில் அடக்கி ஒடுக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கம் 8 மணி நேர வேலை கோரி முதலாளித்துவத்திற்கு எதிராக கிளர்ந்தெழுந்து இரத்தம் சிந்தி போராடியதன் விளைவே இன்று உலக ரீதியாக தொழிலாளர்களை தலை நிமிர்வு வாழ்க்கைக்கு இட்டுச் சென்றுள்ளது.

இதேபோன்றே எமது தேசத்திலும் உரிமைக்கான போராட்டங்கள் பல்வேறு பரிணாமங்களிலும் தொடர்கின்றது. அரசியலுரிமைக்கான போராட்டம், வாழ்வுரிமைக்கான போராட்டம் என பல்வேறுபட்ட பரிணாமங்களிலும் எமது உரிமைக்கான போராட்டம் தொடர்கின்றது.

வலி சுமந்த எம் தேசத்தில் அக்கினிப் பிரசவமாய் பெற்றெடுத்த இயல்புச் சூழலைப் பாதுகாப்பதற்கும், எமது மக்களிற்கானவாழ்வுரிமையை பெற்றெடுக்கவும் நடைமுறைக்குச் சாத்தியமான வழியில் உழைத்து வருகின்றோம். இலங்கையில் எப்போதுமில்லாத பெரும்பான்மை பெற்ற, பலம் பொருந்திய அரசின் பங்காளிகளான நாம் எமது மக்களிற்கான உரிமைகளை நிச்சயம் வென்றெடுப்போம் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

வடக்கில் மீள்குடியேற்றத்தைச் 

சாத்தியமாக்கி தமிழ் மக்களின் வாழ்வில் ஒளியேற்றி வடக்கின் வசந்தம் வீசச்செய்த வரலாற்றுச் சாதனை எமது கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நடைமுறைக்குச் சாத்தியமான தீர்க்கதரிசனமான செயற்பாடுகளினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆசியுடன் நிகழ்ந்தேறியுள்ளது. (ந)


யாழ்ப்பாணம் மாநகர சபை
அறிவித்தல்

எமது சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்களை பகிரங்க ஏலம் மூலம் குத்தகைக்குப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் தங்கள் பெயர்களை 2013.05.02 தொடக்கம் 2013.05.10 திகதி வரையான காலப்பகுதிக்குள் எமது சபையில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். (பதிவுக் கட்டணம் - 570/= வற் உட்பட)

மாநகர சபை
யாழ்ப்பாணம்
2013.04.30 (சி-3163) ஆணையாளர்


## பாராளுமன்ற அங்கத்...

கூட்டம் மாலை 6 மணிவரை இடம்பெறும் என அக் கட்சியினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியும் மே தினக் கூட்டத்தை ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப்படிப்புகள் கல்லூரி வளாகத்தில் நடத்துகின்றது.

பிற்பகல் 2 மணியளவில் சுன்னாகம் சந்தை வளாகத்திலிருந்து சைக்கிள் பேரணியுடன் ஆரம்பமாகும் மே தின நிகழ்வுடன் பட்டப்படிப்புக்கள் கல்லூரி வளாகத்தினுள் பிற்பகல் 4 மணியளவில் பொதுக் கூட்டமும் இடம்பெறும் என அக்கட்சியினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கிளிநொச்சியில் மே தினக் கூட்டத்தை நடத்துகின்றது. கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் என அக்கட்சியினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபை மண்டபத்தில் மே தினக் கூட்டத்தை இன்று காலை 9 மணிக்கு நடத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு எதிரானோர் மீது ...

அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் ,எச்சரிக்கைகள் மற்றும் தடுத்து வைத்தல் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் மாற்றுக் கருத்துக்களையும் விமர்சனங்களையும் வெளியிடுவோர் மீது அரசாங்கத்தினால் அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டு வருவதாக இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள், நீதித்துறையைச் சேர்ந்தவர்கள், சட்டத்தரணிகள், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் எதிர்க் கட்சி அரசியல்வாதிகள் போன்றோர் அரசாங்கத்தால் இவ்வாறு அடக்குமுறைக்கு உட்படுத்தப் படுவதாக இவ் அறிக்கை தெரிவித்துள்ளது.

இலங்கையில் மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவோர் மீது அரசாங்கத்தால் கடும் அடக்கு முறைகள் பிரயோகிக்கப்பட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய பிரதிப் பணிப்பாளர் பொலிட்ரஸ்கொட் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் கடந்த சில ஆண்டுகளாக விமர்சனப் பாங்கான கருத்துக்கள் வெளிவருவதில் வீழ்ச்சியை அவதானித்து வருவதாக குறிப்பிட்ட அவர்,

அரசாங்கத்திற்கு எதிராக கருத்துக்களை வெளியிட அதிகமானவர்கள் அஞ்சுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற போரில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப் பட்டதைத் தொடர்ந்து அரசாங்கம் தனது அதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாடு நடைபெறுவதற்கு முன்னதாக இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகளை மேம்படுத்துமாறு சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் இதுவரை காத்திரமான விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் சர்வதே சட்டங்களுக்கு அமைய நம்பகமானதும்,சுயாதீனமானதுமான விசாரணைகளை நடத்த அரசாங்கம் தவறியுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய பிரதிப் பணிப்பாளர் பொலிட்ரஸ்கொட் குற்றம் சுமத்தியுள்ளார்.

அதேவேளை, இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச மன்னிப்புச் சபை பின்வரும் கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளது.

மக்களின் கருத்துச் சுதந்திரம், அமைதியாக ஒன்றுகூடுவதற்குள்ள சுதந்திரம், சங்கமாக இணைந்து செயற்படுவதற்குள்ள உரிமை போன்றவற்றை அரசாங்கம் மதித்து பாதுகாக்க வேண்டும்.

அத்துடன், மனித உரிமை மீறல்களில் ஈடுபடுபவர்கள் எவராக இருந்தாலும், அவர்களுக்கு எதிராக சர்வதேச தரத்திலான நியாயமான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதை இலங்கை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளது. (எ-11)

## பொதுநலவாய ...

அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டை வேறு நாட்டுக்கு மாற்றுவது தொடர்பில் எவ்வித முடிபும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையிலேயே கொழும்பில் எதிர் வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொது நலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கு முன்னதாக இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள் மற்றும் மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பில் மாநாடு ஒன்றை லண்டனில் நடத்தும் திட்டத்தை பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா பரிந்துரைத்துள்ளார்.

எதிர்வரும் யூன் மாதம் நடத்தப்படலாம் எனக் கருதப்படும் இந்த மாநாட்டுக்கு இலங்கை அரச தரப்புப் பிரதிநிதி ஒருவரும் கலந்து கொள்வதற்கான சம்மதத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்து பெற்றுள்ளதாக கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் குறித்து கவலைகொண்டுள்ள நாடுகளை திருப்திப் படுத்தும் நோக்குடனேயே ,இந்த மாநாட்டை நடத்தும் திட்டத்தை அவர் பரிந்துரைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகமாக பதவி ஏற்பதற்கு முன்னதாக பிரித்தானியாவுக்கான இந்தியத் தூதுவராக கமலேஷ்சர்மா பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## வடிக்குத் தாக்கல் ...

மேற்கொண்டிருந்தனர்.

இந்த பதிவு நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளை வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## வெளிநாடுகளின் ...

ஏனைய நாடுகளின் இறையாண்மையை நாம் மதிப்பதால் அந்நாடுகளின் உள்விவகாரங்கள் தொடர்பில் நாம் எவ்வித கருத்துக்களையும் வெளியிடுவதில்லை .

அதுபோலவே எமது உள்விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிட வேண்டியதில்லை என்றே அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

இந்நிலையில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்ற போர்வையில் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாட்டு தலையிடுவது எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## ஷிராணிக்கு ...

அதிபரினால் இந்த விசேட மேன் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த விசேட மேன்முறையீட்டு மனு நீதியரசர்களான சலீம் மர்சூக், சந்தியா ஹெட்டிகே மற்றும் ஈவா வனசுந்தர ஆகிய நீதியரசர்கள் குழு முன்னிலையிலேயே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (எ-11)


தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்கள் சுயமாக கற்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட நூலும் DVDயும் விற்பனையாகிறது.

**புலமைப்பரிசில் வழிகாட்டி விளக்கம் 2013 - 2014**

-ரத்தாள் I இல் 100% மதிப்பெண்களைப் பெறுவதற்காக 1200 வினாக்களும் 18 மணிநேர DVD ஊடான விரிவான கற்பித்தல்

**நூல் + DVD = 850/-**

**கிடைக்கும் இடங்கள்:-**

1. அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம்
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
3. சிறிலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்
4. துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்
5. சிறி முருகன் புத்தகசாலை - பண்டத்தரிப்பு
6. சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை - நெல்லியடி
7. சாளினி புத்தகசாலை - அச்சுவேலி
8. பொதிகை புத்தகசாலை - சாவகச்சேரி
9. புதிய அருள்நாயகி புத்தகசாலை - கொடிகாமம்

(C-3162)

**கல்வி மேம்பாட்டிற்குரியவை**



**போட்டோக் கொப்பி**

இருபக்கம் : 2/= மட்டும்.

கலர்பிறிண்ட் : 10/= முதல்

யாழில் கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்

666, கே.கே.எஸ் வீதி, யாழ். 0771974875

**சங்கம் பதிவு செய்தல் தொடர்பான கலந்துரையாடல்**

இடம்:- பிரதேச சபை மண்டபம் (கரைச்சி)

காலம்:- 03.05.2013

நேரம்:- மு.பகல் 10.மணி(வெள்ளிக்கிழமை)

மேற்படி கலந்துரையாடல் நடைபெறவுள்ளதனால் பதிவினை மேற்கொண்ட அனைத்து முச்சக்கர வண்டி உரிமையாளர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

- நிர்வாகம்

**கிளி/மாவட்ட வாடகை முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் கூட்டுறவுச்சங்கம்**

(C-3146)

Alpha Omega International நிறுவனத்தில்

**உடனடி வேலை வாய்ப்பு**

மலர்ந்துள்ள இவ்வருடத்தில் உங்கள் கனவு நனவாக வேண்டுமா? இதோ நிரந்தர தொழிலைப் பெற்று உங்கள் எதிர்காலம் நோக்கி பயணிக்க வேண்டுமா? மாதமொன்றுக்கு 100,000 ரூபா சம்பாதிப்பை பெற விரும்புகிறீர்களா? தொடர்பு கொண்ட உடனேயே வேலை.

1. மேற்பார்வையாளர் (Supervisor)
2. உதவி முகாமையாளர் (Assit.Manager)
3. முகாமையாளர் (Manager)
4. குறைந்த பட்சம் மாதமொன்றுக்கு 30,000 - 80,000 சம்பாதிப்பு
5. பதவி உயர்வின்போது சம்பள உயர்வு

முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள அலுவலகங்களிலும் வேலை வழங்கப்படும்.

**தகைமை: O/L, தங்குமிடம், மருத்துவம், இலவசம்**

**தொடர்புகளுக்கு: 0774414440 , 0773434236**

(C-3151)





(C-3164)


**வீடு வாடகைக்கு தேவை**

குளியல் அறையுடன் கூடிய யாழ்ப்பாணம், நல்லூர் அண்டிய பிரதேசங்களில் வீடு வாடகைக்கு தேவை.

**0774080827, 0777110117**

(2497)

**படிவம்**

✪ கல்வி நிர்வாக சேவை வகுப்பு III மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை

✪ கல்வி நிர்வாக சேவை வகுப்பு III திறந்த போட்டிப் பரீட்சை

ஆகிய விண்ணப்பங்களை பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் ஏனைய பிரபல்ய புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

எஞானம்ஸ் பிறிண்டேர்ஸ்

கந்தர்மடம் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(2505)

**Direct Marketing International Pvt (Ltd)**

**வேலைவாய்ப்பு**

**(Management Trainees -2013)**

**25 People Needed Imediatly**

சர்வதேச ரீதியில் இயங்கும் நிறுவனத்திற்கும் அதன் வட மாகாண கிளைகளுக்கு(யாழ்ப்பாணம்,வவுனியா,கிளிநொச்சி ,முல்லைத்தீவு, மன்னார்) ஆகிய பிரதேசங் களிலிருந்து O/L , A/L படித்தவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

✪ Trainee Marketing Executive,

✪ Sales Representatives.

✪ Innvontary Customer Service.

பயிற்சியின்போது fixed income Package ஆக 12,000–15,000 பெறலாம்.

குறிப்பு: தங்குமிட வசதிகள் உண்டு; வயதெல்லை: 18-35

தொடர்புகளுக்கு: 0775566224, 0217200867, 0755049038

(C-3150)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org